# உதயன்




www.onlineuthayan.com

பக்கங்கள்:
34 + கல்விச் சிறப்பிதழ் X

சுடர் 27 கதிர் 284 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 20 புதன்கிழமை (05/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


## இந்தியாவின் பூண்டி மாதா ஆலயத்துக்கு யாத்திரை சென்ற இலங்கையர் மீது பாய்ச்சல்

### அவர்கள் அங்கிருந்து உடன் வெளியேற்றம்

சென்னை, செப்.5

இந்தியாவின் புகழ்பெற்ற பூண்டி மாதா ஆலயத்துக்கு இலங்கையில் இருந்து யாத்திரை சென்ற சிங்களவர்கள் 184 பேர் அங்கு எழுந்த கடும் எதிர்ப்பை அடுத்து அங்கிருந்து வெளியேற்றப் பட்டனர். இவர்களைப் பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்குத் தமிழகப் பொலிஸார் திருச்சி விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்றவேளை காட்டூரில் வைத்து இவர்கள் பயணித்த பஸ்கள் மீதும் கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தாக்குதலின் பின்னர் இவர்கள் அனைவரும் பொலிஸாரின் உதவியுடன் திருச்சி

பார்க்க பக்கம் 4

### இலங்கை அலுவலகங்களுக்கு விசேட பாதுகாப்பு

சென்னை,செப் 5

சென்னை மகாபோதி சங்கத்தின் தலைமையகம் உள்ளிட்ட இலங்கை அலுவலகங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இந்

பார்க்க பக்கம் 4

# பான் கீ மூனை 20 ஆம் திகதி சந்திக்கிறார் மு.க.ஸ்ராலின்



## டெசோ தீர்மானங்களை கையளிப்பார்



சென்னை, செப்ரெம்பர் 5

இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மு.க.ஸ்ராலின் தலைமையிலான குழுவொன்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ – மூனை செப்ரெம்பர் 20இல் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது அண்மையில் சென்னையில் நடந்த தமிழீழ ஆதரவாளர்களின் அமைப்பின் 'டெசோ' மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படவுள்ளன.

இதேபோல், மு.க.ஸ்ராலின் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையாளரிடமும் இந்தத் தீர்மானங்களைக்

பார்க்க பக்கம் 4


களனி கங்கையில் தங்கப் படிமங்கள் இருப்பது புவிச் சரிதவியல் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2

சுவிஸ் வங்கியில் உள்ள இலங்கையர்களின் இரகசிய கணக்குகளை இனங்காண முடியாமல் திண்டாடும் மத்திய வங்கி. 5

காஷ்மீரில் சீனா ஆக்கிரமித்துள்ள தனது நிலப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு இந்தியா வலியுறுத்தியுள்ளது. 8

ஒலியைவிட வேகமாகப் பயணிக்கக் கூடிய விமானம் பரிசீலிக்கிறது நாசா. 9


## ஐ.நா. ஆணையர் நவிப்பிள்ளை வடக்கு - கிழக்குக்கும் செல்வார்

கொழும்பு,செப் 5

இலங்கைக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி வருகை தரவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை (நவிப்பிள்ளை), தனது பயணத்தின் போது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கும் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

முன்னரான தனது நிகழ்ச்சி நிரலில் அவர் கொழும்பில் தங்கியிருந்தே அனைவரையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது அவர் போர் நடந்த இரு மாகாணங்களுக்கும் செல்வதற்கான நிகழ்ச்சி நிரலை தனது பயணத்தில் சேர்த்துள்ளார் எனத் தெரியவருகிறது.

தனது குழுவினருடன் அவர் சுயாதீனமாகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று அங்கு தமிழ் மக்களைச் சந்தித்து உரையாடி அவர்களின் நிலைமைகள் குறித்து நேரில் கண்டறிவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விசேடமாக, வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்கள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து

பார்க்க பக்கம் 4

## வடக்கு – கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் மீது திணியோம்

### அம்பாறையில் சம்பந்தன் எம்.பி.

அம்பாறை, செப்.5

''வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படுகின்றபோது முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கும், உரிமைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். அதுவரை வடக்கு, கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் மீது திணிக்கமாட்டோம்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மருதமுனையில் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான மருதமுனையைச் சேர்ந்த துவான் புணைட்டை ஆதரித்து மருதமுனை கடற்கரை

பார்க்க பக்கம் 4

## இலங்கை படைகளுக்கு பயிற்சி அளிக்கக் கூடாது

### அந்தோனியிடம் தி.மு.க. வலியுறுத்தல்

சென்னை,செப் 5

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனியிடம் தி.மு.க. மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் வலியுறுத்தினர்.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி மக்களவையிலும், மாநிலங்களவையிலும் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்தனர்.

பார்க்க பக்கம் 4

## விடுதலைப் போர் மீண்டும் வெடிக்கும்

### கவிஞர் காசி ஆனந்தன் முழக்கம்



சென்னை, செப்.5

ஈழத்தில் மீண்டும் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் மிகவிரைவில் வெடிக்கும் - என்று உணர்ச்சி பொங்கக் கூறினார் ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன்.

பார்க்க பக்கம் 4

## வன்னிப் போரின் போது கைவிடப்பட்ட வாகனங்களை கடத்தியவர்கள் கைது

கிளிநொச்சி, செப்.5

கிளிநொச்சியில் போர்க் காலத்தில் கைவிடப்பட்டு மாவட்டச் செயலகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த வாகனங்களைக் கடத்திச் சென்ற பலர் கைதுசெய்யப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சியில் போரின் போது கைவிடப்பட்டு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் பராமரிக்கப்பட்டு

பார்க்க பக்கம் 4

## வேகமாக வந்த ரயில் மோதி வவுனியாவில் ஒருவர் சாவு



வவுனியா, செப் 5

வவுனியா - கொழும்பு ரயிலில் மோதுண்ட ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்று வவுனியா ரயில் நிலையத்தில் நடைபெற்றது.

நேற்று மாலை 3.30

பார்க்க பக்கம் 4

## சப்ரகமுவ, கிழக்கு மாகாணங்களில் தமிழர் இருப்பை உறுதிப்படுத்துங்கள்

### மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு,செப் 5

இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற தமிழர்கள் சேவல் சின்னத்துக்கும், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற தமிழர்கள் வீட்டுச் சின்னத்துக்கும் வாக்களித்து, நமது இனரீதியான இருப்புகளை உறுதி செய்துகொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், மக்கள் கண்காணிப்பு குழுவின் அழைப்பாளருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது:-

மலையக தமிழ் மக்கள் குறைந்தளவு வாக்குப் பலத்தை கொண்ட மாவட்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 வயதுச் சிறுமியுடன் உறவு வைத்த இளைஞனுக்கு 10 ஆண்டுகள் சிறை

யாழ்ப்பாணம், செப். 5

வயது குறைந்த பெண்ணுடன் பாலியல் புணர்வில் ஈடுபட்ட குற்றத்துக்காக 29 வயது ஆணுக்கு மாலைதீவு நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அதேபோன்று பருவ வயதுக்கு முன்னரே தன்னிலும் வயது கூடிய ஆணுடன் பாலுறவில் ஈடுபட்ட 16 வயதுச் சிறுமிக்கு 100 கசையடிகள் கொடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் 3 மாதங்களுக்கு வீட்டுக் காவலில் வைக்குமாறும் பணித்துள்ளது.

நாட்டின் தலைநகர் மாலேயில் இருந்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிராமத்தில் இவர்கள் இருவரும் பாலுறவில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டதாக மாலைதீவு ஊடகம் தெரிவித்தது. எனினும் எப்போது இவர்கள் உறவுகொண்டார்கள் என்பதைப் பற்றிய தகவல் எதுவும் நீதிமன்றில் தெரிவிக்கப்படவில்லை.

விசாரணையின் முடிவில் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டமையால் கடுமையான தண்டனைகளை நீதிமன்றம் வழங்கியது.

பெண் சிறுமியாகக் காணப்படுவதால் அவர் 18 வயதை அடைந்த பின்னர் இரு தண்டனைகளும் அவருக்கு வழங்கப்படவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனினும் பாலியல் பிறழ்வுக் குற்றங்களுக்காகப் பெண்களைப் பகிரங்கமாகத் தண்டிக்கும் முறைமையை ஒழிக்கும்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி நவிப் பிள்ளை (நவநீதம்பிள்ளை) மாலைதீவு சென்றிருந்தபோது அந்த நாட்டு அரசிடம் அண்மையில் வலியுறுத்தியிருந்தார். (உ-01)

# துமிந்தவைக் கைது செய்ய பிடியாணை தேவையில்லை

## கொழும்பு மேலதிக நீதிவான் அறிவிப்பு

கொழும்பு,செப் 5

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவைக் கைது செய்வதற்குப் பிடியாணை தேவையில்லை எனக் கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸ் திறந்த மன்றில் நேற்று அறிவித்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மீண்டும் இடம்பெற்றபோது நீதிவான் இதனைக் குறிப்பிட்டார். துமிந்த சில்வாவுக்குச் சுயநினைவு இல்லாமற்போனமை தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியங்களையோ அல்லது மருத்துவ அறிக்கைகளையோ இரகசியப் பொலிஸார் நீதிமன்றில் முன்வைக்கவில்லை எனப் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் உறவினர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதன் காரணமாகச் சர்வதேசப் பொலிஸார் ஊடாக அவரைக் கைது செய்வதற்குப் பிடியாணை பிறப்பிக்குமாறு சட்டத்தரணி நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, துமிந்த சில்வாவுக்குச் சுயநினைவு இல்லாமற்போனமை தொடர்பிலான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் குறிப்பிட்டது. துமிந்த சில்வா சிகிச்சைபெறும் மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையின் விசேட சத்திர சிகிச்சை நிபுணர் கீத் நோவினால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் குறிப்பிட்டது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பிலான பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான துமிந்த சில்வாவின் ஆதரவாளரான பிரியந்த ஜனக்க பண்டார என்பவர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை எனவும், அவர் ஆயுதக்குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் நவகம பொலிஸார் தமக்குத் தெரிவித்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியது.

இதேவேளை, துமிந்த சில்வாவுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய இறுதி சத்திர சிகிச்சையை மேற்கொண்ட பின்னர் வைத்தியர்களின் ஆலோசனைப்படி அவரை இலங்கைக்கு அழைத்து வந்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியும் என அவர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய குறிப்பிட்டார்.

குறித்த விடயங்களை ஆராய்ந்து கொழும்பு மேலதிக நீதிவான் இலங்கைப் பொலிஸாரின் வேண்டுகோளுக்கமைய சர்வதேச பொலிஸாரின் ஊடாக துமிந்த சில்வாவை கைது செய்வதற்கான பிடியாணையைப் பிறப்பிக்க முடியுமெனக் கூறினார்.

நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட 16 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நடைபெறுமெனவும் அறிவித்தார்.(த)

## பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ் சாரதி, நடத்துநருக்கு சீருடை

கொழும்பு,செப் 5

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் பஸ்களில் கடமை புரியும் சாரதி மற்றும் நடத்துநருக்குப் புதிய சீருடை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

போக்குவரத்தில் உள்ள சிக்கல்கள் மற்றும் பொறுப்புணர்வுகளுக்கு அமைய இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சபை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 100 புதிய பஸ்கள் பாடசாலை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் நிகழ்வு நாராஹென்பிட்டி போக்குவரத்துச் சபையில் இடம்பெறவுள்ளது. (த)

## களனி கங்கையில் தங்கப் படிமங்கள்

களனி கங்கையின் மேலும் சில பகுதிகளில் தங்கப் படிமங்கள் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கங்கையின் பூகொடை பிரதேசத்தின் மேல் பகுதிகளில் தங்கப் படிமங்கள் பெறக்கூடிய இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.ஜீ.விஜயானந்த குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் தமது அதிகாரிகளை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளில் இந்தத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் அகழ்வு நடவடிக்கைகளுக்கான அனுமதியை வழங்க முடியாதெனவும் வானிலை வழமைக்குத் திரும்பியதும் குறித்த பகுதி மக்கள் அகழ்வில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவர் எனவும் பணியகம் அறிவித்துள்ளது. (த)

## யாழ்.ரோட்டறிக் கழகத்தின் சிறப்புக் கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணம் ரோட்டறிக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 'சேவைகள் ஊடான சமாதானம்' எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு நாளை மாலை 4 மணி முதல் இரண்டரை மணி நேரம் யாழ். நகரில் உள்ள 'ரில்கோ' விடுதியில் நடைபெற உள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்தும் அது எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் மூத்த ரோட்டேறியன்கள் இருவர் நிகழ்வில் கருத்துரையாற்றுவார்கள்.

ஹற்றன் நஷனல் வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் ராஜேந்திர தியாகராஜாவும் முன்னணி வரி ஆலோசகர் என்.ஆர்.கஜேந்திரனும் பயன்மிக்க கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

ரோட்டரி இன்ரநஷனலின் மாவட்ட ஆளுநர் தர்சன் ஜேனும் நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளார்.

யாழ்ப்பாணம் ரோட்டறிக் கழகம் 1941 முதல் இயங்கி வருகின்றது. ஆழிப் பேரலை அழிவின் பின்னர் இலங்கையில் 25 பாடசாலைகளை மீள நிர்மாணிப்பதற்கு ரோட்டறிக் கழகம் உதவிகளை வழங்கியுள்ளது. குடத்தனை, கரையூரில் கடைசிப் பள்ளிக்கூடம் 10 கோடி ரூபா செலவில் யாழ். ரோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் ரோட்டறி இன்டர்நஷனல் கழகத்தால் கட்டிக் கொடுக்கப்பட்டது.

காலம் கனிந்து வந்துள்ளதை அடுத்து ரோட்டறிக் கழகத்தின் சேவைகளை யாழ்ப்பாணத்தில் விரிவுபடுத்த ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். யாழ்ப்பாணப் பெருநகர், நல்லூர், நெல்லியடி ஆகிய புதிய ரோட்டறிக் கழங்களை மிக விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். (உ-01)

## சிமெந்து விலை அதிகரிக்கவில்லை

சிமெந்துப் பக்கெற்றுக்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் ஆராயுமாறு வீடமைப்பு, பொருளியல், நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச எழுத்து மூலமாக அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோவை கேட்டுக் கொண்டுள்ளார்.

50 கிலோகிராம் எடையுடைய சிமெந்து பக்கெற் ஒன்று 60 முதல் 70 ரூபா வரையில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. எனவே இந்தச் செய்தியின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து வெளிப்படுத்துமாறு விமல் வீரவன்ச அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாக விலை அதிகரிப்பு இடம்பெற்றுள்ளதாயின் அதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் படி அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். 50 கிலோகிராம் சிமெந்துப் பக்கெற் ஒன்றின் விலை 855 ரூபா எனவும் கடந்த மே மாதம் சிமெந்தின் விலை இறுதியாக அதிகரிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

## இதய நோய்களுடன் வருடாந்தம் 2 ஆயிரத்து 500 குழந்தைகள் பிறப்பு

கொழும்பு,செப் 5

இலங்கையில் வருடாந்தம் 2500க்கும் மேற்பட்ட குழந்தைகள் இதய நோய்களுடன் பிறப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இதய நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு தற்போது காணப்படும் வசதிகள் போதுமானதாக இல்லை என கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்திய நிபுணர் ரத்ன சிறி ஹேவகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ரிஜ்வே வைத்தியசாலையில் இதய நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான வசதிகளை அதிகரிப்பதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

தற்போது வருடாந்தம் 1600 தொடக்கம் 1700 வரையிலான சத்திரசிகிச்சைகள் மாத்திரமே தமது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுவதாக வைத்திய நிபுணர் குறிப்பிட்டார்.

எனினும், இந்த எண்ணிக்கையை விட அதிகமான குழந்தைகள் இதய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்குச் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் வைத்தியசாலையில் இல்லை என அவர் கூறினார்.

இதற்கமையச் சுகாதார அமைச்சினால் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 220 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, வசதிகள் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் மேலும் அதிகளவிலான குழந்தைகளுக்கு

சிகிச்சைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் சுட்டிக் காட்டினார். (த)

## தங்கக் கட்டிகளுடன் ஒருவர் நேற்று கைது

கொழும்பு,செப் 5

சட்டவிரோதமாக இந்தியாவின் மும்பை நகருக்குக் கொண்டு செல்லப்படவிருந்த ஒரு தொகை

தங்கக் கட்டிகளுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரிடமிருந்து 16 தங்கக் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவு குறிப்பிட்டது. அதன் எடை ஒரு கிலோகிராம் 600 கிராமுக்கும் அதிகமெனச் சுங்கப் பிரிவு தெரிவித்தது.

குறித்த நபர் மும்பை நோக்கி பயணிக்க முற்பட்டபோது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்டு விமான நிலைய சுங்கப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தங்கக் கட்டிகளின் பெறுமதி ஒரு கோடியே இருபது இலட்சத்துக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது. (த)

## மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட ஏழு பேர் கைது

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போட்றிதோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் ஏழு பேரை நேற்று செவ்வாய்க்கிழமை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்ததோடு மாணிக்க கல் அகழ்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர். (த)

## ஜனாதிபதியின் இந்திய பயணம் உறுதியாம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அறிவித்தபடியே இந்தியாவின் சான்சியில் அமைக்கப்படவுள்ள பௌத்த கல்வி நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்தார். (த)

## கப்பலில் இருந்து வெளியேற இலங்கை அகதிகள் மறுப்பு

ஜகார்த்தா,செப் 5

மேற்கு இந்தோனேசியாவில் எரிபொருள் தீர்ந்த நிலையில் தரித்து நிற்கும் கப்பலில் இருந்து வெளியேற 53 இலங்கை அகதிகளும் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தமது கப்பலுக்கு எரிபொருளை நிரப்பித்தருமாறும் தாம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல வேண்டும் என்றும் குறித்த அகதிகள் கோருவதாக இந்தோனேசியப் பொலிஸ் கப்டன் அப்துரராச்சுமான் சுர்யாங்கேரா தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுமாத்திரா தீவுக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் வைத்து இந்தோனேசிய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டது.

குறித்த கப்பலில் உள்ள அகதிகள் தமக்கு உணவு, எரிபொருள் மற்றும் நீரை பெற்றுக்கொள்வதற்காகத் தங்கம் மற்றும் நகைகளைக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளதாக இந்தோனேசியக் கடற்படையினருக்குத் தகவல் கிடைத்தமையை அடுத்தே அவர்கள் அதனை இடைமறித்தனர்.

இதனையடுத்து, அந்தக் கப்பல் இந்தோனேசியாவின் மேற்கு துறைமுகம் ஒன்றுக்கு கொண்டு வரப்பட்டது. இதேவேளை 43 பேரைக் கொண்ட மற்றும் ஒரு இலங்கை அகதிகள் கப்பல் கடந்த வாரம் மென்டாவை என்ற பகுதியில் வைத்து இந்தோனேசிய கடற்படையினரால் காப்பாற்றப்பட்டது. இதில் பயணித்தவர்கள் 9 நாள்களாக உணவு மற்றும் நீர் இன்றி தத்தளித்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவிகள், பெற்றோர்கள் வேம்படி முன் இன்று ஆர்ப்பாட்டம்

## அதிபர் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு கோரி

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு கோரி கல்லூரியின் பழைய மாணவிகள், மாணவிகளின் பெற்றோர்கள் கல்லூரிக்கு முன்பாக இன்று புதன்கிழமை ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இன்று காலை பழைய மாணவிகளும் பெற்றோரும் கல்லூரிக்கு முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபவர்.

பழைய மாணவிகள் சங்கம் நடத்தும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவு வழங்குவதாக அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்லூரி அதிபராக திருமதி வேணுகா சண்முகரத்தினம் பொதுச்சேவை ஆணைக் குழுவினால் மூன்று மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் பதவி ஏற்றுக் கடமைகளைச் செய்யவிடாது தொடர்ந்தும் தடுக்கப்பட்டு வருகிறார்.

பொதுச்சேவை ஆணைக் குழு நியமிப்பது என்பது சாதாரண விடயமல்ல. இலங்கை முழுவதற்குமான பொறுப்பான அமைப்பாக இது இயங்கி வருகிறது. இந்த நியமனத்தை எவரும் உதாசீனம் செய்ய முடியாது. ஆனால் ஆணைக் குழுவின் நியமனம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதற்கு எதிராக இருப்பவர்கள் மீது கல்வி அமைச்சு, வடமாகாண கல்வி அமைச்சு எதுவுமே ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் எடுத்திருக்கவில்லை. பொதுச் சேவை ஆணைக்குழுவை கொச்சைப் படுத்தும் செயலே இது- என்றார்.

இன்று காலை 7 மணி தொடக்கம் கல்லூரியின் வாயிலில் அனைவரும் ஒன்று கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாகவும், இதில் பல தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

# குடும்பஸ்தரை வாளால் வெட்டிய இருவர் கைது

தென்மராட்சி, செப்.5

கொடிகாமம் பொலிஸாரின் துரித செயற்பாட்டின் பயனாக வீட்டினுள் அத்துமீறிச் சென்று குடும்பஸ்தரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். கடந்த வாரம் வரணி, கரம்பைக் குறிச்சிப் பகுதியில் இரவு சென்று படுக்கையில் வைத்து குடும்பஸ்தரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு இருவர் மோட்டார் சைக்கிளில் தப்பியோடினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக அயல் கிராமத்தைச் சேர்ந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த இருவரையும் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

# டெங்கு விழிப்புணர்வு செயற்பாடு நாவற்குழியில்

**தற்காலிக மலசல கூடங்களால் இந்தப் பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் அபாய நிலை காணப் படுகின்றது இவற்றினைக் கட்டுப்படுத்த பிரதேச சபையினரும் யாழ்.மாவட்ட செயலகத்தினரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

தென்மராட்சி, செப்.5

நாவற்குழி அத்துமீறிய குடியேற்றத் திட்டத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும், சுகாதாரத் தொண்டர்களும் இணைந்து வீடுவீடாகச் சென்று டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இங்குள்ள 25இற்கும் மேற்பட்ட தற்காலிக மலசலகூடங்களால் இந்தப் பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் அபாய நிலை காணப்படுவதாகவும் இவற்றினைக் கட்டுப்படுத்த பிரதேச சபையினரும் யாழ்.மாவட்ட செயலகத்தினரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவை இங்கு அத்துமீறிக் குடியேறிய தென்னிலங்கை மற்றும் யாழ்.மாவட்ட மக்களின் நலன்கருதி யாழ்.மாவட்ட செயலகத்தால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பொது மலசலகூடங்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பச்சிலைப்பள்ளியில் மீண்டும் கூட்டுறவுத்துறை செயற்பாடு

**அத்தியாவசியப் பொருள்கள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் போன்றவற்றை நுகர்வோர் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சங்கங்கள் செயற்படும்**

யாழ்ப்பாணம், செப்.5

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை மீள இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

போர்க்காலச் சூழலில் முடக்கப்பட்ட சங்கங்களின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் 10 கிளைக்குழுக்கள் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் போன்றவற்றை நுகர்வோர் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சங்கங்கள் செயற்படும் - என்றார். (த-14)

# திருட்டுகள் பல விதம் அவற்றில் இது ஒருவிதம்

வலி.தென்மேற்கு, செப்.5

மக்களுக்குச் சந்தேகம் ஏற்படாதவாறு பழைய சைக்கிளை பக்கத்தில் நிறுத்தி விட்டு புதிய சைக்கிளைத் திருடிச் செல்கிறார்கள் திருடர்கள். சைக்கிள் திருடர்களின் இந்தத் தந்திரோபாயம் மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மானிப்பாய், சுதுமலை ஆகிய இடங்களில் இது போன்ற திருட்டுகள் ஒரு வார காலத்துக்குள் அடுத்தடுத்து இடம்பெற்றுள்ளன.

மானிப்பாயைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தனது புத்தம் புதிய சைக்கிளை சுதுமலையில் உள்ள ஒரு கடைக்கு முன்பாக பூட்டி விட்டு கடைக்குச் சென்று திரும்பியபோது இவரது சைக்கிள் மாயமாய் மறைந்து விட்டது. அதற்குப் பதிலாக பழைய சைக்கிள் ஒன்று நிற்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். பலமணி நேரம் காத்திருந்தும் ஏமாற்றத்துக்குள்ளானார்.

இதேபோல் சுதுமலையைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தனது புதிய சைக்கிளை மானிப்பாயில் உள்ள ஒரு கடைக்கு முன்பாக விட்டுப் பூட்டி விட்டு கடையில் பொருள்களை வாங்கிக் கொண்டு திரும்பி வந்து பார்த்த போது இவரின் சைக்கிளைக் காணவில்லை. அதற்குப் பதிலாக வேறொரு பழைய சைக்கிள் அந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. தனது சைக்கிளுக்காக நீண்ட நேரம் காத்திருந்த பெண் இறுதியில் ஏமாற்றத்துடன் வீடு சென்றார். சைக்கிள் திருடர்களின் இந்தத் தந்திரோபாயம் மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (த-11)

# மதகு திருத்தப் பணிகள் திடீரென இடைநிறுத்தம்

## பாதசாரிகள் சிரமம்

கொடிகாமம், செப்.5

வேம்பிராய் - வரணி வீதியில் தாவளை- இயற்றாலையில் அமைக்கப்பட்ட மதகு திருத்த வேலைகள் திடீரென நிறுத்தப்பட்டதால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக மதகு அமைப்பதற்காக வீதியை வெட்டிக் குழாய்களை வைத்த பின்னர் இந்தப் பகுதியில் உள்ள வயல் உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் திருத்த வேலைகள் நிறுத்தப்பட்டன.

கடந்த பத்து நாள்களாக வேலை செய்யாததாலும் மதகு அமைப்பதற்கு தற்காலிகப் பாதை ஒன்று அமைக்காததாலும் வாகனங்கள் வயல்கள் ஊடாக பயணிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மதகு அமைக்கப்பட்டதால் இதனூடாக வரும் மழை வெள்ளம் வயல்களில் நெற்பயிரை அழித்துவிடும் அபாயம் உள்ளதாக வயல் உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் வேலைகள் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பாஷையூர் இறங்குதுறை புனரமைப்பு இழுத்தடிப்பு

## மீனவர்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், செப்.5

பாஷையூர் இறங்கு துறையின் புனரமைப்புப் பணிகள் இழுத்தடிக்கப்படுவது குறித்துப் பாஷையூர் பகுதி மீனவர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த இறங்குதுறையின் புனரமைப்புக்கென கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட கருங்கற்கள் வீதியோரம்குவிக்கப்பட்டுத் தவம் கிடக்கின்றன.

புனரமைப்புப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இதில் தொடர்ந்து காலதாமதம் காட்டப்பட்டு வருகின்றமையால் தாம் தொழில் ரீதியாகப் பெரும் இன்னல்களை எதிர் கொண்டுள்ளதாக மீனவர்கள் முறைப்பாடு தெரிவிக் கின்றனர்.

தற்போதைய கடும் வறட்சியால் கடற்கரைப் பகுதியில் கடல்நீர் வற்றிக் காணப்படுகிறது.

இதனால் மீனவர்கள் தமது மீன்பிடிப் படகுகளைக் கடலில் ஆழம் கூடிய பகுதிக்குத் தள்ளிச் சென்றே நங்கூரமிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இந்த இறங்கு துறையின் புனரமைப்பை விரைவில் ஆரம்பிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது,


இந்த இறங்குதுறை ஐ.ஓ.எம். நிறுவனத்தின் உதவியுடன் விரைவில் நிர்மாணம் செய்யப்படவுள்ளது - என்றார். (த-17)

A/L இன்-பின்னர்...

உங்கள் பொறியியலாளர் ஆகும் கனவை நனவாக்கும்!

City & Guilds
Graduate Diploma in Engineering
(Accepted by IET, IMechE, ice)

பிரித்தானிய Engineering Council லினால் அங்கத்துவம் பெற்ற IET, IMechE, ice போன்ற பொறியியலாளர் தொழில்சார் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் சான்றிதழ்.



Civil Engineering
Electronics Engineering
Quantity Surveying
Motor Vehicle Engineering
Electrical Engineering
Mechanical Engineering
Refrigeration & A/C

2011 ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்வி கற்கும் போது City & Guilds பற்றி தெரிந்து கொண்டேன். A/L பரீட்சை எடுத்த பின்னர் Result வரும் மட்டும் காத்திருக்காமல் City & Guilds Civil Engineering Diploma கற்கைநெறிக்கு சேர்ந்து, கடந்த June மாதம் Diploma பட்டம் பெற்று இன்று இலங்கையில் புகழ் பெற்ற நிறுவனத்தில் தொழில் புரிந்து கொண்டு Advanced Diploma பாடநெறியை தொடர்கின்றேன்.

அன்று நான் எடுத்த முடிவு சரியானது என்பதை இப்போது உணர்கின்றேன் ஏனெனில் என்னுடன் உயர் கல்வி கற்ற பலர் இன்றும் தமது எதிர்காலத்தை நினைத்து காலத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எனது எதிர்கால இலட்சியம் City & Guilds Graduate Diploma முடித்து பிரித்தானிய Engineering Council னால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியலாளராக வருவதுதான்.

விஜஜன்
வெள்ளவத்தை.

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?

Post Graduate Diploma Equal to MEng, UK (IVQ Level.7)
IET, IMechE, ice Registration → Incorporated Engineer
NDT/ HND/NDES/NDET/ Degree with Mathematics or Physics/ OUSL Diploma → Graduate Diploma Equal to BEng (Hons), UK (IVQ Level 6) → Asst. Engineer
NCT/ NCIT/ NCQS/ equal Technical qualifications → Advanced Diploma (IVQ Level 5) → Supervisor (job)
A/L Maths, Science, Certificate courses in related field → Diploma (IVQ Level 3)
O/L, A/L commerce, Art → Certificate (IVQ Level 2)

மேலதிக விபரங்களைப் பெறவும், பதிவுகளை மேற்கொள்ளவும்.

இன்றே அழையுங்கள்.
0771 067 394 or 0214 66 66 99

அல்லது SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

City & Guilds Approved Centre
SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
Nugegoda Campus No. 102, Stanley Thilakarathna Mw, Nugegoda. 011 4 696 696 scot@skillsinternational.lk
Kurunegala Campus No. 252, Puttalam Rd, Kurunegala. 037 3 616 868 kurunegala@skillsinternational.lk
Kandy Campus No. 511, Peradeniya Road, Kandy. 081 4 951 522 kandy@skillsinternational.lk
Jaffna Campus No. 207, Navalar Road, Jaffna. 021 4 666 699 jaffna@skillsinternational.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக விஸா வழங்குவதை இடைநிறுத்தியது நோர்வே

## மோசடிகள் நடைபெறுவதே காரணமாம்

கொழும்பு, செப். 5

நோர்வேயில் தொழில் தேடும் இலங்கையர்களுக்காக வழங்கப்படும் தற்காலிக தங்குமிட அனுமதியை இரத்துச் செய்ய நோர்வே அரசு தீர்மானித்துள்ளது. இந்த அனுமதியில் செல்லும் அநேகமானோர் பல்வேறு மோசடிகளில் ஈடுபடுவதன் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து தற்காலிக வதிவிட அனுமதிகள் இனிமேல் வழங்கப்படாது என நோர்வே ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கூறிய மூன்று நாடுகளிலும் இயங்கிவரும் நோர்வேத் தூதரகங்களின் யோசனையின்படியே நோர்வே அரசு இந்த முடிவை எடுத்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமொன்றின்படி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியிலுள்ள நாடுகளிலிருந்து நோர்வேயில் தொழில்தேடி வருபவர்களுக்கு அவர்களிடம் சரியான ஆவணங்களும், தேவையான தகுதிகளும் இருக்கும் பட்சத்தில் ஆறுமாத காலத்துக்கு தற்காலிக வதிவிட அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

2012 ஆம் ஆண்டின் முதல் ஆறுமாத காலப்பகுதியில் இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து சுமார் ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. எனினும், அநேகமானோர் தங்கள் பதிவை உறுதிப்படுத்துவதற்குப் போலியான ஆவணங்களை சமர்ப்பிப்பதாகத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறைந்தபட்சம் 100 விண்ணப்பதாரிகள் மத்திய ஒஸ்லோவில் உள்ள முகவரிகளைக் கொடுப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

''ஏராளமானவர்களுக்கு வதிவிட அனுமதி தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது எனக் கூறுவதில் உண்மை இல்லை. இது ஒரு மோசடி என்பது தெளிவாக விளங்குகிறது'' என்று நோர்வே தொழில் அமைச்சர் ஹேன் ஜஸ்ட்ரோம் தெரிவித்துள்ளார்.

## பான் கீ மூனை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கையளிக்கவுள்ளார். தி.மு.க. சிரேஷ்ட தலைவர் டி.ஆர். பாலு, ஸ்ராலினுடன் செல்லவிருப்பதுடன் திராவிடக் கழகத்தின் தலைவர் வீரமணியும் சுபவீரபாண்டியனும் அந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

தமிழர்களின் ஆதிக்கத்தில் உள்ள இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசியல் கருத்துக் கணிப்பொன்றை நடத்துவதன் மூலம் அங்கு வாழும் தமிழ் மக்கள் தங்களது சொந்த எதிர்காலத்தைப்பற்றித் தீர்மானிப்பது, அப்பிரதேசங்களில் நடக்கும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்ய ஐக்கிய நாடுகளின் கண்காணிப்புக் குழுவொன்றை நியமிப்பது, புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட யுத்தக்குற்றங்கள் பற்றிய விசாரணையை ஐ.நா. நடத்துவது, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிராகரிப்பது ஆகியவையே 'டெசோ' மாநாட்டின் தீர்மானங்களாகும். (த)

## வேகமாக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மணிக்கு வவுனியா - கொழும்பு கடுகதி ரயில் வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்ட வேளை ஓடு பாதையில் நின்று ரயிலில் ஏற முற்பட்ட நபரே இவ்வாறு உயிரிழந்திருக்கின்றார். இவரது தோள் பகுதியில் முறிவு ஏற்பட்டது. இதனாலேயே மரணம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இறந்தவரது அடையாளத்தை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் எதுவும் அவரிடம் இருக்கவில்லை. சம்பவ இடத்திலிருந்து பிரஸ்தாப நபர்கொண்டுவந்திருந்த பயணப்பையும் ஒரு தொகைப்பணமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-130-400-402)

## இலங்கை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தியாவுக்கான இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இந்தியப் பொலிஸாரும் இராணுவத்தினரும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக சென்னையிலுள்ள இலங்கையின் பிரதித் தூதுவர் ஏ.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தமிழ்நாட்டின் தஞ்சாவூர் பகுதியிலுள்ள ஆலயமொன்றை அண்மித்த கட்டடத்தில் தங்கியுள்ள இலங்கையர்களை விசேட விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பியனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.அந்தக் குழுவினரின் நலன்கள் தொடர்பில் கண்டறிவதற்கு தூதரகத்தின் இரண்டு அதிகாரிகள் குறித்த பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.(த)

## ஐ.நா. ஆணையர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆராய்வதுடன் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தும் மேலதிக தகவல்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.இதேவேளை, நவநீதம்பிள்ளை தலைமையிலான குழுவினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சுயாதீனமாகச் செல்வதற்கான அனுமதி குறித்து இலங்கை அரசினால் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## சப்ரகமுவ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டங்களில் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு தமது வாக்குகளை அளித்தமையாலும், மலையக தமிழ் கட்சிகள் பிரிந்து போட்டியிட்டமையாலும், சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் கடந்த காலங்களில் மலையகத் தமிழ் மக்கள் தமது அரசியல் பிரதிநிதித்துவங்களை உறுதி செய்ய முடியாமல் போய்விட்டது என மலையகத் தமிழ் சிவில் சமூகம் சுட்டி காட்டியுள்ளது. இந்தப் படிப்பினையை அடிப்படையாக கொண்டு சப்ரகமுவ தமிழ் வாக்காளர்கள் மலையக தமிழ் கூட்டமைப்பின் பொது சின்னமான சேவல் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.

அதேபோல் மேலாதிக்கவாத சிந்தனைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரண்டு, தமது அரசியல்-சமூக-கலாசார இருப்பை உறுதி செய்துகொள்ளும் முகமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வீட்டு சின்னத்துக்கு கிழக்கு மாகாண தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும்- என்றார். (த)

## வன்னிப் போரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வரும் வாகனங்கள் தினமும் களவாடப்பட்டு வருவதாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்தன.

இந்த நிலையில் 15 வரையான மோட்டார் சைக்கிள்களை நேற்றுமுன்தினம் வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்ற மூவரையும், வாகனத்தையும் இராணுவத்தினர் மறித்துப் பிடித்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை ஓட்டோ ஒன்றில் உழவு இயந்திர உதிரிப் பாகங்களை கடத்திச் சென்ற போது அதன் உரிமையாளரையும் மற்றுமொருவரையும் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

குறித்த ஓட்டோ உரிமையாளரை 5 லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் மற்றைய சந்தேக நபரை விசாரணை பூர்த்தியாகாத காரணத்தினால் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (த-க-6)

## விடுதலைப் போர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நெல்லை மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தமிழர் இயக்கத்தின் கொள்கைபரப்பு பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் பேசியவை வருமாறு -

தமிழ் ஈழம் என்பது தமிழர்களின் தாயகம். இரண்டு ஈழப் போராட்டத்திலும் நாம் பதினைந்தாயிரம் ஏக்கர் பரப்புநிலத்தை சிங்களவரிடம் இழந்தோம்.ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதமேந்திய காலங்களில் நாம் கையளவு நிலத்தைக் கூட பறி கொடுக்கவில்லை.

முள்ளிவாய்க்கால் கொடுமையைப் பற்றி இந்திய அரசு சொல்லத் தயங்குகிறது. ஐந்தாயிரம் வீடுகள் தமிழர்களுக்கு கட்டித்தரப்பட்டதாக அங்கே உள்ளவர்கள் சொல்கிறார்கள்.ஆனால், அங்கே போய் வந்தவர்களோ 500 வீடுகள்தான் கட்டப்பட்டுள்ளன என்கின்றனர்.தாய் தமிழிச்சிகள் சொல்ல முடியாத பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க ஈழத்தில் பெரிய விடுதலைப் போர் வெடிக்கும் - என்றார்.

## இலங்கைப் படைக..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மத்திய அரசு இலங்கை இராணுவத்தினருக்குத் துணை போகிறதா என்றும் தி.மு.க. உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து தி.மு.க. உறுப்பினர்கள் தன்னைச் சந்திக்குமாறு பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி கேட்டுக்கொண்டார்.

அதன்பேரில் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவனும் ஏ.கே.அந்தோனியை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர்.

அப்போது இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் எந்தவொரு இடத்திலும் பயிற்சி அளிக்கக்கூடாது என்றும், ஏற்கனவே பயிற்சி பெற்று வரும் இலங்கை இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி மனு ஒன்றை அளித்தனர்.

சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றியிருப்பதுடன், இது குறித்து தி.மு.க. தலைவர் கலைஞர், பிரதமருக்குக் கடிதம் எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டிய தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதன் பிறகும் மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாதது தமிழக மக்கள் மனதிலும், உலகெங்கும் வாழும் தமிழர்கள் மனதிலும் புண்படுத்துவதாக உள்ளது என்றும் அந்த மனுவில் தெரிவித்துள்ளனர்.

எனவே பாதுகாப்புத்துறை அமைச்சர் இந்தப் பிரச்சினையில் [illegible] எடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

தஞ்சை அருகே உள்ள பூண்டியில் புகழ்பெற்ற மாதா ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்துக்குச் சிங்கள யாத்திரிகர்கள் 184 பேர் நேற்றுமுன்தினம் சென்றனர்.

இலங்கையில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வந்த அவர்கள் வானில் பூண்டி வந்தனர். பூண்டி மாதா ஆலயத்தில் உள்ள விடுதியில் இவர்கள் தங்கியிருந்தனர்.

பூண்டிமாதா ஆலயத்தில் நடைபெற்றுவரும் அன்னை மரியாள் பிறப்பு பெருவிழாவில் பங்கேற்கவே இவர்கள் அங்கு சென்றிருந்தனர். இந்தத் தகவல் அங்குள்ள தமிழ் அமைப்புகளுக்கு கிடைத்தது. அவர்கள் சிங்களவர்களை உடன் வெளியேற்ற வேண்டும். இல்லையென்றால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பூண்டி மாதா கோயிலில் பொலிஸ் அதிகாரிகள் இளம்பரிதி, காஜாமைதின் ஆகியோர் தலைமையில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். தஞ்சை உதவிக் கலெக்டர் காளிதாஸ், பூண்டி மாதா கோயிலில் முகாமிட்டிருந்தார். நேற்றுமுன்தினம் மாலை நாம் தமிழர் இயக்கத்தினர், சட்டத்தரணி நல்லதுரை தலைமையிலும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் விவேகானந்தன் தலைமையிலும், தமிழ்த்தேச பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் குழு பால்ராஜ் தலைமையிலும் திரண்டனர். இவர்களிடம் பொலிஸார் பேச்சு நடத்தினர்.

அதனைத் தமிழ் அமைப்புகள் ஏற்கவில்லை. இவர்கள் அனைவரும் பூண்டி பேராலய அறையை முற்றுகையிட்டும், கீழே அமர்ந்தும் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராகவும் பூண்டி மாதா கோயிலில் தங்கியுள்ள சிங்களவர்களுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களிடம் சிங்களவர்களை வெளியேற்றுவதாக உறுதியளிக்கப்பட்டதை அடுத்து ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுக் கலைந்து சென்றனர். இந்த அமைப்பினர் கலைந்து சென்ற சிறிது நேரத்தில் மக்கள் உரிமை இயக்கத்தினர் செயலாளர் பழ. ராஜ்குமார் தலைமையிலும் விடுதலை தமிழ்புலிகள் கட்சியினர் ஒன்றிய செயலாளர் இளங்கோ தலைமையிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தால் பூண்டிமாதா ஆலயத்தில் பரபரப்பு உருவானது. நேற்று அதிகாலை 3 மணிக்குப் பூண்டி மாதா ஆலயத்தில் தங்கியிருந்த 184 யாத்திரிகர்களும் பஸ்களில் வெளியே புறப்பட்டுச் சென்றனர். அவர்களைப் பத்திரமாகத் திருச்சி அழைத்துச் சென்று அங்கிருந்து விமானத்தில் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை:

இந்தச் சிங்கள யாத்திரிகர்களைப் பத்திரமாக இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## வடக்கு - கிழக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திறந்தவெளியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு நாங்கள் முயற்சி எடுத்துவருகின்றோம். ஆனால், ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் இரு சமூகங்களையும் பிரித்துவைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். ஆகவே, முஸ்லிம், தமிழ் மக்கள் மிகவும் ஒற்றுமையுடன் செயற்பட்டு இதனை முறியடிக்க வேண்டும். இல்லையேல் நாங்கள் பலவிதமான இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இந்த நாட்டிலே சிங்கள சமூகம் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள் என்பதை மதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மதித்தும் வருகின்றோம். எமது உரிமைகளைப் பற்றி நாங்கள் பேசுகின்றபொழுது அவர்களுக்கெதிராகச் செயற்படவில்லை.

தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் சம உரிமையுடன் கௌரவமாக வாழவேண்டும்; எமது சமய கலாசார விடயங்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்; எமது தனித்துவம் பேணப்படவேண்டும்.

தந்தை செல்வநாயகம் அரசியல் போராட்டத்தை ஆரம்பித்தபோது தமிழ் மக்களுக்காக மாத்திரம் தனது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களுக்காகவே ஆரம்பித்தார். அதை அவர் மிகவும் தெளிவாக உறுதிபடக் கூறியிருக்கிறார்.

ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக முஸ்லிம்களுக்குத் தமிழர்களால் எந்தவிதமான அசம்பாவிதமும், எவராலும் நடந்ததாகச் சொல்லமுடியாது. அப்போது வடக்கிலும், கிழக்கிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் அந்நியோன்யமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

ஆனால், ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் கிழக்கின் பல இடங்களிலும் எவரும் ஏற்றுக்கொள்ள முடியாத அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம். இன ரீதியான பிரச்சினைகள் இப்போது இல்லை. தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் மோதவேண்டிய எந்த அவசியமும் இல்லை. நாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பொதுப்பிரச்சினைகளாகும். அவற்றை நாங்கள் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

ஆகவே, தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் ஒற்றுமையாக வாழவேண்டிய தேவை இருக்கின்றது. ஒற்றுமையும் ஒருமித்த குரலும் இருந்தால்தான் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். (10 - 224)

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை துரைராசா

(மகா லாவண்ய காளி அம்பாள் திருக்கோயில் தர்மகர்த்தா)



யாழ். அல்வாயைப் பிறப்பிடமாகவும், கொடிகாமம் ஜேர்மனி Oberhausen Bochum ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை துரைராசா (30.08.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சீதேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ் சென்றவர்களான கந்தப்பு சிவஞானம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக்கணவரும், காண்டீபன் (சுவிஸ்), வசந்தி (கனடா), ஜெயந்தி (கனடா), சுகந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கராசா (இலங்கை), ஆனந்தராசன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சகிலாஜோதி, பஞ்சலிங்கம், குகசீலன், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், நவமணி (இலங்கை), ராசமணி (இலங்கை), ஞானமணி (கனடா), குலமணி (நெதர்லாந்து), விக்கினேஸ்வரன் (இலங்கை), நாதன் (சுவிஸ்), சிறீதரன் (சுவிஸ்), சிவமணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அம்பலவாணர், செல்வராசா, சுலேந்திரன், பாஸ்கரன், கமலாவதி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலனும், ஆபிலாஸ், சௌமியா, சர்மிகா, நியிந்திரா, சுயிந்திரா, பிரதீப், ரிசபன், பிரசான், அஸ்டவதி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2012) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(க. ஜெயந்திநாதசர்மா)

கொடிகாமம் (22537)(8.14)

## சின்னவன் ஐயாத்துரை

(ஓய்வு பெற்ற மின்சாரசபை மின் இணைப்பாளர்)



அரியாலை மேற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் ஐயாத்துரை நேற்று (04.09.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் - மாணிக்கம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான கதிரன் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சந்திரகுமார், தவக்குமார், கமலராணி மற்றும் யோகநாதன் - உஷாராணி (மன்னார்), கிருபாகரன் - பிறேமராணி (லண்டன்) கேதீஸ்வரன் - நிர்மலராணி, கஜேந்திரகுமார் (டினேஸ் - Humedicca Angel International School Manipay) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2012) வியாழக் கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
180, ஆசிர்வாதப்பர் வீதி, அரியாலை. குடும்பத்தினர். (22538)(3.14)

## பிராங் ரிச்சட் செல்வதவராசா நல்லையா



பிராங் ரிச்சட் செல்வதவராசா நல்லையா (Samuel & Sons/ Colonial Group of Companies / Church of Ceylon / Y.M.C.A) நேற்று (04.09.2012) செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சாமுவேல் கந்தையா-அன்னபாக்கியம் நல்லையா தம்பதியரின் அன்பு மகனும், உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற எட்வேட்-மேரி தம்பதியரின் மருமகனும், விமலாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, செல்வமலர், செல்வரஞ்சிதம், செல்வபூவதி, செல்வமணி, செல்வானந்தம் மற்றும் செல்வஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிறேஸ், செல்வராஜா, காலஞ்சென்றவர்களான ஆனந்தராஜா, சந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (05.09.2012) காலை 9 மணி தொடக்கம் வைக்கப் பட்டு நாளை (06.09.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொரல்ல ஜெயரட்ன மலர்ச்சாலையில் ஆராதனையின் பின் நல்லடத்திற்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெகிவளை மனைவி
(சி/2696)(9.14)

## இராணுவச் சிப்பாய் கைது

அனுராதபுரத்தில் 17 வயது மாணவி ஒருவரை கத்தியால் குத்திப் படுகொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி அனுராதபுர நீதிவான் திருமதி ருவந்திகா மாரப்பன உத்தரவிட்டுள்ளார்.

இப்லோகம இராணுவ முகாமைச் சேர்ந்த தமித் பிரியதர்சன என்ற இராணுவச் சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவராவார்.

சந்தேக நபரான இராணுவச் சிப்பாய் நஞ்சருந்திய நிலையில் தற்போது அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு சிறைச்சாலைப் பொலிஸாரினால் பாதுகாப்பு வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (16)


### காணி விற்பனைக்கு

ஒட்டு வெளி மிருசுவில் A9 வீதியிலிருந்து ¼ Km தூரம் 25 பரப்புக் காணி (பிராமணன் வளவு) விற்பனைக்கு உண்டு.

(21518)(9.14)
தொடர்பு-0779481100, 0774087674

### காணி தேவை

பாண்டியன் தாழ்வு அன்னம்மாள் கோயில் பகுதி, ஈச்சமோட்டை, கச்சேரிப் பகுதிகளில் 2½ பரப்புக் காணி விலைக்குத் தேவை. (தரகர் தேவையில்லை)

T.P- 0775927503 (22528)(9.14)

### தவறிவிட்டது

பாடசாலை வீதி, நாவற்குழி, கைதடி எனும் முகவரியை சேர்ந்த மேகலிங்கம் நிரோத்திபன் என்பவரது (921111061v) என்னும் தேசிய அடையாள அட்டையும், வாகன அனுமதிப்பத்திரம் என்பன 02.09.2012 அன்று புங்கங்குளம் சந்திக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0750700149 எனும் இலக்கத்திற்கு அறிவித்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (22520)(3.14)

### வெல்டர் தேவை (Welder)

எமது ஸ்தாபனத்திற்கு வேலை செய்வதற்கு ஒரு வெல்டர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (22526)(3.14)

### Personal Class

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammer கற்க விரும்புவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். கற்கை நெறி முடிவில் Diploma Certificate வழங்கப்படும். அது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரச அங்கிகாரம் பெற்றது.

(விரையுங்கள் அனுமதிக்கு இன்றே)

தொடர்பு- பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி.
(22512)(9.14) T.P-0778361521

### ELF விற்பனைக்கு உண்டு

68-XXXX தொடர் இலக்கம் கொண்ட நல்ல நிலையில் உள்ள "ISUSU ELF" வாகனம் விற்பனைக்கு உண்டு. லீஸ் வசதி செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு-
0770457603, 0779533700 (22519)(9.14)

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி - பால் பண்ணைக்கு அருகில் இரண்டு பரப்பு காணியில் அமைந்துள்ள சிறிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 1952 574
021 300 1177

### வேலையாள்கள் தேவை

திருநெல்வேலி பல்கலைக்கழக பகுதியில் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு பெண் பிள்ளைகள் தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 0774206675 (22531)(3.14)

### பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள கட்டட விற்பனை நிலையத்திற்கு நிர்வாகம் செய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:- 0773818799 (22517)(3.14)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தி தருகிறோம்.

தொடர்புகளுக்கு- CHNAA BEST PC
(22150)(9) 0779086737


# கண்ணீர் அஞ்சலி



## அழகையா தாமோதரம்

(மீசாலை வடக்கு, மீசாலை)

எமது நண்பன் தாமோதரம் அருள் வேந்தன் அவர்களது அன்புத் தந்தை அழகையா தாமோ தரம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நாம் ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிராத்திக்கின்றோம்.

SMH நண்பர்கள்
காண்டீபன், சுஜீதன், சுகிர்தன், பிரசாந், கமல்.
(சி/3098)(3.14)


### TOYATA VITZ CAR (1300CC) விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள 2007 Model Full option DVD, GPS. TV, Navigation, Reverse Camera, Power Mirror BT, IPod, Radio, USB, AUX, APS, Air bags, Auto AC, KM - xxxx, 12000 KM, 20 KM/L, I st Owner

(22532)(8.14) தொடர்பு : 075 5546000

### வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

கூடு பராமரிப்பாளர் (ஆண்) 01
சிட்டை எழுதுனர் (பில்போடுபவர்) பெண் 01
இரவு காவலாளி ஆண் 01
ஆர்வமுள்ளோர் நேரில் வரவும்.

வீனஸ் பாம்
கலாசாலை வீதி,
(முத்துத்தம்பி மகாவித்தியாலய வடக்கு ஒழுங்கை)
திருநெல்வேலி.
(22491)(5-6-7)


# மரண அறிவித்தல்கள்



## இராசதுரை இயேசுதாசன்

(இயேசு)

(மாநகரசபை ஊழியர்)

கொய்யாத்தோட்டம் புதுவீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இயேசு என அன்பாக அழைக்கப்படும் இராசதுரை இயோசுதாசன் நேற்று (04.09.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதியரின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்றவரான அகஸ்ரின் - செசிலியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி மாகிறேட் இன் அன்புக் கணவரும், சர்மிலா, சசிராசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியதாஸ், மேரிமாகிறேட் (ஜேர் மனி), மரியநாயகம் (கொழும்பு) ஆகி யோரின் அன்புச் சகோ தரனும், பேதுறுப்பிள்ளை யூட் பிறின்சின் இன் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (05.09.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (22534)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.



## செல்வரெட்ணம் மதனமோகன் (மோகன்)

யாழ் திருநெல்வேலி வளாக வீதியை பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரெட்ணம் மதனமோகன் கடந்த 31.08.2012 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரெட்னம் இராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்வரெட்னம் சின்னம்மா தம்பதியரின் மருமகனும் மல்லிகாவின் அன்புக் கணவரும் சர்மிளாவின் பாசமிகு தந்தையும் மனோசிவநாதன் (டெனியாயா) சுந்தரலிங்கம் (பிரான்ஸ்) இராஜேஸ்வரி, மஞ்சுளா, வதனி (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரெட்ணம், நாகேஸ்வரி, மற்றும் சுபோதினி, பாமினி, உதயகுமார், சிவநேசன், (கொழும்பு) தேவிகா, நவரெட்ணம் (இந்தியா), தவமணி (யாழ்ப்பாணம்), குணமாலா-சிவராசா (லண்டன்), சாரதா-நவகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் நவநீதன்-பிரியலக்சனா, அனுஸ்பிரியா, விவேக், வேதிகா, ஆர்த்திகா, ஆகியோரின் சித்தப்பாவும் கிஷோக், யஷோக், அபிஷோக், சர்மிளன், திவாகினி, காலஞ்சென்ற லக்மிலன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2012) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணிக்கு தகனக் கிரியைக்காக பொறளை இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்ரன் தொடர்மாடி
M Block
இல 6, 2 ஆவது மாடி,
நாராயன்பிட்டி. (22529)(9.14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

**IT Diploma Courses**
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Dip.in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

DMI COMPUTER EDUCATION

அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு



**Degree Courses** BIT
BIT, B.Sc.(Computer Science), BCA, B.Com.(Computer Applications), B.B.A., B.A., B.Sc.(Mathematics)

75% OFF
அனைவரும் கணினி கல்விக்கான கட்டணத்தில் 75% பணத்தை சேமியுங்கள்

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I - 5/9/2012 9.30 am
பிரிவு II - 8/9/2012 9.30 am
பிரிவு III - 10/9/2012 9.30 am

# DMI COMPUTER EDUCATION

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

veta

யாழில் பல்கலைக்கழக; தொழில் புரிவோர்; தொழில் தேடுவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவுசெய்து தமது ஆங்கில புலமையில் வெற்றி பெற்ற... ஆங்கில பாடநெறி

- ISO 9001:2000 Certified அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- சிறந்த வேலை வாய்ப்புக்கு....
பல்கலைக்கழகம் செல்ல உள்ளேருக்கு....
உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு....

City & Guilds Approved Centre



முறையானதும் தரமானதுமான ஆங்கிலபயிற்சி

| | | |
|---|---|---|
| veta Foundation ENGLISH | For beginners who want to read and write English. | அடிப்படை ஆங்கிலம், ஆங்கிலம்படிக்க எழுத தெரிந்து கொள்ளவிரும்பும் ஆரம்ப நிலையினருக்கான பாடத்திட்டம். |
| veta Fluent English First Step | For people who are doubtful about their English and want to speak English fluently. | தாங்கள் பெற்றுள்ள ஆங்கில அறிவில் சந்தேகம் உள்ளவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புபவர்களுக்கான பாடத்திட்டம் |
| veta Fluent English Next Step | For speakers of English who want to master diction and style. | ஆங்கில சொற்களின் ஆழ்ந்த அறிவும் (புலமை) மற்றும் ஆளுமையுடன் புதுமையாக பேச விரும்பும் பேச்சாளர்களுக்கான பயிற்சித் திட்டம். |

பதிவுகளுக்கு
யாழ்ப்பாணம்
நெல்லியடி
சாவகச்சேரி
சுன்னாகம்
இடங்களில்

# DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி (HNB அருகில்) Tel. : 021-227 0243
சுன்னாகம் கே. கே. எஸ். வீதி, JET (NSB அருகில்) Tel. : 021-224 1970


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி சரோஜினிதேவி குணரட்ணம் (கிளி)



கடந்த 07.08.2012
செவ்வாய்க்கிழமை
அமரத்துவம் அடைந்த எமது
குடும்பத் தலைவி அமரர்
திருமதி சரோஜினிதேவி
குணரட்ணம் (கிளி)
அவர்களின் மரணச் செய்தி
கேட்டு தொலைபேசி
வாயிலாகவும், நேரிலும்,
பலவகைகளில் ஆறுதல்
தெரிவித்தவர்களுக்கும்,
உதவிகள் புரிந்த உள்ளங்
களுக்கும் எமது நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

இல 92, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(22521)(9.14)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை துரைரத்தினம்
### (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

வயாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும், கிளானை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும், தற்போது புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை துரைரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று முன்தினம் (03.09.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், கதிர்காமலிங்கம் (ஜேர்மனி) ரவீந்திரன் (ஜேர்மனி) முருகானந்தன் (கனடா) நந்தினி, இளமுருகன் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சித்திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவானிதிசி (ஜேர்மனி) மைதினி (ஜேர்மனி) ஸ்ரீகாயத்திரி (கனடா) பத்மநாதன் (சங்கீத ஆசிரியர் யா/ஸ்ரீகணேசா வித்தியாலயம் சித்தங்கேணி) நளாயினி (ஆசிரியை யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், ஆரபி (ஜேர்மனி) அருண், ஆரூரன் (ஜேர்மனி) அபர்ணா, ஹரன் (கனடா) தர்ஷிகா, ஸ்ரீலவன், தரணிகா, மோகன்ராம், மோகனாங்கி, நாகநர்த்தனன், தர்ஷனா, நாக கீர்த்தனன், ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், சதாசிவம், மார்க்கண்டு, சபாரத்தினம் மற்றும் நாகரத்தினம், நவமணி, காலஞ்சென்ற மனோன்மணி, மற்றும் பாலசிங்கம் , காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை, தங்கம், மனோன்மணி, சின்னத்தம்பி, பொன்னையா, சிவசுப்பிரமணியம், செல்வநாயகி, மற்றும் நிர்மலா, காலஞ்சென்றவர்களான Dr.மாணிக்கம், மணிமேகலை, சிவதாசன் (முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்) மற்றும் நடராசா, வயிரவப்பிள்ளை, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பருத்தித்துறை வீதி, புத்தூர் மேற்கு (நெஸ்லே பால் சேகரிப்பு நிலையம் முன்பாக) அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாளை (06.09.2012) வியாழக்கிழமை 10 மணிக்கு சுன்னாகம் புத்தூர் வீதியில் அமைந்துள்ள கிந்துசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கதிர்காமலிங்கம்(ஜேர்மனி) 004921315233881*
*ரவீந்திரன்(ஜேர்மனி) 00497115773764*
*முருகானந்தன்(கனடா) 0014167564380*

பருத்தித்துறை வீதி,
புத்தூர் மேற்கு.
(நெஸ்லே பால் சேகரிப்பு
நிலையம் முன்பாக)

தகவல் :
குடும்பத்தினர்.

(22522)(9.14)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
25 . 05 . 1939



இறப்பு
17 . 09 . 2011

## கதிரவேலு சுப்பிரமணியம்

ஆயிரம் உறவுகள் வந்தாலும் உங்கள்
பாசத்துக்கு ஈடாகாது அப்பா
முத்தமிழ் தேனெடுத்து முக்கனிச் சாறெடுத்து
இன்ப மழைச்சாரலில் இனிய தமிழ் பேச்செடுத்து
இனிக்க இனிக்க உறவாடிய எம்
இதயத்தின் இமயம் நீதானப்பா
அன்புடன் அரவணைத்து ஆசையுடன் வழிகாட்டி
பார்போற்ற வைத்தீரே எம்மை - அப்பா
இன்னல்கள் பல சுமந்து இறுக்கங்கள் பல ஏற்று
இமையத்தின் கொடி நாட்டிய இதய தீபம் நீதானய்யா - இன்று
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு கடந்தாலும்
எம் நெஞ்சில் பசுமையாக வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்

அமரர் கதிரவேலு சுப்பிரமணியம் அவர்களின் முதலாம் ஆண்டு நிகழ்வையொட்டி அன்னாரது இல்லத்தில் நாளை (05.09.2012) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும் சிராப்த கிரியை நிகழ்வுகளிலும் அதனைத்தொடரந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

44, ஆசாத் வீதி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர், மகன்,
சு. சுதர்சன்

(22449)(14.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இலங்கைத் தமிழர்களுக்கு உதவ இப்போது மற்றொரு சந்தர்ப்பம்

வேண்டாப் பெண்டாட்டியின் கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று பேச்சு வழக்கில் ஒரு வாசகம் நம்மிடையே உண்டு. அத்தகைய ஒரு நிலை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான (ராஜீக) உறவில் உண்டாகி வருவதை அடிக்கடி அவதானிக்க முடிகிறது.

ஆகப் பிந்தி, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தின் பதவிக் காலம் மேலும் ஆறு மாதங்கள் நீடிக்கப்பட்டிருப்பது, மேற்கூறிய வாசகத்தை மேலும் மினுக்கிக் காட்டுவதாக அமைகிறது.

இந்தியத் தூதுவர், இலங்கை அரசுடன் மிகக் கண்டிப்பாக நடந்து கொள்பவர் என்று இந்நாட்டு அரச வட்டாரங்களினால் நோக்கப்படுபவர்; கணிக்கப்படுபவர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான - கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான - ராஜீக விவகாரங்களைக் கையாள்வதில் மிகவும் கூர்மையுடன் செயற்படுபவர் எனவும், தமது நாட்டின் நிலைப்பாட்டை நறுக்கெனக் கூறுபவர் என்றும் சொல்லப்படுவதும் உண்டு.

ஜெனிவாவில், இவ் வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை குறித்து அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை இந்தியா ஆதரித்ததிலிருந்து இந்நாட்டு அரசு, இந்தியா மீதான தனது அடிமனதிலிருந்து கிளம்பும் குமுறலையும் குரோதத்தையும் மிகத் தீவிரமாகச் சாதித்து வருகிறது.

சுருங்கக் கூறின், இந்தியாவுடனான தனது சகல வகையான ராஜீக, ராஜதந்திர உறவுகளிலும் இலங்கை அரசு தனது 'கடுப்பை' வெளிப்படுத்தி வருகிறது. ஆனால் அதற்கு ஈடாக, இந்தியாவின் நிலைப்பாட்டை சற்றேனும் விட்டுக் கொடுக்காமல் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே காந்த் செயற்படுவது, இந்நாட்டு அரசுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் பெரும் சங்கடத்தை உண்டாக்கியுள்ளது.

குறிப்பாக, இலங்கை அரசு, சீனாவின் பக்கம் தனது 'பாரத்தை' மிக அதிக அளவில் வைத்துக்கொண்டு இந்தியாவைத் தொலைவில் வைக்கும் கைங்கரியங்களில் ஈடுபடுவது குறித்து, தூதுவர் காந்த் தீவிரமாகவும் உன்னிப்பாகவும் தமது அரசுக்குத் தகவல்களை வழங்குகிறார் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததன் உள் நோக்கம் குறித்தும், அது இலங்கைத் தமிழர்களின் மீது கொண்ட, அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நன்னோக்கத்துக்கானது அல்ல என்றும் இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம்.

மொத்தத்தில், முழுக்க முழுக்க, கடந்த மார்ச் மாத அமெரிக்கத் தீர்மானத்தை, இந்திய அரசு தனது பிராந்திய பாதுகாப்பு, பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டே ஆதரித்தது.

எனினும் ஏதோ ஒரு வகையில், இந்தியாவின் இச் சுயநல நோக்கத்திற்குள், ஒரு சிறு வாலாக (Appendix) இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் நாடிய துளியைப் பனித்துக் கொள்வதற்கு தமிழக அரசும், அரசியல் தலைவர்களும் அழுத்தம் கொடுக்க வாய்ப்பு உண்டு என்ற சின்னஞ்சிறு கீற்றும் இல்லாமல் இல்லை.

ஆனாலும், இன்னும் இரண்டு மாதங்களில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ள பூகோள கால மீளாய்வுக் கூட்டத் தொடரில், இலங்கையின் செயற்பாடுகளை ஆராயும் மூவர் குழுவில் இந்தியாவும் சேர்க்கப்பட்டிருப்பது இலங்கைக்குக் கலக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அதன் காரணமாக இந்தியாவை மிகத் தூரத்தில் வைக்க இயலாத இரண்டும் கெட்டான் நிலை இலங்கை அரசுக்கு உண்டாகியுள்ளது.

அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு, நவம்பர் மாத மீளாய்வுக் கூட்டத்தொடரில் இந்தியாவை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தூரத்தே வைத்துச் செயற்பட இயலாத சங்கட நிலை இலங்கையை நெருட வைத்துள்ளது.

இவற்றுக்கிடையில் -

தமிழ் நாட்டுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு இலங்கை மக்களை கேட்டுக்கொள்ளும் அளவுக்கு, அறிவுறுத்தும் நிலைக்கு கொழும்பு அரசு வந்திருப்பது மற்றொரு சங்கடமான, ஒரு வகையில் வேண்டத் தகாத பிரதி விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் கொள்ளலாம். அதற்கான வியூகங்களை கொழும்பு அரசு வகுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துச் செயற்பட வேண்டும் என்றும், இனப்பிரச்சினைக்கான உகந்த தீர்வை வழங்குமாறு கொழும்பு அரசை வற்புறுத்த வேண்டும் என்றும் தமிழக அரசியல் தலைவர்கள் இந்திய மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகின்ற போதிலும் -

புதுடில்லி, தனது பிராந்திய நலன், குறிப்பாகச் சீனாவுடன் இலங்கை அரசு மிக நெருக்கமாகி வருவதனை முதலில் தறித்தாக வேண்டும் என்பதற்கு முன்னுரிமை கொடுக்குமே அன்றி, இப்போதைக்குத் தமிழர்களுக்கான தீர்வு குறித்து அதி அக்கறை காட்டாது என்று கொள்வதே பொருத்தம்.

மேலும் தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்கள் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கு உள்ளார்ந்த விருப்பம் கொண்டிருந்தால்-

தமது சொந்த அரசியல்வெற்றிகள், இலாபங்களை இரண்டாவது இடத்துக்குக் கீழே இறக்கி வைத்துவிட்டு-

ஈழத் தமிழ் மக்களின் பிறப்புரிமைகளை ஈட்டிக்கொடுக்கும் ஒரே அணியாகித் திரண்டு, எமது உரிமைகளை அப்பழுக்கின்றித் தரவல்ல வழிமுறைத் திட்டங்களைத் தயாரித்து புதுடில்லி அரசிடம் கையளித்து-

அதனைச் செயலாக்கத் தமது ஒருசேர்ந்த பலத்தையும், பதவிகளையும், அதிகாரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

இவ்வேளையே அதற்கான பொருத்தமான அரிய சந்தர்ப்பம். அவ்வாறு செயற்பட மனம் உண்டானால் உடனடியாக அவர்கள் ஓரணி சேரவேண்டும். செயலில் காட்டுவார்களா?

அடம்பன் கொடி, தனித்துத் தனித்து இருக்கும் போது இல்லாத பலம், அது திரண்டபின்னரே உண்டாகிறது. இதனை மனதில் கொண்டு, தமது உள்வீட்டுப் பேதங்களைக் களைந்தெறிந்து, ஒன்றுபட்டுச் செயற்பட தமிழக அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும். ஈழத் தமிழர்களின் மன எழுச்சி இதுவே ஆகும்.

# சுவிஸ் வங்கி வைப்பாளர்களை கண்டறிய முடியவில்லை

## கைவிரிக்கிறது இலங்கை மத்திய வங்கி

கொழும்பு,செப் 5

சுவிஸ் வங்கிகளில் யார் யார் பணம் வைப்புச் செய்துள்ளார்கள் அல்லது கணக்குகளைப் பேணி வருகின்றார்கள் என்பது தெரியாது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.ஏனெனில் சுவிஸ் வங்கிகளில் இரகசியமான முறையிலேயே இலங்கையர்கள் பணம் வைப்புச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் இந்தப் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சுவிஸ் வங்கிகளில் பணம் வைப்புச் செய்தோர் பற்றிய எந்த விதமான தரவுகளும் கிடையாது என மத்திய வங்கியின் அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பணம் அனுப்பி வைக்க முடியும் என தெரிவித்துள்ளது.

ஏதேனும் முறைப்பாடுகள் செய்யப்பட்டால் மட்டுமே இது குறித்து விசாரணை நடத்த முடியும் என அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொறுப்பாளர் சீ.எச்.ஓ சந்திரசோம தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் பல மில்லியன் சுவிஸ் பிராங்குகளைச் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்துள்ளதாக அண்மையில் முன்னாள் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த குற்றம் சுமத்தியிருந்தார்.

2002ஆம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் 22.9 மில்லியன் சுவிஸ் பிராங்குகளை வைப்புச் செய்திருந்ததாகவும், 2010ஆம் ஆண்டில் இந்தத் தொகை 111 மில்லியனாக உயர்வடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

2005ஆம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்திருந்த மொத்தத் தொகை 177 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் என அவர் தெரிவித்திருந்தார்.

2004ஆம் ஆண்டு சுனாமி பேரிடர் ஏற்பட்டதன் பின்னர் பெரியளவில் வெளிநாட்டுப் பணம் நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றது என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.இந்தப் பணம் தனிப்பட்ட நபர்களின் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் எழுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (த)

# 3 இலட்சம் பரீட்சார்த்திகள் அ. அட்டைக்கு விண்ணப்பம்

கொழும்பு,செப் 5

இம்முறை ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள சுமார் மூன்று இலட்சம் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளதாக ஆள்பதிவு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக ஆள்பதிவு ஆணையாளர் நாயகம் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 16 வயது பூர்த்தியாகும் பாடசாலை பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்குப் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த ஜூலை மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. உரிய கால அவகாசத்துக்குள் பல்வேறு காரணங்களினால் விண்ணப்பிக்க முடியாமற்போன பாடசாலை பரீட்சார்த்திகள் தாமதிக்காது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஆள்பதிவு ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

(த)

# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் முற்றாக வற்றியது தண்ணீர்

கொழும்பு,செப் 5

மலையகத்தின் நீரேந்துப் பகுதிகளுக்கு குறித்த காலத்தில் மழை கிடைக்காத காரணத்தினால் மின் உற்பத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு நீரைச் சேமித்து வைத்து விநியோகிக்கும் பல நீர்தேக்கங்கள் நீரின்றி காணப்படுகின்றன.

மகாவலி கங்கையில் அமைக்கப்பட்டுள்ள விக்டோரியா நீர் தேக்கமும் நீரின்றிக் காணப்படுகின்றது. இந்த நீரின்றி காணப்படும் தரையில் வளர்ந்துள்ள சிறிய புற்களை உணவுக்குப் பெற்றுக்கொள்ள அதிகளவிலான கால்நடைகள் இங்கு சுற்றித் திரிகின்றன.

இந்த விக்டோரியா நீர் தேக்கத்தினுள் அமிழ்ந்து போன பழைய கட்டடங்களின் இடிபாடுகள், பாலங்கள் என்பவற்றைக் காண்பதற்காக அதிகளவிலான உல்லாசப் பயணிகள் மற்றும் கண்டி - மகியங்கனை வீதியில் பயணிப்பவர்களும் விக்டோரியா நீர் தேக்கப் பகுதிக்கு வந்து செல்கின்றனர்.

தற்போது சிறியளவிலான மழை வீழ்ச்சி காணப்பட்ட பொழுதிலும் இந்த இடங்களுக்கு உல்லாச பயணிகள் வருவதற்கு எந்த விதத்திலும் இந்த மழை பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இந்த மழை இன்னும் ஒரு மாத காலத்துக்காவது கிடைக்கப்பெற்றால் மட்டுமே இந்த இடங்களில் நீர் நிரம்பும் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

(த)

# தோட்ட தொழிற் சேவை சங்கம் புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானம்

கொழும்பு,செப் 5

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை தோட்ட தொழிற் சேவைச் சங்கம் பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளது.

தொழிற்சங்கப் பிரச்சினைகள் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் முன்வைத்து பகிஸ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாக தோட்ட தொழிற் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

விசேடமாக சம்பள நிலுவை வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவுள்ளதாக தோட்ட தொழிற் சேவைச் சங்க தலைவர் தம்மிக்க ஜயவர்த்தன தெரிவித்தார்.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரி பணிபகிஸ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக தோட்ட தொழிற் சேவை சங்க தலைவர் மேலும் தெரிவித்தார்.

(த)

# ரஜரட்ட பல்கலையின் சில பீடங்களுக்கு விரிவுரையாளர்கள் விண்ணப்பிப்பதில்லை

கொழும்பு,செப் 5

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவதனால் சில பீடங்களின் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு யாரும் விண்ணப்பிப்பதில்லையென ரஜரட்ட பல்கலைக்கழக சங்கங்கள் கூறியுள்ளன.

'சமூக விஞ்ஞானபீடம் மற்றும் முகாமைத்துவ பீடம் என்பன கல்விசார் வாண்மையாளர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக வருடத்தில் மூன்றுமுறை விளம்பரம் செய்தபோதும் எவரும் விண்ணப்பிக்கவில்லை என ரஜரட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் கூறியுள்ளது.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் ஒரேயொரு பேராசிரியர் மட்டும் இருப்பதாகவும் விரிவுரையாளர்கள் போதியளவில் இல்லை எனவும் ரஜரட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.டி.என்.கே. பலிஹேன கூறினார்.

''ஒரு விண்ணப்பம் கூட கிடைக்கவில்லை. அதிக தூரம், பயணத்தில் உள்ள சிரமங்கள் என்பனவற்றுடன் சம்பளம் போதாமல் இருப்பதுவும் இதற்கான காரணம்'' என பலிஹேன கூறினார்.

அநேகமான சிரேஷ்ட விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கூடிய வருமானம் கிடைக்கும் ஆலோசனை சேவைகளில் ஈடுபடுகின்றனர். அதிக நேரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொள்வதால் அவர்களால் ஆலோசனை சேவைகளில் ஈடுபட முடியாது என அவர் கூறினார்.

''இதனால்தான் நாம் கூடிய சம்பளம் கோரி வருகின்றோம். பல்கலைக்கழகத்தில் கற்பிப்பதனால் குறைந்த வருமானமே கிடைப்பதனால் எம்மால் புதியவர்களை நியமிக்கவும் தற்போது உள்ளவர்களைத் தொடர்ந்து வைத்திருக்கவும் முடியாது உள்ளது என அவர் கூறினார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் நிறைந்தது துணுக்காய் கல்வி வலயம்

## மாணவர்களின் கல்வி நிலையும் மோசம்

கிளிநொச்சி,செப்.5

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 60 பாடசாலைகளில் 48 பாடசாலைகள் அதிகஷ்ட மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு மொத்தமாகவுள்ள 60 பாடசாலைகளில் 43 பாடசாலைகள் அதிகஷ்டப் பிரதேசத்திலும், ஐந்து பாடசாலைகள் கஷ்டப் பிரதேசத்திலும் அமைந்துள்ளன. சுமார் 7 ஆயிரத்து 886 மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றனர்.

**உட்கட்டுமானங்கள் உள்ள போதிலும் போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளென வகுக்கப்பட்டுள்ளன.**

இவர்களுள் அதிகஷ்ட மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நிலை மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. உட்கட்டுமான வசதிகள், சீரான வீதிகளினூடான போக்குவரத்து வசதிகள், வைத்திய வசதிகள், தபால் விநியோக வசதிகள், சுகாதார வசதிகள், ஆசிரியர் வளம் என்பன இல்லாத பாடசாலைகள் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளென வகுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை உட்கட்டுமானங்கள் உள்ள போதிலும் போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளென வகுக்கப்பட்டுள்ளன.

உட்கட்டுமானங்கள் என்பதை எடுத்துக் கொண்டால் பௌதிக வளங்கள், மின்சாரம், தொலைபேசி, குடிதண்ணீர், விடுதி வசதிகள், ஆசிரியர் வளம் என்பன அடங்குகின்றன.

இத்தகைய பாடசாலைகளின் உட்கட்டுமான வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்பவற்றைச் சீர்செய்வதன் மூலமாக மிகவும் பின்தங்கிய இந்தப் பிரதேச மாணவர்களின் கல்வி நிலையை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர முடியுமெனத் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் தெரிவித்தார். (க-6)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய பலர் கிளிநொச்சி ராணுவத்திடம் சிக்கினர்

கிளிநொச்சி, செப்.5

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நஞ்சுண்டகாடு, செல்வாநகர், உதயநகர், பரந்தன் ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திரங்களின்றி சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிய சுமார் 15 இற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்ற ஆறு டிப்பர் வாகனங்களையும், ஐந்து உழவு இயந்திரங்களையும் பொறுப்பேற்றுக் கொண்ட பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் சந்தேக நபர்களையும், வாகனங்களையும் முன்னிலைப் படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழும் செயற்பாடுகள் மிக மோசமான வகையில் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் சூழலுக்குப் பெரும் தீமை விளையக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலும் ஆற்றோரங்களில் மணல் அகழ்வு காரணமாகப் பெரியளவில் பாதிப்புக்கள் ஏற்பட்டுவருகின்றன.

அத்துடன் கடற்கரையோரங்களில் மணல் அகழ்வதால் கடல் நீர் ஊர்மனைக்குள் புகுந்து உவராபத்தை ஏற்படுத்தும் அபாய நிலையும் உருவாகியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# இடையில் இறங்கினாலும் வவுனியாக் கட்டணமே

## தனியார் பஸ்களில் இறுக்கம்

முல்லைத்தீவு, செப்.5

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் தனியார் பஸ்களில் பயணிக்கும் இடைப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பயணிகளிடமும் வவுனியாவுக்கான கட்டணமே அறவிடப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்களில் கடமையாற்றும் நடத்துநர்கள் 'சீற் இருக்கு வாங்கே வாங்கோ' எனப் பயணிகளைக் கூவி அழைத்து ஏற்றுகின்றனர். ஆனால் இவர்கள் ஆசனத்திலே அமர்ந்து பயணிக்கும் போது வவுனியாவுக்கான கட்டணமே இவர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது.

மேலும் மீதிப் பணத்தைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த பஸ்களுக்குப் பொறுப்பான தனியார் பஸ் சங்கத்தினர் இந்த விடயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவிக்கின்றனர். (க-500)

## அதிசயத்தைப் பார்த்தீர்களா...?



வவுனியா வடக்கு நெடுங்கேணியில் ஒரு தேங்காயிலிருந்து மூன்று தென்னங் கன்றுகள் உருவாகி வளர்ந்து வருகின்றமையை இங்குள்ள மக்கள் ஆர்வத்துடன் சென்று பார்த்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தேங்காய் நாற்று மேடையை அமைத்துப் பராமரித்து வருகின்றார். இதில் தேங்காயொன்றிலிருந்து மூன்று கன்றுகள் உருவாகி வளர்ந்து வருகின்றன. இயற்கையின் இந்த அதிசயத்தை இங்குள்ள மக்கள் ஆர்வத்துடன் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (க-435)

## ஒட்டுசுட்டானில் திறக்கப்படாத புதிய தபாலகம்

முல்லைத்தீவு, செப்.5

ஒட்டுசுட்டான் தபாலகம் தொடர்ந்தும் வசதிக் குறைவான நிலையில் தனியார் வீடொன்றில் இயங்கி வருவதால் இந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதற்கெனப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் ஏதோ காரணங்களால் திறக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்தத் தபாலகம் தொடர்ந்தும் தனியார் வீடொன்றிலேயே இயங்கி வருகின்றது.

மேலும் தற்போது இயங்கி வரும் தபாலகம் கிராமத்திலிருந்து தொலைவில் அமைந்துள்ளதால் மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆகவே புதிய கட்டடத்தில் இதனை இயங்கச் செய்வதற்கு ஆவன செய்யுமாறு ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# கரணம் தப்பினால் மரணம் பாலம் அமைப்பார்களா?

## முல்லை ஜீவநகர் மக்களின் அவலம்



நெடுங்கேணி, செப்.5

முல்லைத்தீவு மாவட்டம் ஜீவநகர் கிராம மக்களில் ஒரு பகுதியினர் பெரும் அச்சத்துடன் போக்குவரத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் செல்வதற்கான பாதை முத்துஐயன்கட்டு இடதுகரையில் பிரதான நீர் செல்லும் வாய்க்காலாக இருப்பதனால் இதற்கு மேலாகப் பாலம் அமைக்கப்படாத நிலையில் போக்குவரத்து இடையூறுகள் தோன்றியுள்ளன.

இதனை அவதானித்த இந்தப் பகுதி இராணுவத்தினர் மின்சாரத் தூணொன்றை வாய்க்காலுக்கு மேலாகப் போட்டுள்ளனர். தற்போது இப்பகுதி மக்கள் இதனையே தமது போக்குவரத்துப் பாதையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் இதுவோர் உயிராபத்தை ஏற்படுத்தும் பயணமாகவே மக்களுக்கு அமைந்துள்ளது. சிறுவர்கள், முதியவர்கள், நோயாளிகள், பெண்கள் எனப் பலரும் மிகுந்த அச்சத்துடன் இதில் பயணத்தை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

தவறி வீழ்ந்தால் உயிராபத்துக்கள் ஏற்படும் அவல நிலையே இங்கு காணப்படுகின்றது. உரிய அதிகாரிகள் இதனைத் தமது கவனத்தில் கொண்டு வாய்க்காலுக்கு மேலாகப் பாலத்தை அமைக்க வேண்டுமென பாதிக்கப்பட்டு வரும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-435)

## முதியோர் அடையாள அட்டை புறக்கணிப்பு ஏன்?

அக்கராயன், செப்.5

முதியோர் அடையாள அட்டைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென நெடுங்கேணிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகள், வங்கிகள் ஆகிய இடங்களில் முதியவர்களின் அடையாள அட்டைகள் புறக்கணிப்படுவதாக முதியவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை முழுவதும் முதியோர் அடையாள அட்டைகளுக்கு மதிப்பு அளிக்கப்படல் வேண்டும். தேசிய அடையாள அட்டைகளுக்கு நிகரானவையே முதியோர் அடையாள அட்டைகள் என்பதை எல்லோரும் விளங்கிக் கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# கசிப்பு, கோடா வைத்திருந்த இருவருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பிணை

கிளிநொச்சி, செப்.5

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் 240 போத்தல் கசிப்புத் தயாரிப்பதற்கான கோடா மற்றும் இரண்டு போத்தல் கசிப்பு என்பவற்றை வைத்திருந்த இருவரை ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**குறித்த சந்தேகநபர் சுற்றவாளி என மன்றுக்குத் தெரிவித்ததையடுத்து பூர்வாங்க விசாரணைக்குத் திகதியிடப்பட்டதுடன் அவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும் 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்ல மன்று அனுமதியளித்துள்ளது.**

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 240 போத்தல் கோடாவைத் தமது உடைமைகளுடன்வைத்திருந்த ஒருவரைக் கடந்த 31 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

குறித்த சந்தேக நபர் சுற்றவாளி என மன்றுக்குத் தெரிவித்ததையடுத்து பூர்வாங்க விசாரணைக்குத் திகதியிடப்பட்டதுடன் அவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும் 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்ல மன்று அனுமதியளித்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் இரண்டு போத்தல் கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட சந்தேக நபரும் தாம் சுற்றவாளி என மன்றுக்குத் தெரிவித்ததையடுத்து பூர்வாங்க விசாரணைக்கு தவணையிடப்பட்டதுடன் 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் இவர் செல்வதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் சங்கத்துக்கு வழங்கிய கடைகள் தவறான வழியில் தனியாருக்குக் கைமாற்றம்

## அவற்றை மீளப் பெறுகிறது பிரதேச சபை

வலி.வடக்கு, செப்.5

சுன்னாகம் புதிய சந்தைப் பகுதியில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் பிரதேச சபையால் வர்த்தக தொழிற்பாட்டுக்கென வழங்கப்பட்ட கடைகள் தவறான விதத்தில் தனியாருக்குக் கைமாறியுள்ளமையால் உரிய கடைகளை மீளப் பெறச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட நான்கு கடைகள் ஒப்பந்தத்தை மீறித் தனியாருக்குப் பெரும் தொகைப் பணம் பெற்றுக் கொண்டு கைமாற்றம் செய்யப்பட்டமையால் உரிய கடைகளைப் பிரதேச சபை கையேற்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற சபையின் கூட்டத்தில் உறுப்பினர்களால் கருத்து முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு இது தொடர்பான கடிதம் சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தவிசாளர் தெரிவித்தார்.

உரிய கடைகள் மீளப் பெறப்படும் சந்தர்ப்பத்தில் அவை கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு மீண்டும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படடது. (த-86)

## விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப்.5

வேலணையில் வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரையும் ஒருநாள் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. வேலணை 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு வரின் வீடு மீது நேற்று முன் தினம் இரவு இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுச் சேதம் விளைவிக்கப்பட்டது.

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவது யார்?

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் காரசாரமான விவாதம்

தென்மராட்சி, செப்.5

இவ்வருடம் காலபோக நெற்செய்கையின் போது கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது விவசாய சம்மேளனங்களா? அல்லது சாவகச்சேரி பிரதேச சபையா? என தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளது.

காலபோக நெற்செய்கைக்கான ஆயத்தப்பணிகள் ஆரம்பமாகியுள்ள வேளையில் கட்டாக்காலி கால்நடைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க யார் முன்னிற்பது என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கு விவசாய சம்மேளனத்துக்கும் பிரதேச சபையினருக்குமிடையில் கடுமையான விவாதம் இடம்பெற்றது.

இந்தநிலையில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் மற்றும் நெற்செய்கையாளர்கள் ஆகியோருக்கு விரைவில் கூட்டம் நடத்தப்பட்டு முடிவு எடுக்கப்படும் என கூறி இவ்விடயத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.(த-9)

## 25,000 தண்ணீர் போத்தல்கள் சென்றவாரம் நயினையில் விற்பனை

### சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பே காரணம்

யாழ்ப்பாணம், செப்.5

நயினாதீவில் கடந்த வாரத்தில் மட்டும் 25 ஆயிரம் குடிதண்ணீர் போத்தல்கள் விற்பனை செய்யப்பட்டதாக பிரதேச வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பே இதற்குக் காரணம்எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் நயினா தீவுக்குப் படையெடுத்தனர்.

கடும் வெப்பம் மற்றும் வறட்சியான காலநிலை காரணமாக சுற்றுலாப் பயணிகள் நயினாதீவில் உள்ள வர்த்தக நிலையங்களில் குடிதண்ணீர் போத்தல்களை முண்டியடித்துக் கொண்டு கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினார்கள்.

இதனை அடுத்து சகல வர்த்தக நிலையங்களிலும் குடிதண்ணீர் போத்தல்கள் முற்றாக விற்றுத் தீர்ந்துள்ளன. கடந்த வாரத்தில் மட்டும் சுமார் 25 ஆயிரம் தண்ணீர்ப் போத்தல்கள் விற்றுத் தீர்ந்துள்ளன.

இதனையடுத்து நேற்று யாழ்.நகரில் இருந்து பெரும் தொகையான குடிதண்ணீர் போத்தல்கள் நயினா தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (த-17)

## மண்டைதீவுக்கான குடிதண்ணீர் விநியோகம் விரைவில் சீராகும்

### நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.5

மண்டைதீவுப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்தை உடனடியாக சீர் செய்வதற்கான ஏற்பாடுகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அல்லைப்பிட்டி நன்னீர் கிணற்றில் இருந்து குழாய் மூலம் கடலுக்கு ஊடாக இந்தப் பிரதேசத்துக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

கடலுக்கு ஊடாகப் பொருத்தப்பட்ட குடிதண்ணீர் குழாய்கள் சேதப்படுத்தப்பட்டமையால் பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது வறட்சியால் கடலோரப் பகுதியில் நீர் மட்டம் வற்றிச் சென்றுள்ளது. இதனைப் பயன்படுத்தி உடனடியாகக் குழாய்களை கடலுக்கு ஊடாக அமைப்பதற்கான நடவடிக்கையை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் இந்தப் பகுதிக்கு விரைவில் குழாய் மூலமான குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேச மக்களுக்குத் தற்போது பவுசர் வாகனம் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (த-17)

## கைகலப்பு முற்றியதால் குடும்பஸ்தருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், செப்.5

இரண்டு பேருக்கு இடையிலான முரண்பாடு கைகலப்பாக மாறியதால் குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச்சம்பவம் வேலணை துறையூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இந்திரவேலு சிவபாலன் (வயது-44) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கடற்றொழிலாளியான சிவபாலன் வெளியே சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இடைமறித்த ஒருவர் அவருடன் முரண்பட்டுள்ளார். அதனையடுத்தே இவருவருக்கும் இடையே முரண்பாடு அதிகரித்து வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் தனது வீட்டுக்குச் சென்று உறவினர்கள் மூலமாக வங்களாவடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

## சந்தேகநபரை வைத்தியசாலையில் துரத்திப் பிடித்தனர் பொலிஸார்

வடமராட்சி, செப்.5

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குள் வைத்து பொலிஸார் ஓட ஓடத் துரத்திப் பிடித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பகல் சுமார் 11 மணியளவில் நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஊழியராகப் பணியாற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த கந்தையா தவயோகநாதன் என்பவரே துரத்திக் கைது செய்யப்பட்டவராவார்.

இந்தச் சந்தேக நபர் மீது அவரது மனைவி குமுதினி அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பாக அவர் மீது பிடியாணை உத்தரவு அக்கரைப்பற்று நீதிமன் றத்தினால் விடுக்கப்பட்டிருந்தது.

பருத்தித்துறை பொலிஸார் இந்தச் சந்தேக நபரைத் தேடி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலைக்குச் சென்றபோது பொலிஸாரைக் கண்டதும் சந்தேக நபர் வைத்திய சாலை வளவுக்குள் கட்டடங்கள் ஊடாகச் சுற்றிச் சுற்றி ஓடத் தொடங்கினார். பொலிஸாரும் விடாது ஓட ஓட அவரை துரத்திச் சென்று கைது செய்தனர்.

கைதான சந்தேக நபர் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது உமக்கு எதிராக அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதா என நீதிபதி அவரிடம் கேட்டார்.

அதற்கு அவர், அப்படி ஒன்றும் இல்லை. எனக்கு அக்கரைப்பற்றுத் தெரியாது. வழக்கு எதுவும் இல்லை எனப் பதிலளித்தார்.

குமுதினி யார் எனக் கேட்ட போது அவர் தனது மனைவி என்றும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் சந்தேக நபர் பதிலளித்தார்.

இதனையடுத்து சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதிமன்றில் முற்படுத்தி பின்னர் எதிர் வரும் 6 ஆம் திகதி சந்தேக நபரை மீண்டும் பருத்தித் துறை நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிபதி சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டார். (த-8)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு ரூ.40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், செப்.5

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்றவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. தீவகத்தைச் சேர்ந்த சந்தேகநபர் டிப்பர் வாகனத் தில் உரிய அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற போதே பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் சந்தேகநகர் முற்படுத்தப்பட்டார். விசாரணையின்போது சந்தேகநபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. வாகன உரிமையளருக்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## கால்நடை வளர்ப்போருக்கு யாழில் இம்முறை கௌரவம்

யாழ்ப்பாணம், செப்,5

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர், பண்ணையாளர்கள் இம்முறை கௌரவிக்கப் படவுள்ளனர் என்றுயாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் பண்ணையாளர்களை கௌரவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் (யாழ்கோ) மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்திற்கு தினமும் கூடுதலான பசுப்பாலை விநியோகிக்கும் பண்ணையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

தற்போது குடாநாட்டில் பசுப்பாலின் நுகர்வு அதிகரித்துள்ளது. தினமும் 4 ஆயிரம் லீற்றர் வரையான பசுப்பால், பால் விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படு கிறது.

இந்த நுகர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.- என்றார். (த-17)

## கடல் ஏரி மண் பாதையால் பயனடைந்த சந்நிதி பக்தர்கள்

யாழ்ப்பாணம், செப்.5

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவுக்கெனத் தொண்டமானாறு கடல் ஏரியில் வலி.கிழக்குப் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மண் பாதையால் பக்தர்கள் பெரிதும் நன்மையடைந்ததாக சபையின் உப தலைவர் தர்மலிங்கம் தெரிவித்தார்.

தொண்டமானாறு கடல் ஏரியை ஊடறுத்து அமைக்கப்பட்ட இந்த மண் பாதையைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் சந்நிதிக்குச் சென்றனர். இதனால் அவர்களுடைய போக்குவரத்து இலகு படுத்தப்பட்டுள்ளது. உற்சவ காலத்தில் இந்தப் பாதை மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. சபையின் இந்தச் செயற்பாடு பாராட்டுக்குரியது எனவும் உப தலைவர் கூறினார்.

அதேவேளை தற்காலிகமாக அமைக்கப்பட்ட இந்த மண்பாதையை விரைவில் அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (த-17)

## வலி.கிழக்கு வீதிகளுக்கு மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், செப்.5

வலி.கிழக்கு பிரதேச சபை மேலும் ஒரு தொகுதி வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சபைக்கு உட்பட்ட பகுதியில் இரவில் மின் வெளிச்சம் தேவைப்படும் வீதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த வீதி விளக்குகளைப் பொருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் அநேகமான வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படாமையினால் இரவில் இந்த வீதிகளூடாகப் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்.

இந்தப் பிரதேசத்தில் சில பிரதான வீதிகள் அகலிக்கப்பட்டும் உள்ளன.

சில வீதிகளின் ஓரங்கள் புனரமைப்புக்காக வெட்டப்பட்டும் வருகின்றன. வெட்டப்பட்ட இந்தப் பகுதிகள் ஊடாக இரவில் பயணம் செய்யும் மக்கள் அவற்றில் தவறிவிழுந்து காயங்களுக்கும் இலக்காகி வருகின்றனர். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் இருந்து வெளியேற சீனாவிடம் இந்தியா வலியுறுத்து

## பாதுகாப்பு அமைச்சர் தகவல்



**ஜம்மு காஷ்மீரில் 1962 ஆம் ஆண்டிலிருந்து 38 ஆயிரம் சதுர கிலோ மீற்றரை சீனா ஆக்கிரமித்திருக்கிறது**

டில்லி, செப். 5

பாகிஸ்தான் ஆக்கிரமித்திருக்கும் காஷ்மீர்ப் பகுதியில் இருந்து சீனா வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் இதுதொடர்பாக அவர் எழுத்துபூர்வமாகப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரத்தில் சீனாவின் செயற்பாடுகள் குறித்து இந்தியாவின் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த தொகுதியில் எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எல்லைப் பகுதிகளிலும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் உள்கட்டமைப்புப் பணிக்ளை சீனா மேற்கொண்டு வருவதை இந்தியா அறிந்திருக்கிறது. ஆனால் இந்திய எல்லைக்குள் கடந்த 3 ஆண்டுகளாக சீனா ஊடுருவல் எதனையும் நிகழ்த்தவில்லை.

ஜம்மு காஷ்மீரில் 1962 ஆம் ஆண்டிலிருந்து 38 ஆயிரம் சதுர கிலோ மீற்றரை சீனா ஆக்கிரமித்திருக்கிறது என்றும் பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீர்ப் பகுதியிலிருந்து 5180 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை சீனாவுக்கு பாகிஸ்தான் கொடுத்திருக்கிறது.

நாட்டின் கிழக்குப் பகுதியில் அருணாசலப் பிரதேசத்தில் 90 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பு தங்களுக்குரியது என்று சீனா உரிமை கொண்டாடி வருகிறது-என்றார்.

# நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டை ரத்து செய்யும் எண்ணமில்லை

## மன்மோகன் தெரிவிப்பு

டில்லி, செப். 5

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டை ரத்துச் செய்யும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதிபடத் தெரிவித்தார்.

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் ஏற்பட்ட முறைகேடு தொடர்பாக தினமும் நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் முடக்கப்பட்டு வருகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி, 142 நிலக்கரிச் சுரங்கங்களின் ஒதுக் கீட்டை ரத்துச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைச் சந்திக்கத் தயாராக உள்ளேன் என்று மூத்த அமைச்சர்களிடம் கூறியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த விடயத்தில் பா.ஜ.க. கேட்கும் கேள்விகள் அனைத்துக்கும் பதிலளிக்க தான் தயாராக இருப்பதாகவும், அதே சமயம் சுரங்க ஒதுக்கீட்டை உடனடியாக இரத்து செய்யும் எண்ணம் தனக்கு இல்லை எனவும் பிரதமர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் ஸ்ரீ பிரகாஷ் ஜெய்ஸ்வால் கூறுகையில், நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு விவகாரம் குறித்து சிபிஐயும், அமைச்சகங் களுக்கிடையேயான குழுவும் விசாரித்து வருகின்றன.

இந்தக் குழு தனது அறிக்கையை செப்ரெம்பர் 15 ஆம் திகதி அளிக்க வுள்ளது.

அதன் அறிக்கை கிடைத்த பின்பே, சுரங்க ஒதுக்கீட்டை இரத்து செய்வது தொடர்பாக முடி வெடுப்போம் என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## நிலக்கரி சுரங்க முறைகேடு

# 5 நிறுவனங்கள் மீது சி.பி.ஐ. வழக்கு

நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக சுரங்க உரிமம் பெற்ற 5 நிறுவனங்கள் மீது சி.பி.ஐ. நேற்று வழக்குப் பதிவு செய்துள்ளது. டில்லி, மும்பை, கொல்கத்தா உள்ளிட்ட 10 நகரங்களில் 30 இடங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர்.

நிலக்கரிச் சுரங்க உரிமங்களை ஏலம் விடாமல் குறிப்பிட்ட தொகைக்கு வழங்கியதால் மத்திய அரசுக்கு ஒரு லட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக மத்திய தலைமை கணக்கு அதிகாரி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியில்லாத நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பேற்று நிலக்கரி சுரங்க அமைச்சகப் பொறுப்பை வகித்து வந்த பிரதமர் மன்மோகன்சிங் பதவி விலக வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சி தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 9 தினங்களாக நாடாளுமன்றத்தை முடக்கி வருகின்றன. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 7 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகிறது. எஞ்சிய 4 நாள்களையும் முடக்க பா.ஜ.க திட்டமிட்டுள்ளது.



குளச்சல் கடல் பகுதியில் அதிகாலை ஏற்பட்ட கடல் சீற்றத்தில் சுனாமி போன்று பேரலைகள் எழுந்து துறைமுகப் பணிக்காக கட்டப்பட்டிருந்த தடுப்புச்சுவர் மற்றும் மண் அள்ளும் இயந்திரங்களைப் புரட்டிப் போட்டது

# சாய்பாபாவின் சொத்துகள் யாருக்கு? வெளியானது அவரே எழுதிய உயில்



புட்டபர்த்தி, சத்யசாயி பாபா டிரஸ்டுக்கு, பக்தர்கள் வழங்கிய சொத்துகள், காணிக்கை பொருள்கள் அனைத்தும், மக்களின் சேவைக்குச் சொந்தமானது என்று சத்ய சாய்பாபா, 'பிரகடனப் பத்திரம்' ஒன்றை எழுதி வைத்துள்ளார்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என, வாழ்ந்து வந்த சாயிபாபா, புட்டபர்த்தியில் உள்ள அசையும், அசையா சொத்துகள் அனைத்தும், மக்களின் உபயோகத்துக்குச் சேர வேண்டும் என்று 1965 ஆம் ஆண்டு எழுதி வைத்துள்ள பிரகடனப் பத்திரத்தின் மூலம், இந்தத் தகவல் வெளியாகி உள்ளது.

பக்தர்களே தனக்கு வாரிசுகள் என்று நினைத்திருந்த சாய்பாபா, மறைந்து ஓராண்டுக்குப் பின், இப்போது இந்தத் தகவல் வெளியாகி உள்ளது. இத்தகவல், ஈ-மெயில் வடிவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (வ)

# காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் டில்லியில் 20 இல் நடக்கும்

புதுடில்லி, செப். 5

காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி டில்லியில் பிரதமர் தலைமையில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் கண்டிப்பை அடுத்து காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தைக் கூட்ட பிரதமர் உத்தரவிட்டுள்ளார். காவிரி ஆணையத்தை உடனே கூட்டக்கோரி முதல்வர் ஜெயலலிதா ஏற்கனவே பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆணையத்தை உடனே கூட்ட நடவடிக்கை எடுக்காததால் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது.

கர்நாடகத்திடமிருந்து தமிழகத்திற்கு உரியநீரைப் பெற்றுத் தர மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது. தமிழகத்தின் மனுவை விசாரித்த நீதிமன்றம், 7 ஆம் திகதிக் குள் திகதியை அறிவிக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

இதனையடுத்து பிரதமர் தலைமையில் எதிர்வரும் 19 அல்லது 20 ஆம் திகதி டில்லியில் காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# சிதம்பரத்தின் மகன் கார்த்தி மீது நில அபகரிப்பு முறையீடு



சென்னையை அடுத்த முட்டுக்காடு அருகே ரூ.100 கோடி மதிப்பிலான நிலத்தை அபகரித்துவிட்டதாக, மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி மீது முறைப்பாடு எழுந்துள்ளது.

முட்டுக்காடு அருகே உள்ள கரிக்காட்டுக்குப்பம் மீனவர்கள் சென்னை மாநகர காவல்துறை ஆணையரிடம் முறைப்பாட்டு மனு அளித்தனர்.

மீனவர்கள் வழக்கமாக மீன்பிடிக்கச் செல்லும் வழியில் உள்ள இடத்தை போலி ஆவணங்கள் மூலம் ஆக்கிரமித்து, சிதம்பரம் மகன் கார்த்தி சுவர் எழுப்பியுள்ளதாக அந்த முறைப்பாட்டு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மீன்பிடிக்கச் செல்ல முடியாமல் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே நிலத்தை ஆக்கிரமித்த ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், 15 ஆண்டுகளுக்கு முன்னரே கார்த்தி சிதம்பரம் மீனவர்கள் குறிப் பிட்ட அந்த இடத்தை விலைக்கு வாங்கிவிட்ட தாகவும், இது பொய்யான குற்றச்சாட்டு என்றும் அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

# இலங்கை இராணுவத்துக்கான பயிற்சியை நிறுத்துங்கள்

## அந்தோனிக்கு ராஜா கடிதம்



தமிழகத்தில் இலங்கை இராணுவத்துக்கு அளிக்கப்படும் பயிற்சியை உடனே நிறுத்தக்கோரி மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள் ளதாவது:-

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவத்தினர் இனப்படுகொலையைச் செய்தனர். சொல்லமுடியாத அளவுக்கு போர்க் குற்றங்களைப் புரிந்து, மனித உரிமைகளை அந்தநாட்டுப் படையினர் மீறியுள்ளனர். இதை ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த நிலையில், இலங்கை இராணுவத்தினருக்கு அளித்து வரும் பயிற்சி தொடரும் என்றவாறு பாதுகாப்பு இணை அமைச்சர் பல்லம் ராஜு அறிவித்திருப்பது தமிழக மக்களின் உணர்வுகளை அவமதிக்கும் வகையில் உள்ளது.

இதை கருத்தில் கொண்டு, உடனடியாக இலங்கை இராணுவத் துக்கு இந்தியாவில் அளித்து வரும் பயிற்சியை நிறுத்த வேண்டும்-என்று அதில் கேட்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. படைகளை மீளப் பெறும் திட்டம் ரோம்னியிடம் இல்லை

## குற்றஞ்சாட்டுகிறார் ஒபாமா



ஆப்கானில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்ப அழைப்பது குறித்த எந்த திட்டமும் மிட் ரோம்னியிடம் இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக குடியரசுக் கட்சி சார்பில் மிட் ரோம்னியும், ஜனநாயகக் கட்சி சார்பில் ஒபாமாவும் போட்டியிடுகின்றனர். ரோம்னியின் வெளியுறவுத்துறை கொள்கைகளை ஒபாமா கட்சியினர் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர். இந்நிலையில் கொலராடோ மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தல் பிரசாரத்தில் ஒபாமா தெரிவித்ததாவது:-

எமது படைகளை 2014 ஆம் ஆண்டுக்குள் திரும்ப அழைக்க நாம் தீர்மானித்துள்ளோம். கடந்த வாரம் டாம்பா நகரில் ரோம்னி பிரசாரம் செய்தபோது இது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த மாதத்தின் இறுதியில் ஆப்கனி லிருந்து நாடு திரும்ப உள்ள 33 ஆயிரம் வீரர்கள் குறித்து அவரிடம் எந்தத் திட்டமும் இல்லை. அவரது கொள்கை தவறாக உள்ளது. இதுவே இந்தத் தேர்தலில் திருப்பமாக இருக்கும். ஆப்கனில் மேற்கொண்டுள்ள போரின் எதிர்காலம் உங்கள் கையில் உள்ளது. அது நவம்பர் மாதம் தீர்மானிக் கப்படும்.

சிரியா மற்றும் ஈரான் மீது தாக்குதல் நடத்த மிட் ரோம்னி தயாராக உள்ளதாக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோன் பெய்டன் குற்றம் சாட்டியுள்ளார். விஸ்கான்சின் மாகாணத்தில் நடைபெற்ற பிரசாரத்தில் பெய்டன் கூறுகையில்,

ஈராக் நாட்டின் மீதான போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமெரிக்க இராணுவத்தினரைத் திரும்ப அழைத்ததை ரோம்னி தவறு என்கிறார். அதே போல், ஆப்கனில் இருந்து அமெரிக்க படைகள் திரும்புவதற்கு நிர்ணயித்த கால எல்லையையும் குறை கூறுகிறார். ரோம்னியின் பேச்சைப் பார்த்தால், ஈரான் மற்றும் சிரியா நாடுகளின் மீது தாக்குதல் நடத்த தயாராக இருப்பது போல் உள்ளது - என்றார் ஒபாமா. (வ)

## ஒபாமாவை கேலி செய்த நடிகர்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை வெறும் நாற்காலி எனக் குறிப்பிட்டு நடிகர் க்ளின்ட் ஈஸ்ட்வுட் கேலி செய்தது கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஹொலிவூட் ஜாம்பவான் க்ளின்ட் ஈஸ்ட்வுட் ஒரு கூட்டத்தில் பேசுகையில், வெறும் நாற்காலியை ஒபாமா எனக் குறிப்பிட்டு பேட்டி காண்பது போல நடித்துக் காட்டினார்.

அவரது இந்தப் பேச்சுக்கு ஒபாமாவின் ஜனநாயக கட்சி சார்பில் பலத்த கண்டனங்கள் வந்த வண்ணம் உள்ளன. ஆனால் ஜனாதிபதி ஒபாமா இந்தப் பேச்சை பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. அவர் குறிப்பிடுகையில், க்ளின்ட் ஈஸ்ட்வுட் அமெரிக்காவின் சொத்து. நான் மட்டுமல்ல, வெள்ளை மாளிகையில் உள்ள பலரும் அவரது தீவிர ரசிகர் க்ளே.

அவரது பேச்சு என்னைப் புண்படுத்தவில்லை. அப்படி நினைத்தால் நான் வேறு வேலை பார்க்க வேண்டியிருக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். (வ)


## தேம்ஸ் நதியில் வீழ்ந்த 5 மாதக் குழந்தை

### தலையில் காயத்துடன் உயிர் தப்பியது

*தள்ளுவண்டியில் வைத்து அழைத்து சென்ற 5 மாத குழந்தை, தேம்ஸ் நதியில் விழுந்து தலையில் படுகாயம் அடைந்தது.*

*பிரிட்டனின் சர்ரே நகரில் உள்ள லாலேஹம் பகுதியில் வசிக்கும் ஒருவர் (பெயர் வெளியிடப்ப டவில்லை) தனது 5 மாதக் குழந்தையை தள்ளுவண் டியில் வைத்துக் கொண்டும் மற்றொரு மகனை அழைத்து கொண்டும் கடந்த வெள்ளிக்கிழமை நடந்து சென்றார். லாலேஹம் பகுதி வழியாக ஓடும் புகழ்பெற்ற தேம்ஸ் நதிக் கரையோரம் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது தள்ளுவண்டி திடீரென நிலை தடுமாறி ஓடி நதியில் விழுந்தது. அதிர்ச்சி அடைந்த தந்தை உடனடியாக ஓடிச் சென்று குழந்தையைக் காப்பாற்றி கரைக்கு வந்தார். எனினும், தலையில் அடிப்பட்டு குழந்தை அலறியது. உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதால் குழந்தைக்கு ஆபத்து ஏதும் இல்லை. (வ)*

## ஒலியைவிட வேகமான விமானம் விரைவில்



ஒலியை விட மிக வேகமாகப் பயணம் செய்யக் கூடிய, அதிநவீன சுப்பர் சொனிக் விமானத் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கு அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக லண்டனில் இருந்து வெளி வரும் டெய்லி மெயில் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில்,

நான்கு முனை கொண்ட நட்சத்திரத்தைப் போன்ற அதிநவீன சுப்பர்சோனிக் விமானத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்க உள்ளனர்.

ஒலியை விட வேகமாகப் பயணிக்கக் கூடிய இந்த விமானம், தரையில் இருந்து புறப்பட்ட பின் ஆகாயத்தில் 90 டிகிரியில் திரும்பக் கூடிய வகையில் வடிவமைக்கப்படும். இதன் இரு புறமும் நீளமான இறக்கைகள் அமைந்திருக்கும்.

இந்த விமானத் தொழில்நுட்பத்தை ரூ.55 லட்சம் செலவில் உருவாக்க நாசா ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கான தொழில்நுட்பத்தை மியாமி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் கேசெங் ஸா என்ற பேராசிரியர் உருவாக்கியுள்ளார். (வ)

## தொலைக்காட்சி பார்த்ததற்காக தாக்கப்பட்ட பத்திரிகையாளர்

பாகிஸ்தானில் வீட்டில் அமர்ந்து கொண்டு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த ஆங்கில நாளிதழின் ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் குல்ஷன்- இ- இக்பால் பகுதியில் வசிப்பவர் ஜயினுல் அபதீன். இவர் ஆங்கில நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி இரவு 11 மணிக்கு வீட்டில் தொலைக் காட்சியில் பாடல்களை ரசித்துக் கொண்டிருந்தார்.

அப்போது நான்கு மர்ம நபர்கள் அபதீன் வீட்டின் வாசல் அருகே நின்றபடி, சத்தம் போட்டு அவரைத் திட்டிக் கொண்டிருந்தனர்.

சத்தம் கேட்டு வெளியே வந்த அபதீன் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என விளக்கம் கேட்டார். அதற்கு அந்த நபர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கினர். தொலைக் காட்சி பார்க்கக் கூடாது, பாடல்கள் கேட்கக் கூடாது என்று கண்டித்தனர்.

என் வீட்டில் நான் சுதந்திரமாகச் செயற்படுவதை தடுக்க நீங்கள் யார்? என்று அபதீன் கேள்வி கேட்க, அவரின் முகத்தில் குத்துவிட்டு, அவரின் மூக்கு கண்ணாடியை உடைத்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து உடனே பொலிஸில் அபதீன் முறைப்பாடு செய்துள்ளார். அபதீனைத் தாக்கியவர்கள் மதம் மாற்றும் குழுவைச் சேர்ந்தவர்கள் என கராச்சி பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். (வ)

## முபாரக்கின் சொத்துகளை முடக்கவில்லை

### பிரிட்டன் மீது குற்றச்சாட்டு

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் சொத்துக்களை பிரிட்டன் அரசு முடக்கத் தவறியுள்ளது என்று பி.பி.சியின் புலனாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பிரிட்டனில் முபாரக்கின் நிறுவனங்களும், சொத்துகளும் எவ்வித பாதிப்புமின்றி இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எகிப்து அதிகாரிகள், பிரிட்டன் சர்வதேச ஊழல் எதிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால் பிரிட்டன் அரசு, தங்களால் முடிந்த வரை முபாரக்கின் சொத்துகளைத் தேடி வருவதாகக் கூறியுள்ளது.

கடந்தாண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி முபாரக் ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட்டதற்கு முக்கிய காரணமே, அவரும் அவருக்கு நெருக்கமானவர்களும் 50-60 பில்லியன் டொலரைச் சூறையாடி இருந்ததே ஆகும்.

ஆனால் இன்னும் அவர்களின் சொத்துகளை முடக்காததால் அவர்கள் அவற்றை பாதுகாப்பான முறையில் வேறு இடங்களுக்கு மாற்றியிருக்கலாம் என்று எகிப்திய அதிகாரிகள் கருதுகின்றனர். (வ)

## வடகொரியாவைத் தாக்கியது 'தைபூன்'

### 48 பேர் சாவு; 20 ஆயிரம் பேர் இடம்பெயர்வு



வடகொரியாவைக் கடந்த சில தினங்களாகத் தாக்கி வரும் 'தைபூன் பொலாவென்' என்று பெயரிடப்பட்ட சூறாவளி காரணமாக இதுவரை 48 பேர் உயிரிழந்ததாகவும் 50 இற்கும் அதிகமானோர் காயமடைந்தும் காணாமற் போயும் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர இந்தச் சூறாவளி மிகப்பெரிய சேதத்தையும் விளைவித்துள்ளது. சுமார் 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து உள்ளனர். நூற்றுக்கணக்கான மரங்கள் முறிந்து வீழ்ந்து வீதிகள் மூடப்பட்டுள்ளன. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

தைபூன் காரணமாக வடகொரியா பெருமளவு பாதிக்கப்பட்ட போதும் ஜப்பானின் ஒகினாவா தீவுப் பகுதிகளில் குறைந்தளவு சேதங்களே ஏற்பட்டுள்ளன. வடகொரியாவில் ஏற்கனவே கடந்த ஜூன் மாதம் பெய்த கடும் மழை காரணமாக 169 பேர் கொல்லப்பட்டிருந்தனர். (வ)

## 2 ஆம் உலகப் போரில் பயன்படுத்திய குண்டுகள் இத்தாலியில் மீட்பு



இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்திய வெடிகுண்டுகள் இத்தாலியில் மீட்கப்பட்டுள்ளன.

இத்தாலியின் ட்ரென்டினோ என்ற மாகாணத்தில் அகோ டி நர்டிஸ் என்ற பகுதியிலேயே வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 3,200 மீற்றர் பரப்பளவில் 200க்கும் மேற்பட்ட வெடிபொருள்கள் பரவி கிடக்கின்றன என்றும், அவற்றைப் பாதுகாப்பாக செயலிழக்கும் பணியில் வெடிபொருள் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## தனியாரும் தினசரி பத்திரிகை வெளியிட இனிமேல் அனுமதி

### ஆலோசிக்கிறது மியன்மார்

மியன்மாரில் தினசரி செய்தித் தாள்களை வெளியிடுவதற்கு தனியார் துறையினருக்கும் சந்தர்ப்பம் வழங்குவது குறித்து கூடுதல் கவனம் செலுத் தப்பட்டுவருகின்றது.

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், மியன்மாரின் தகவல் துறை அமைச்சர் இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றார்.

இதற்காக ஊடகங்கள் தொடர்பில் புதிய சட்டங்களை உருவாக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சி நிலவிய காலத்தில் தினசரிப் பத்திரிகைகளை பிரசுரிப்பதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் வெளிநாடுகளின் அழுத்தங்களால், ஜனநாயக வழிமுறைகளுக்கு திரும்பிவரும் மியன்மார், அண்மையில் ஊடகங்கள் மீது விதித்திருந்த சில தடைகளை தளர்த்தியிருந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் நண்பரை காப்பாற்றுங்கள்

### ரொனி பிளேயரிடம் கடாபியின் மகனின் காதலி வேண்டுகோள்

படுகொலை செய்யப்பட்ட லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் செய்ப் கடாபிக்கு, பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் இரக்கம் காட்ட வேண்டும் என்று அவரது காதலி ஆர்லி வெய்னர் மேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லிபியாவில் போராட்டக்காரர்களால் சிறை வைக்கப்பட்டுள்ள செய்ப் கடாபிக்கு எதிராக விசாரணை இடம்பெற்று வருகிறது. அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

செய்ப் அல் இஸ்லாம் கடாபி என்று அழைக்கப்படும் செய்ப்புக்கு காதலிகள் பலர் இருந்தனர். அவர்களில் கடைசிக் காதலி என்று அழைக்கப்படுபவர் தான் இந்த ஆர்லி. இவர் இஸ்ரேலைச் . சேர்ந்த மொடல் அழகி. இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

ரொனி பிளேயருடன் மிக நெருக்கமாக பழகி வந்தவர் செய்ப். இருவரும் நல்ல நண்பர்களாக இருந்தவர்கள்.

எனவே தனது நண்பரைக் காக்க ரொனி பிளேயர் முன்வரவேண்டும். இது அவருக்கான நேரம். தனது நண்பருக்கு உதவமுன்வர வேண்டும் - என்றார். (வ)

# துருக்கி இராணுவ வளாகம் மீது குர்திஷ் போராளிகள் தாக்குதல்

## 30 பேர் உயிரிழப்பு



துருக்கியில் இராணுவ வளாகம் மீது குர்திஷ் போராளிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து நடைபெற்ற மோதலில் 30 பேர் உயிரிழந்தனர்.

துருக்கியின் வடகிழக்குப் பகுதியில் குர்திஷ் இன மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிய குர்திஸ்தான் மக்கள் கட்சி, தங்களுக்குத் தனிநாடு கேட்டுப் போராட்டங்களை நடத்தியது.

இந்தக்கட்சி, கடந்த 1984இல் ஆயுதம் தாங்கிய அமைப்பாக உருவெடுத்தது. அதன்பின், நடைபெற்ற வெவ்வேறு தாக்குதல்கள் மற்றும் மோதல்களில் இது வரை 45 ஆயிரம் பேர் இறந்து விட்டனர். இந்த அமைப்பு, துருக்கியின் வடகிழக்கு நகரான காசியான்டேப்பில் கடந்த மாதம் நடத்திய கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், சிர்னாக் மாகாணத்தில் உள்ள பேது சேபாக் நகரில் உள்ள இராணுவ வளாகம் மீது குர்திஷ் போராளிகள் இயந் திரத் துப்பாக்கிகள் மற்றும் ரொக்கெட் லோஞ்சர்களைக் கொண்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கடும் தாக்குதல் நடத்தினர். இராணுவம் அதற்குப் பதிலடி கொடுத்தது. இந்த மோதலில் 10 இராணுவத்தினரும் 20 போராளிகளும் கொல்லப்பட்டனர் என்று சிர்னாக் மாகாண ஆளுநர் வாடேட்டின் ஓஸ்கான் தெரிவித்தார். (வ)

## இந்தோனேஷியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்



இந்தோனேஷியாவில் நள்ளிரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. இந்தோனேஷியாவின் தென்மேற்கே பையான்கி நகரில் கடலுக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நள்ளிரவு 1.30 மணியளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிச்டர் அளவுகோலில் 6.5 ஆக பதிவானதாக இந்தோனேஷிய வானியல் மற்றும் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் கிழக்கு ஜாவா, பாலித்தீவுப் பகுதிகளிலும் உணரப்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. (வ)

## திறந்து விடப்பட்ட அணையால் நைஜீரியாவில் 11 பேர் சாவு

ஆபிரிக்காவில் கேமரூன் நாட்டில் உள்ள அணையிலிருந்து திறந்து விடப்பட்ட நீரால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால், நைஜீரியாவில் 11 பேர் உயிரிழந்தனர் என்று தராபா மாகாண செய்தித் தொடர்பாளர் ஹாசன் மிஜின் யாவா தெரிவித்தார்.

நைஜீரியா நாட்டின் கரீம் லாமிடோ பகுதியில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் பொதுநலச் சேவையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கேமரூன் அணையிலிருந்து நீர் திறந்து விடப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கியே 11 மாணவர்கள் உயிரிழந்தனர்.(வ)

## ஈரான் தாக்கப்படுமானால் அமெ. பேரழிவை சந்திக்கும்

### எச்சரிக்கிறது ஹிஸ்புல்லா

பெய்ரூட், செப்.5

ஈரானின் அணு ஆராய்ச்சி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் இஸ்ரேலை மட்டுமல்ல மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க படைகள் மீதும் அந்தநாடு தாக்குதல் நடத்த முடிவு செய்துள்ளது என்று லெபனானில் இருந்து செயற்படும் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஷேக் ஹசன் நஸ்ரல்லா எச்சரித்துள்ளார்.

லெபனான் நாட்டு தொலைக்காட்சி அல்- மைதீனுக்கு அவர் அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்ததாவது:-

ஈரானின் அணு ஆராய்ச்சி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் நிச்சயமாக அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது அந்நாடு தாக்குதல் மேற்கொள்ளும் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இஸ்ரேல் நடத்தும் தாக்குதலில் அமெரிக்காவுக்கு தொடர்பே இல்லாமல் இருந்தாலும் கூட அமெரிக்கா இராணுவத் தளங்களைத் தாக்கும். குறிப்பாக இஸ்ரேலில் இருக்கும் அமெரிக்க இராணுவத் தளங்களை மட்டுமல்ல. ஒட்டு மொத்த மத்திய கிழக்கில் இருக்கும் அனைத்து அமெரிக்க இராணுவத்தளங்களையுமே ஈரான் தாக்கும். ஏனெனில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலுக்கு அமெரிக்காதான் பொறுப்பேற்க வேண்டும்.

இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையே மோதல் ஏற்படுமேயானால் இஸ்ரேல் முழுவதையுமே தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணைகளை எமது இயக்கம் பயன்படுத்தும். இதற்காக இரசாயன ஆயுதங்களோ அணு ஆயுதங்களோ எங்களுக்குத் தேவையில்லை. எங்களிடம் அணு ஆயுதங்களும் இல்லை. எங்களிடம் இருக்கின்ற ஏவுகணைகளே போதும் - என்றார். (வ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சுருவில் 4 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த

## அமரர்
## கந்தையா மகாலிங்கம்

திதி: 05.09.2012

அன்னை மடியில் 26.07.1946 — ஆண்டவன் அடியில் 17.09.2011

ஆண்டு ஒன்று ஆனாலும் அகலாது உம் நினைவு
காலமோடிப் போனாலும் மறைந்திடுமோ உமது அன்பு
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் சிறகடித்து பறந்ததுவோ
உம் சிரித்த முகம் எம் மனதில் நிலையாய் தெரிகிறது
பிறப்புண்டேல் இறப்பு நியதி இருப்பினும் ஏற்க மறுக்கிறது எம் மனம்
உம்மைக்காணத்துடிக்கிறது நிதம்.

உங்கள் நினைவால் வாடும்

கணேஸ், சின்னக்கிளி, மகாலட்சுமி (சகோதர சகோதரிகள்),
ஞானேஸ்வரி (மனைவி),
மதீசா, சதீஸ், ரேகா (பிள்ளைகள்),
ஆதித்தன், சத்தியரூபி (மருமக்கள்),
குகன், மஞ்சுளா, குகபாலன் (கோபால்),
நிர்மலாதேவி ,ஜெயராம் (மைத்துனர்கள்),
கிரிசாந்தன், யது, சாமினியா (பேரப்பிள்ளைகள்),
சவுந்தரம் (அன்பின் மாமி).

இல.100, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(சி/3084) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(04)

குழந்தைப்பருவத்தில் அன்புக்கு ஏங்குவதும், பயஉணர்ச்சிக்கு ஆளாவதும் பிற்காலத்தில் சமூக விரோதிகளும், கோழைகளும் உருவாகக் காரணமாகிவிடுகிறது. எனவே தான் இளமைப் பராயத்தில்குழந்தைகளிடம் பயஉணர்ச்சியை ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்வதில் பெற்றோர்கள் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் இருக்கவேண்டும்.

"பயம் என்னும் பேய்தனை அடித்தோம்" என்கிறார் பாரதியார். பயத்தை பாரதியார் பேய்க்கு ஒப்பிடுகிறார். அது நம்மைப் பிடிக்க அனுமதிக்கக் கூடாது என்று எச்சரிக்கிறார். அந்தப் பேய் அருகில் நெருங்கினால் அடித்து விரட்டுங்கள் என்று தைரியம் ஊட்டுகிறார் . பேய் பிடித்தவர்களால் உறுதியான காரியத்தைச் செய்ய முடியாது. பயம் என்கிற பேயைத் தான் சொல்கிறேன். இந்தப் பேய் வெற்றி பெற வேண்டிய பலருடைய வாழ்க்கையையும் நாசப்படுத்தி இருக்கிறது. பயத்திலிருந்து விடுபட முடியாத நிலையில், எந்தக் காரியத்திலும் வெற்றி பெறுவது சாத்தியமல்ல.

*'உச்சி மீது வான் இடிந்து*
*வீழுகின்ற போதிலும்*
*அச்சம் இல்லை; அச்சமில்லை;*
*அச்சமென்பதில்லையே!*

என்று பாரதியார் நெஞ்சு நிமிர்த்திப் பேசுகிறார். வானமே இடிந்து தலையில் விழுந்தாலும், அஞ்சாத மனஉறுதி தேவை என்று சொல்லுகிறார். அச்சமற்ற வாழ்க்கை வாழ்ந்தவர்களே அரிய பல சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். அச்சம் விலகும் போது, துணிவு சக்தி வாய்ந்த துணையாகி விடுகிறது.

'துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டம்' என்பது ஒரு பழமொழி. அந்தப் பழமொழி சாதாரண மொழிபோலத் தோன்றலாம். ஆனால் ஆழமான கருத்தை உள்ளடக்கியது. அது என்ன என்று அடுத்த அத்தியாயத்தில் பரிசீலிக்கலாம்.

### துணிந்தவனுக்கு துக்கமில்லை

'துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டம்' என்று ஏன் சொல்கிறார்கள்?

சமுத்திரம் ஆழமானது என்று எல்லோருக்கும் தெரியும். ஆர்ப்பரிக்கும் அலைகளைக் கொண்டது. விழுங்கிடும் சுறா மீன்களைக் கொண்டது. ஆபத்தின் உருவமாகக் காட்சி அளிப்பது அலைகடல். நீந்தத் தெரிந்தவனைக் கூட அது விழுங்கி ஏப்பம் விட்டு விடக்கூடியது.

ஆனால் உயிரைத் துச்சமாக மதித்து அதில் இறங்க முடிவெடுத்து விட்டவனுக்கு அதிலுள்ள அபாயங்கள் ஒரு பொருட்டு அல்ல. அவனைப் பொறுத்தவரையில் ஆழம் காணமுடியாத சமுத்திரம் கூட முழங்கால் மட்டம் தான்.

ஆகவே உண்மையான சமுத்திரத்தின்ஆழம் சமுத்திரத்தின் தன்மையில் இல்லை. அதில் இறங்க முடிவெடுக்கிறவனின் மனத் திண்மையில் தான் இருக்கிறது.

மனதில் பயம் குடிகொண்டு விடுகிற போது எல்லாக் காரியங்களும் கஷ்டமாகத் தோன்றுகின்றன. ஆனால் பயத்தை விரட்டி விட்டு துணிவுடன் செயற்படுகிறபோது பிரமிப்பாகத் தோன்றிய காரியங்களும் எளிமையாகி விடுகின்றன.

இமய மலையிலுள்ள எவரெஸ்ட் சிகரம் ஐந்து மைல்களுக்குமேல் உயரம் உடையது என்று சொல்கிறார்கள். அதாவது ஐந்து மைல் தூரத்தை வளைவு நெளிவு இன்றி செங்குத்தாக நிறுத்தினால் அது எவ்வளவு உயரம் இருக்குமோ அந்த அளவு உயரம் உடையது எவரெஸ்ட் சிகரம். எண்ணிப் பார்க்கவே மலைப்பாக இருக்கிறது. பனி படர்ந்த சிகரம். மேடு பள்ளங்கள் நிரம்பியது. ஒரு பனிக்கட்டி சறுக்கினால் போதும், ஏறுகின்றவன் அதல பாதாளத்தில் விழுந்து விடுவான். எலும்புத் துண்டுகூட அடையாளத்துக்குக் கிடைக்காது. இத்தகைய ஆபத்துக்கள் நிறைந்த இமயமலையின் மீது ஏறி எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்த மனிதர்களும் இருக்கிறார்கள்.

இவர்களால் இந்தச் சாதனையை எவ்வாறு செய்ய முடிந்தது? பார்த்த மாத்திரத்திலேயே அச்சுறுத்தக்கூடிய அந்த மலையின் மீது ஏறி, அதனுடைய உயரமான சிகரத்தை அடைந்து விட வேண்டும் என்கிற எண்ணம் கொண்டவர்கள் மனதில் பய உணர்ச்சி இருப்பதற்கு வழியே இல்லை.

பய உணர்ச்சி உடையவர்கள் காரியத்தைத் தொடங்கும் முன்பே அதைரியம் அடைந்து போகிறார்கள். சோர்வு அவர்களை ஆட்கொண்டு விடுகிறது. சாதாரணக் காரியங்கள் கூட அவர்களுக்கு கஷ்டமாகத் தெரிகிறது. உடல் பலம் கொண்ட திடகாத்திரமான மனிதர்களாக அவர்கள் இருந்தாலும் உள்ளத்தில் பயம் ஏற்படுகிறபோது பலவீனம் அடைந்து விட்டதைப் போல அவர்கள் உணர்கிறார்கள். பலம் இருந்தும், பயத்தின் காரணமாக பலவீனம் அடைந்த மனிதர்களாக அவர்கள் தங்களை ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள்.



-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# பாடசாலையில் வாசிப்பை ஊக்கப்படுத்தும் பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் நாளுக்கு நாள் அருகி வருகின்றது. பாடசாலையில் வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்கு பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். வெறுமனே ஒரு பரீட்சை விடயத்தை மட்டும் மனதில் கொண்டு இன்றைய மாணவர்களின் கல்விப் பாரம்பரியம் அமைவது நீண்டதொரு அறிவுப்பரம்பலை உருவாக்கமாட்டாது என்று வலிகாமம் மேற்கு பிரதேச சபைத்தலைவர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்தார்.

நூலக வாரத்தை முன்னிட்டு மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் சுழிபுரம் உபஅலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே திருமதி ஐங்கரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

இலங்கைத்தீவில் கற்றவர்கள் நிறைந்த பிரதேசம் யாழ்ப்பாணம். கல்விமான்கள், பல்துறை அறிஞர்கள் மற்றும் சட்டத்தரணிகளையும் உருவாக்கிய பெருமை யாழ்ப்பாண பொது நூலகத்துக்கே உரித்தான ஒன்று. அது எமது வரலாற்றுப் பொக்கிஷம். அந்தக் காலத்திலே அந்த நூலகத்தைப் பயன்படுத்தி வளர்ச்சி அடைந்தவர்கள் பலர். ஆனால் இன்று மாணவர்கள் மத்தியிலே வாசிப்புப்பழக்கம் வெகுவாக அருகிவிட்ட நிலை மனதுக்கு வேதனை தரும் ஒரு விடயமாகவே உள்ளது. உரிய முறையில் வாசிப்பதன் பயன்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டியாக அமைய வேண்டும். பாடசாலைகளிலே வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்கு உரியபொறிமுறைகள் வழங்கப்பட வேண்டும். வெறுமனே ஒரு பரீட்சை விடயத்தை மட்டும் மனதில் கொண்டு இன்றைய மாணவர்களது கல்விப் பாரம்பரியம் அமைவது நீண்ட ஒரு அறிவுப்பரம்பலை உருவாக்க மாட்டாது.

> உயர்தர மாணவர்கள் ஒரே பாடத்தை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் செயல் மாற்றம் பெறவேண்டும்.

இன்று பல்கலைக்கழக தெரிவு முறையில் பல இடர்பாடுகளை சந்தித்திருக்கிறோம். பல மாணவர்கள் தற்போது உருவாக்கப்பட்ட வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நாங்கள் என்ன செய்திருக்கிறோம். எவ்வாறு இந்த மாணவர்களின் தாக்கத்துக்கு எம்மால் தீர்வு வழங்கமுடியும். ஒரு சில துறைகளை மட்டும் எமது மாணவர்கள் தெரிவு செய்வதில் தான் தவறு இருக்கும் என நான் கருதுகிறேன்.

இந்த நிலையில் நான் அறிந்த விடயம் உயர்தரத்தில் சில பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்யும் போது அதற்கு ஆசிரியர் இல்லை. அதனால் குறித்த பாடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என மாணவர்கள் பிழையாக வழிகாட்டப்படுகின்றார்கள். இதனால் குறிப்பிட்ட சில பாடங்களில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்க போட்டி அதிகரித்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காது விடப்படுகின்றது. மாணவர்களுக்கு வாசிப்பு ஆற்றல் காணப்படுமிடத்து நூல்களின் உதவியுடன் மாணவர்கள் உயர் பெறுபேறு பெற்று பல்கலைக்கழக அனுமதி பெறமுடியும்.

இதேவேளை உயர்தர மாணவர்கள்ஒரே பாடத்தை மனப்பாடம்செய்து ஒப்புவிக்கும் செயல் மாற்றம் பெறவேண்டும். அவர்கள் நூலகங்களை நாடி மேலதிக விடயங்களைப் பெறும்போது உயர் பெறுபேறுகளை அடைய வாய்ப்பு ஏற்படும்.

எமது உபஅலுவலகங்களிலேயே நான்கு நூலகங்கள் உண்டு. எத்தனை பேர் அவற்றில் பயன்பெறுகிறார்கள். எனது நோக்கம் என்னவெனில் நாம் புதிய கட்டடத்துக்கு செல்லும் போது தற்போது இருக்கும் கட்டடத்தில் ஒரு புதிய நூலகத்தை உருவாக்க எண்ணியுள்ளேன். ஒவ்வொருவரும் இரண்டு புத்தகங்கள் வீதம் சேர்த்து வழங்கினால் பெரியதோர் நூலகம் வலிகாமம் மேற்கில் அமைந்து விடும். அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்- என்றார். (எ-115)

## தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றிபெற்றோர்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**புனித திரேசா பெண்கள் கல்லூரி**

சிவசோதி தர்சா, சிவசோதி தர்சி, விக்னேசுவரன் மிதுசியா, புஸ்பகுமார் மிகானா, குகேஸ்வரன் சாரதா.

**பிரமந்தன் ஆறு உ.நி.ப.**

சிறிதரன் துலாஞ்சவி, நிமலநாதன் துசாந்தினி, வேதாசன் பிரணவி.

**பிரிவு "உ"**

1 ஆம் இடம் - பாலமுரளி சிறீதரன் - திருவையாறு உ.நி.ப., 2 ஆம் இடம் - திவ்வியகுமார் யேகன் - உருத்திரபுரம் உ.நி.ப., 3 ஆம் இடம் - கேதீஸ்வரன் அபியுகா - திருவையாறு உ.நி.ப.

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

**திருவையாறு உ.நி.ப.**

பரமானந்தம் சரலன், கிருஸ்ணமூர்த்தி பிரியந்தன், பூலோகநாதன் பிரியநிலா, யெயசீலன் மயூரிகா, சிறீதரன் துசாலிகா.

**வட்டக்கச்சி உ.நி.ப.**

யெயக்குமார் யாழினி, பரமசிவம் சாம்பவி, மனுவல் எட்வேட்கெயின்.

**புனித பற்றிமா றோ.க.த.க.ப.**

சத்தியசீலன் பிரவீணா

**உருத்திரபுரம் உ.நி.ப.**

கோணேசுவரன் லோயன், தரேசு சசிவதனா

**பரந்தன் இந்து உ.நி.ப.**

நித்தியானந்தம் சுபானு

**பிரமந்தனாறு உ.நி.ப**

தாரகா அபிசாளினி

**புனித திரேசா பெண்கள் கல்லூரி**

சிவகுமார் பிரவிந்தனி, இராயேந்திரன் கோபிகா, வசந்தகுமார் அபிராமி, கனகலிங்கம் கீர்த்தனா, புஸ்பகுமார் மிகானா, குகேசுவரன் சாரதா.

(முற்றும்) (எ-6)



*திருமதி உதயலதா நவநீசனின் "கல்விப் பொதுத் தராதர உயர்தர தமிழ் இலக்கண ஐந்நூறு பல் தேர்வு வினா விடைகளும் சுருக்க வினா விடைகளும்" எனும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கைதடி வளர்மதி கலை அரங்கில் நடைபெற்றது. யாழ். வலயக் கல்வி அலுவலக தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். (எ-288)*

# மனனப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வடமராட்சி,செப்.5

வடமராட்சி வலயத்தில் உள்ள கரவெட்டிக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களில் மனனப்போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விவரம் வருமாறு.

**தரம் 1**

பி.பிரவீணா- இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சி.ஹம்சிகா- கட்டை வேலியார்க்கரு வித்தியாலயம், ப.ஆரணி- நெல்லியடி மெ.மி.த.க பாட சாலை, சி.சிவாசகன்- கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம் (இருவர் மூன்றாம் இடம்)

**தரம்-2**

ஜெ.ஜஸ்மி- கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம், ஜெ.தனுஷ்கா- கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பு.துளசிகா- கரணவாய் வேதாரணீஸ்வரா வித்தியாலயம்.

**தரம் 3**

சொ. கோவர்த்தினி- கரணவாய் வேதாரணீஸ்வரா வித்தியாலயம், கு.சஞ்சிகா - நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை,சி.லதாங்கி- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்

**தரம் 4**

பு.ரிலக்ஷிகா- கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம், வி.காவியா- நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை, ச. தனுசியா - கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

**தரம் 5**

இ. கஜானி - கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம் ஆ. தர்சினி -நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை பா. ரம்சிகா - கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# பே(ா)ரரசிக்கு வந்த ஞானம்

ஒருகாலத்தில் முழு இலங்கைத் தீவையும் தன் அதிகாரத்தின் பிடிக்குள் வைத்திருந்த பே(ா)ரரசியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏதோ கனவு கண்டது போல திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்து போயுள்ளார். ஏறக்குறைய 30 வருடங்களுக்குப் பின்னர் அவருடைய கால்கள் யாழ். மண்ணை மிதித்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்துக்கு வந்தவர் இங்குள்ள சிறுவர்களையும், பெண்களையும் கண்டு கதைத்து போரால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் அறிந்து கொண்டார். "தமிழ் மக்களுக்கு தனி நாட்டுக்குப் பதிலாக நிறைய அதிகாரங்களை வழங்குவதே என்னுடைய திட்டமாக இருந்தது. இதற்காக ஒரு அரசமைப்பையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தேன். போர் முடிந்த பின்னர் வெற்றிகொள்ளப்பட்ட நிலங்களையும் மக்களையும் வெறுங்கையோடு சென்று பார்ப்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் மக்கள் புலிகளாலும் படையினராலும் சொல்லெணாத் துயரை அனுபவித்திருந்தனர்" என்று கண்ணீரும் வடித்துள்ளார் அவர். இந்த வார்த்தைகளை அவர் அரியணைக் கட்டிலில் இருந்தபோது சொல்லியிருந்தால் அதற்கொரு பெறுமதி இருந்திருக்கும். தமிழர்களுக்கும் விடிவு பிறந்திருக்கும்.

பிரேமதாசாவின் மறைவுக்குப் பின்னர் ஐ.தே.கவின் அதிகாரத்தை வீழ்த்தி இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதி என்ற மகுடத்தைச் சூடிக்கொண்டவர் சந்திரிகா. வன்முறைக்கு தன் கணவரைப் பறிகொடுத்தவர் என்பதால், தமிழ் மக்களின் விடயத்தில் மென்போக்கோடு நடந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 'சந்திரிகாவை விடவும் பிரேமதாஸா நல்லவர்' என்ற நிலைக்கு தமிழர்கள் தள்ளப்படும் அளவுக்கு தன்னுடைய மாமனாரான அனுருத்த ரத்வத்தயோடு சேர்ந்து அவர் ஆடிய போர்ச் சன்னதம் கொஞ்சநஞ்சமல்ல.

ஏற்கனவே இருந்த பொருளாதாரத் தடை இன்னும் இறுகியது. பசியும் பட்டினியும் தமிழர் தேசத்தில் தலைவிரித்தாடியது. குடியிருப்புகள் யாவும் நெருப்பெரிந்த நிலங்களாகிப் போயின. நவாலி தேவாலய நரபலி தொடக்கம் நாகர் கோயில் பாடசாலை மாணவர்கள் மீதான பலியெடுப்பென்று அவரின் கோரப் பற்கள் எங்கும் நீண்டிருந்தன. ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்தையும் தம் பிடிக்குள் கொண்டுவந்தே ஆக வேண்டும் என்ற வெறியில், மக்களுக்கு ஏற்படும் எந்தவொரு இழப்பைப் பற்றியும் அக்கறை கொண்டிருக்கவில்லை அவர். நல்லவேளையாக ஒரே இரவில் யாழ். மக்கள் அத்தனை பேரும் மாபெரும் இடப்பெயர்வின் மூலம் அகன்றதால் பெரும் உயிரிழப்புகளை தவிர்க்க முடிந்திருந்தது. இல்லாவிட்டால் சந்திரிகா அம்மையாரின் இரத்தக் குளத்தின் அடர்த்தி இன்னமும் அதிகமானதாகியிருக்கும். யாழ்ப்பாணத்தைப் பிடித்த பின்னர் இதே சந்திரிகாவின் ஆட்சியில் தான் ஏராளமான கிருஷாந்திகளை விழுங்கிய செம்மணிப் புதைகுழிகள் உற்பவிக்கப்பட்டன. சமாதானத்தின் பேரரசியாக வெள்ளைப் புறாவில் உலா வருவார் என்று எண்ணியிருந்த தமிழ் மக்களுக்கு சந்திரிகா போரரசியாகி சவப்பெட்டிகளையும், இடம்பெயர் வாழ்வையுமே பரிசளித்திருந்தார்.

இப்போது அதிகாரத்தின் மணிமுடி மண்ணில் சரிந்து வீழ்ந்த பின்னர் சுடலைஞானம் வந்தவர் போல தமிழ் மக்களுக்கான உரிமைகள் பற்றியும், போரால் அவர்கள் பாதிக்கப்பட்டமை பற்றியும் கண்ணீர் மழை பொழிகிறார். கூடவே தன்னையும் அறியாமல் 'இராணுவத்தினராலும் மக்கள் சொல்லெணாத் துயரங்களை அனுபவித்தனர்' என்ற உண்மையையும் உடைத்திருக்கிறார். சந்திரிகாவுக்கு முன்னர் இருந்தே போரைச் சாட்டாக வைத்து அப்பாவி மக்களை படைத்தரப்பு வதம் செய்தே வந்திருக்கிறது. ஆனால் இதனை எந்தவொரு ஆட்சியாளரும் ஏற்றுக்கொண்டதே இல்லை. சந்திரிகா கூட ஆட்சியில் இருந்தபோது, போரில் கொல்லப்பட்ட பொதுமக்களையெல்லாம் 'புலிப் பயங்கரவாதிகள்' என்றே சர்வதேசத்துக்குக் கணக்குக் காட்டியிருந்தார். இப்போதும் அவருடைய போர் வெறிக்கு இரையாகி இருண்டுபோன குடும்பங்கள் சிலவற்றுக்கு 'சோலர்' மூலம் வெளிச்சம் கொடுத்து பிராயச்சித்தம் தேடமுயன்றுள்ளார். யார் கண்டது? இன்னும் ஓரிரண்டு வருடங்களில் இப்போதைய ஜனாதிபதி மஹிந்த கூட இதே கருணை ததும்பும் வார்த்தைகளோடு மக்களை சந்தித்து போரின் கொடுமைகள் பற்றி கண்ணீர் வெள்ளத்தில் கரையக்கூடும். ஏனெனில் பேரினவாதிகள் எங்கள் காதுகளில் வைக்கின்ற பூக்களைக் கூட சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொள்ளும் இளித்தவாயர்கள் நாமன்றோ.

# மூன்றாம் இன அழிப்பு ஆயுதம்

■செந்தூரி

கடந்தவாரம் அவளது முதலாமாண்டு நினைவு தினம் வந்து போனது. சாவு ஊனை உருக்கித் தின்ற போது அகவை இருபதைக்கூட தொட்டிராத குழந்தையவள். காஞ்சிபுரத்தின் ஓரிக்கையென்ற சிறுகிராமத்திலிருந்து செம்மண் அப்பிய கால்களோடு "மக்கள் மன்றம்" என்கின்ற பொதுநலனோம்பு அமைப்பில் உறுப்பினராகியவள். தீயள்ளித் தின்று செரிக்க முன் "செய்குக விடுதலை" யென்று சீறி நின்ற செங்கொடியை சும்மா ஒப்புக்குக் கூட நினைவேந்தாமல் விட்டுவிட்டோம். அவள் வீரப் பெருங்கதைக்கும் இப்பத்திக்கும் தொடர்பில்லையாயினும், நினைவழிந்து போகாமல் நின்று அடம்பிடிக்கின்றாள் அத் தங்கை! "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவன் எட்டிப் பார்த்தால், தெரியும் தொலைவில் கடலில் காலாகாலமாய் புத்தகங்களில் பாடமாகவும் நின்றிருந்தும், எம் சிந்தை! ம்?

கடலின் அக்கரையில் நின்றுதான் அன்றைக்கு எம் தமிழ் நாயனார்கள் ஈழத்தின் இறைவர்களைத் தெள்ளு தமிழால் பாடினார்கள் என்கிறது வரலாறு. ஈஸ்வரம் என்கிற வடசொல்லை 'ஈச்சரம்' என வழுத்தி, முப்புரம் எரித்த முழுமுதலை தத்தமது நாவுகளில் நினைவேற்றிக் கொண்டார்கள்.

பஞ்ச ஈச்சரங்களும் பாடல்பெறவில்லையாயினும், ஈழத் தமிழ்ச் சைவப் பண்பின் புராதன திருத்தலங்கள் அவை என்கின்ற தெளிவுணர்வுக்கு தமிழனை கொண்டுவர அப்பதிகங்களும் நின்றுழைத்திருந்தன. கதிர்காமம் என்கின்ற தமிழ்க்கடவுளின் தலத்தை, எவ்விதம் சிங்களவனின் கைகளுக்கு 'அற்றோனித் தத்துவம்' எழுதிக்கொடுத்துவிட்டு, இன்றைக்கு யாத்திரைக்கு மட்டும் காடு மேடளாவிப் போய்த் திரும்புமளவுக்கு எம்மை நாமே திருப்திப்படுத்திக் கொண்டோமோ, அவ்விதமே அவர்களின் இலக்கென, குறிகாட்டப்பட்டிருப்பது "முன்னேச்சரம்".

ஈழத்தின் மேற்குப்புறத்தில், தமிழரின் பரம்பலை ஆதாரங்களோடு சொல்லும் இவ்வாலயம், நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் போன்ற வடமேல்மாகாண, மேல்மாகாண நகரங்களில் பரம்பரையாக வாழ்ந்த தமிழர்களின், பற்றுக்குரிய கோயில். நீர்கொழும்பு பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழர்கள் பேரினத்தோடு இணங்கலந்து கொண்டு அவர்களை பின்பற்றவும் தொடங்கியதால், முழுநேரத் தமிழர்களாக வாழமுடியாமல், பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் கொண்டு நாள்களை ஓட்டும் கொடுமை, வரும் நாள்களில் சிலாபம் வரை, புத்தளம் வரை விரைந்து பரவுவதற்கு நீண்டகாலம் வேண்டும் என்றில்லை. நாம் சுதாகரிப்பதற்குள் சாதிக்கும் அவர்களின் வேகம் அப்படி?

ஊழிப் போர்வெளியில் முல்லைத்தீவின் கடலோர மண்துகள்களின் மீது தமிழர் விடுதலைப் போராட்டத்தின் இறுதிமூச்சு இறுக்கிப்பிடிக்கப்பட்டதற்கான, தொடக்கப்புள்ளியாக சிங்களம் படித்தவர்கள் இன்றை வரைக்கும் சொல்லிக்காட்டுவது "மாவிலாறு" என்கின்ற வாய்க்கால், வரம்பு தகராற்றை!

தண்ணீர் தராத ஒற்றைக்காரணமே தங்களை கோபத்துக்குள்ளாக்கி இவ்வளவு இரும்புக் குவியல்களாக இழப்புக்களை எடைபோட்டு விற்குமளவுக்கு தமிழினத்தை அழிவில் தள்ளியதென்று தலையிலடித்து சத்தியம் செய்யாக் குறையுடன் வாதிடும் பெரும்பான்மையின நண்பர்களின் பொழுதுபோக்கு அரசியல் வாதங்களில், மன்மோகன்சிங்கைப் போலிருப்பதே மகாஉத்தமம் என்பது பேராதனையின் எல்லாக் கல்லாசனங்களுக்கும் தெரியும்.

தமிழினத்தின் மீது திட்டமிடப்படுகின்ற சகலவிதமான ஒடுக்கு முறைகளுக்கும், ஏற்கனவே நன்கு கூர் தீட்டப்பட்ட அரசியல் சதிகளையும், பிரிவினை பிற்போக்கு சிந்தனைகளையும், மேலாண்மைசெய்யும் முன்னேற்பாடுகளையும் சுலபமாக மறைத்துவிட்டு, 'சப்பை ' வகைக்குரிய உடனடிக் காரணமொன்றை சாட்டுக்கு வைத்திருப்பது வழமை.

83 இன் அத்துணை அழிவுகளையும், திருநெல்வேலிக் குண்டு வெடிப்பிலும், 94இன் பேச்சு முறிவுகளை "டோரா" தகர்ப்பிலும், 2009 இன் இனவழிப்பினை [illegible] றுக்கு அடிகோலாக தமிழனின் மேற்கு நகரங்களில் ஒன்றை தேடியிருக்கக்கூடும்?

பண்டாரநாயக்கவின் வெற்றிக்கு 'மொழி' தேவைப்பட்டதும், ஜெயவர்த்தன, பிரேமதாசவின் எழுச்சிகளுக்கு 'இனம்' தேவைப்பட்டதும் போல, சூரியசந்திரர்களுக்கு நிகரான இன்றைய ராஜபக்ஷேக்களின் வெற்றியை தக்கவைப்பதற்காக தேவைப்பட்டிருப்பது 'மதம்'. வெறுமனே உள்நாட்டுக் கலவரங்களால், இலங்கையின் செய்திச் சூழலைகளை கட்டியதாக வைத்திருக்க மட்டுமன்றி, வல்லாதிக்க பிராந்திய அரசியல் நலன்களுக்காகவும் 'மதவாயுதம்' பெரிதும் பயன்படும் என்கின்ற சாணக்கியத்தை, யாரோவொரு மெத்தப்படித்த யோகி, காதில் கடித்திருக்க வேண்டும். ஆசியாவின் வல்லரசுப் பதவிக்கு வெகு சொற்ப வித்தியாசங்களில் போட்டியிடும் இந்திய சீன பங்கேற்பாளர்களை சுலபமாகச் சமாளிப்பதில் பௌத்தம் பேருதவி புரியும் யுக்தி என்பது இன்று வரைக்கும் எம்மால் ஊகித்தறியப்படாமலிருக்கும் உண்மைகளில் ஒன்று!

'கபிலவஸ்து'விலிருந்து புத்தபகவானின் புனித எச்சங்களை, கேட்டதும் கொடுத்தனுப்பிவிடும், கொள்ளைப்பாசம், பாரதத்திடமிருந்து கொட்டிக்கொண்டிருக்கும் சமகாலத்தில், சீனாவின் நீடித்து நிலைக்கும் நட்புறவுக்குப் பாத்திரமாகி, அடுத்த "தர்ம சங்கத்தின் மாநாட்டுக்கான" ஏற்பாடுகளில் தன் பங்கை முழுமூச்சாக ஒப்படைத்து தீவிரமாக இயங்கும் துணிச்சல் வேறு எவருக்கு உண்டு?

மேற்குக் கரையின் மன்னாரில், கத்தோலிக்கத் தமிழர்களும், முஸ்லிம்களும் மோதிக் கொண்டதில், ஆழக் கால் பதித்த அமைச்சர் பெருமகனை பிணை கேட்க வந்த சட்டத்தரணிகளின் பெயர்ப் பட்டியலில் தமிழ்ப் பெயரொன்று மருந்துக்கும் கிடைக்காதளவுக்கு மத அரசியல், நிகழ்கால நாள்களில் எல்லா வகைப் பிணிகளுக்கும் பிரயோகிக்கும் 'பனடோல்' போலானது. பள்ளிவாசல்கள் உடைத்தழிக்கும்போது பொங்கிப் பிரவாகிக்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கான அரசியல் பிரதிநிதிகளின் ஆவேசம், அலரிமாளிகைச் சந்திப்புகளிலும், ரம்ழான் நோன்பு துறப்பு விருந்துபசாரங்களிலும் அப்பளங்களை விட துரிதமாக நொறுங்கிக் கரைந்து போயின. சிறுபான்மை மதங்களை கத்தோலிக்கமும், இஸ்லாத்தும் சிங்களவர்களின் ஒரு பகுதியினரால் பின்பற்றப்படுபவையாக இருப்பதனால் அந்த மதங்களின் கொள்கைகளைச் சுரண்டிப் பார்ப்பது சொந்தப் புண்ணையே சொறிவதற்கு நிகரானது என்பதை நன்கறிந்த தர்மாத்துமாக்களின் பார்வை வீர சைவத்தை உள்ளடக்கிய இந்துப்பாரம்பரிய பின்பற்றுதல்களை நோக்கி திரும்பியிருப்பதுநிச்சயம் தற்செயலானதல்ல.

இன்றைய சைவப் பெருமக்களினால் மெல்லவும் முடியாமல், துப்பவும் முடியாமல் தொண்டையை இறுக்கித் தொடரும் பாரம்பரியங்களில் ஒன்று "உயிர்ப்பலி". சிறுத்தொண்ட நாயனாரிடம் "பிள்ளைக் கறி" கேட்ட அதே உலக முதல்வன் தான், தன் மேல் கொண்ட விசுவாசத்தின் ஆழத்தை நிரூபிக்க ஆபிரஹாமிடம், ஒரே மகனான 'ஈசாக்'கை ஒரேபு மலையில் பலிதரக் கேட்டவன். பற்றுதலின் பிடிப்பினை மதிப்பிடவே கேட்டதல்லால் மாமிச விரும்பும் தசை யாசகனல்ல ஏகத்திறைவன் என்கின்ற உண்மையை உலக மதங்கள் ஒத்திசைக்கின்றன. மேற்கூறிய ஆபிரஹாமின் இன்னொரு பிள்ளை இஸ்மயில். இஸ்லாத்தை தோற்றுவித்தான் என்கின்றபழையாகமம், கத்தோலிக்கத்தினது சேய்களாக இன்றைய இஸ்லாமியர்களை சுட்டுகின்றது.

மென்னெழுத்தர்களினால், "எழுத்துலகின் காட்டுமிராண்டி" என, செல்லமாக கோபித்தழைக்கப்படுகின்ற 'நீட்ஷே', மணம் என்பது மனிதனின் எந்த உறுப்பு என்று கேள்வியெழுப்பி மிரட்டுகின்றார். இரத்தமும் சதையுமாக, எலும்பும் நரம்புமாக திரியும் நரக் கூட்டினுள் 'பொய்' குழைத்து பூட்டிவைத்திருக்கும் உணர்ச்சிகளே யாவையும் என்று மானிடப் பிறப்புண்மையை போட்டிருக்கின்றார்.

காதல், அன்பு என்பதெல்லாம் காமமும் ஓமோன்களும் என்பதாகவும், பக்தி என்பதை யாதொரு 'பசி' என்பதாகவும், கோபமும் மகிழ்ச்சியும் இரத்த உயர்-தாழ் அழுத்தங்களாகவும், கொள்கைப் பிடிப்பை மரபணு வேதியலாகவும் 'புட்டுப் புட்டு' வைக்கும் அந்தப் பேனாக்காரனை பின்பற்றுவது கடிதினும் கடிது.

முப்பாட்டனை அநியாயப் போரில் கொன்று வென்று, எம் கோபுரங்களை எரித்துச் சாம்பல் கண்ட, ஆரிய ராமனையும், அவன் காலடி மட்டும் கண்ட கம்பராமனையும் கோடிப்புறத்தில் கோயில் கட்டி வன் போக்கா? மென் போக்கா? என்ற விவாதங்களில் இன்னமுமுழலும் நாம், பகுத்தறிவுப் பெரியாரை எட்டித் தொடக்கூடத் தேவைப்படும் தொலைவுள், 'நீட்ஷே' போன்ற புரட்சிகர நாகரிக உணரிகளை அவ்வளவு சீக்கிரமாக அணுகவிடப் போவதில்லை.

ஆதிச் சைவனின் நேர்த்தி, குளிர்த்தி, படையல், பொங்கல், மடை, வேள்வி போன்ற சடங்குகள் யாவற்றிலும் "ஊருக்கு உணவளித்தல்" என்ற ஒற்றை நோக்கம் நீக்கமற நிறைந்திருப்பதாகவே படுகின்றது. பூமிக்கு வரும் போது வெள்ளிக் கரண்டியோடு வந்து விழுந்தவனல்லன் தமிழன்.

சேற்றிலும், கடலிலும் வியர்வை கரைக்கும் உணவுற்பத்திதான் அவனது உழைப்பாகவும், உயரிய பொருளாதாரப் பண்பாகவும் உலகளாவில் அவனை நிறையச் செய்தது. உணவுக்காய் கொல்வது பாவமென்றால், ஒரு கவளம் சோற்றைக் கூட உள்ளே வைக்க முடியாது எம் உள் மனத்தால். "பூப்பூக்கும் ஓசை கேட்கத்தான் ஆசை", "புல்விரியும் ஓசை கேட்கத்தான் ஆசை" என்கின்ற வைரமுத்து வரிகள் கவிதைப் பொய்யல்ல. கடலளவு கிடக்கும் மெய் விஞ்ஞானம்.

மனிதர் காதினால் உணர முடியாத 20 டெசிபலிலும் (db) குறைவான ஒலிகளை தாவரங்கள் வெளிப்படுத்தி உயிர் வாழ்கின்றன. உணவுக்காக பயன்படுகின்ற உயிர்களை இறைவனின் பெயரால் ஆலயங்களில் இல்லாதவனுக்கு, இருப்பவன் கொடையழிக்கும் பண்பாக உருவானவையே இந்தப் பழக்கங்கள் யாவையும். தேசம் விட்டு தேசம் சஞ்சாரிப்பவர்கள்கூட பண்டிகை நாள்களில், விழாக்காலங்களில் ஆலயங்களின் பெயரினால் ஊர் திரும்பி, உறவுகளோடு கூடி, ஒன்றாக உணவருந்தி, யாவரும் சமனென உண்டு உறங்கி மனமகிழ்ந்து இயைந்து வாழ்தல் என்கின்ற 'சிம்பிள்' தத்துவத்தை எப்படி புரியவைக்கப் போகின்றோம் தேரர்களுக்கு!

ஆலயங்களில் வெட்டப்படும் விலங்குடல்கள் வெறுமனே மண் தின்று போகாமல், யாதோவொருவனின் பசியாற்றிய பின்னரே அடங்கிப் போகும் என்கின்ற "தனியொருவனுக்கு உணவில்லையெனில், ஜகத்தினை அழிக்கும்" ஆவேசப் பாடலை ஏன் எந்தச் சிங்களக் கவிஞனும் பாடவில்லை இன்னமும்?

பிடிக்காத மதம் என்று தெரிந்து, ஒன்றுக்கு பத்துமுறை யோசித்த பின் தானே சித்தார்த்தன், புத்தனாகுவதென்று போய் போதியில் அமர்ந்தான். அந்த மனுசனே, எங்களை வேண்டாமென்று வெட்டிவிட்ட பிறகு, பிந்தி வந்த உங்களுக்கு மட்டுமேன் இவ்வளவு பிணக்கு?

நல்ல நெருப்பில் எரித்தால் 'பல், முடி ' எல்லாம் எப்படியும் எஞ்சாது என்பது கோம்பயன் மணலிலும், கொத்தியாலடியிலும் தெரிந்து கொள்ளக்கூடிய ஆறாம் அறிவேயாயினும், அந்த நேரம் கபிலவஸ்துவில் என்ன பஞ்சமோ யாதறிவார், போதுமான விறகு கிடைக்காமல் போனதால் எஞ்சியவற்றை 'வாரப்பொல'வரை விழுந்து சுமக்க வேண்டுமென்று புனித சின்னம்(?) நாட்டும் ஓர் நாளில் மட்டும் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட கொல்களங்களில், தம் ஆவி துறந்து வீதிக் கடைகளில் தொங்குகின்ற விலங்குகளின் எண்ணிக்கைக்கு ஒன்றுகூட அதிகமாக விழப் போவதில்லை முன்னேச்சரம் பத்திரகாளியின் முன்றிலில். "கொல்லானை, புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லாவுலகும் தொழும்" என்று வெண்சடைவள்ளுவன் வாய்மொழிந்ததையே காதில் போட்டுக் கொள்ளாத நாங்கள், 'மேர்வின் சில்வா'வுக்கும், 'எல்லாவல மேதானந்தத்திற்கும்' அவ்வளவு சுலபத்தில் அடங்கிடவா முடியும்? 'கவுணாவத்தை கத்தி'யின் வெட்டு விளிம்பு, கிளஸ்டர் குண்டுகளின் இரத்த தாகத்திலும் கூர்மை குறைந்ததே. என்றைக்கும் எங்கள் குதிக்கால் அழுக்கு கிடக்கட்டும், நீங்கள் குளியுங்கோ முதல்ல, பிளீஸ்!!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டிகள் தவறான வழிகளைக் காட்டலாமா?

*கட்டுரையாளர் ஓர் அனுபவம் மிக்க அதிபர்*

**நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதும், சாதனைகளில் முதன்மை நிலைகளில் இருப்பதுமான யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபர் பதவிக்கான இழுபறிநிலையும், அது தொடர்பான நேர், எதிர் செயற்பாடுகளும் குடாநாட்டின் இன்றைய கல்வி நிர்வாக முறைமையின் பலவீனத்தையும், நிர்வாகிகளின் கையாலாகாத்தனத்தையும், சமூகத்தின் அக்கறையற்ற தன்மையையும் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.**

மேலும் இந்தப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட சகல தரப்பினரும் தத்தமது தனிப்பட்ட நலன்களுக்கு முக்கியம் கொடுத்து செயற்படுகின்றார்களேயன்றி பாடசாலை என்ற நிலைத்த சமூக நிறுவனத்தையோ, மாணவர்களின் எதிர்காலத்தையோ சிந்திப்பதாகத் தெரியவில்லை. இவர்களது இத்தகைய செயற்பாடுகள் குறித்த பாடசாலையை மட்டும் பாதிப்பதாக அமையப் போவதில்லை. அதற்கும் மேலாக குடாநாட்டின் கல்விப் புலம் சார்ந்த பல்வேறு தரப்பினர்க்கும் தவறானதொரு முன்னுதாரணமாக அமைந்து தொடர் பாதிப்புக்களை ஏற்படுத்தும் எனக் கூறலாம்.

ஒவ்வொருவரும் தமது நடத்தைகள் அல்லது செயல்களுக்கு பொருத்தமான காரணங்களைக் காட்டமுடியும். நியாயங்களைக் கற்பிக்கவும் முடியும். அவையாவும் சரியாகவும் இருக்கலாம். எனினும் நியாயங்கள் அல்லது உரிமைகள் மறுக்கப்படும் போது அவற்றைப் பெறுவதற்கு பொருத்தமானதும், ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான வழிமுறைகளைப் பின்பற்றுவதே ஆரோக்கியமாக அமையும், அதிலும் குறிப்பாகப் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருப்போர், சமூகத்துக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டியோர் இது விடயத்தில் கூடிய புரிந்துணர்வுடனும் பொறுப்புடனும் நடக்க வேண்டியது மிக மிக அவசியமானதாகும். மாறாக ஒவ்வொருவரும் தமது தரப்பு நியாயங்களைக் கூறிக் கொண்டு பொருத்தமற்ற வழிமுறைகளைக் கையாள்வார்களாயின், அது எவருக்கும் நன்மை தரப்போவதில்லை. பதிலாக பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கலடையவே செய்யும்.

இந்த வகையில் யாழ்.வேம்படி பெண்கள் பாடசாலையின் அதிபர் பதவிக்கான நியமனம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் செயல்முறைகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட முக்கிய தரப்புக்கள் ஒவ்வொன்றும் பின்பற்றாமல் விட்ட வழிமுறைகளையும், தவிர்த்திருக்க வேண்டிய செயற்பாடுகளையும் ஆரோக்கியமான சமூகமொன்றுக்காக அக்கறைப்படுவோரின் சார்பாக இந்த பத்தி அணுக முயல்கிறது.

### பதில் அதிபரின் நிலைப்பாடு

முதலில் பதில் அதிபராக இருந்தவரும், அதிபர் பதவி வேண்டும் என உரிமை கொண்டாடுபவருமான திருமதி ரஜனி முத்துக்குமாரு அவர்களின் பக்கத்தை நோக்குவோம். அவர் குறித்த பாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியராகப் பணியாற்றியதுடன் முக்கியமான பதவிகளை வகித்து பதில் அதிபராகக் கடமை புரிந்தவர்.

இதற்கு மேலாக இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குப் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர். அத்துடன் பதில் அதிபராகக் கடமை புரிந்த காலத்தில் பாடசாலையைச் சிறந்த முறையில் வழிநடத்தி பெற்றோர், ஆசிரியர், மாணவர் மத்தியில் நல்ல பெயரையும் பெற்றவர். இந்த வகையில் அந்தப் பாடசாலைக்கு அதிபராக இருப்பதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருந்தும் கல்வி அமைச்சினால் தனக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்பது திருமதி ரஜனியின் கருத்து. அதற்கு அவர் முன்வைக்கும் காரணிகளுள் இரண்டு முதன்மை பெறுகின்றன.

1. வேண்டுமென்றே தவறான தரவுகள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டு, இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரித்தான பதவிக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டமை.

2. பழைய மாணவர் சங்கத்தினருடன் முரண்பாடுகள் காரணமாக அந்தச் சங்க உறுப்பினர்களின் செல்வாக்கினால் தனக்கெதிரான நிகழ்வுகள் நடந்தமை

இந்த இரு விடயங்களும் இந்தப் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் எனில், அவர் ஏன் இவை தொடர்பான எதிர் நினைவுகளைச் சிந்தித்துச் செயற்படவில்லை என்ற நிலை எழுகிறது.

அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு நியமனக் கடிதம் வழங்கப்படுவதற்கிடையில் போதிய கால அவகாசம் இருந்துள்ளது. விண்ணப்பம் கோரப்பட்ட போது அல்லது நேர்முகத் தேர்வின் பின் இந்த விடயங்களை உரியமுறையில் கல்வி அமைச்சுக்குச் சுட்டிக் காட்டி, நிவாரணத்தைப் பெற்றிருக்க முடியும். அதிலும் அவர் பதில் அதிபராக இருப்பதால் உண்மையான தரவுகளைச் சமர்ப்பிப்பது பெரிய கஷ்டமல்ல. அப்படியிருந்தும் அவர் செயற்படவில்லை என்றால் அவர் அசட்டையாக இருந்துள்ளார் அல்லது அவர் கூறும் காரணம் பொருத்தமற்றது என்ற முடிவுக்கே நாம் வர முடியும்.

இரண்டாவதாக, தனக்கு எதிராகக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை அவர் ஏலவே விளங்கிக் கொண்டு, இப்போது முழுமையாகச் சரணடைந்து விட்ட அரசியல் கட்சியிடமோ அல்லது அமைச்சரிடமோ முன்னதாகவே விடயங்களைக் கூறி காதோடு காது வைத்தாற் போல் காரியங்களைச் சாதித்திருக்க வேண்டும். இதன் மூலம் பாடசாலைக்கு மட்டுமன்றி தனது சொந்தப் பிரதிமைக்கும் எந்தவித ஊறும் வராமல் தடுத்திருக்க முடியும். ஏனெனில் அவர் பக்க நியாயங்களுக்காக சமூகம் அவர் மீது கொண்டிருந்த அனுதாபம்கூட அவரது அரசியல் சார்பு காரணமாக பெருமளவு அற்றுப் போய்விட்டது என்பதே உண்மை. இப்போது புறக்கணிப்புக்கள், பத்திரிகையாளர் மாநாடு, ஏட்டிக்குப் போட்டியாக ஊடகங்களுக்கு செவ்வியளித்தல் போன்றன அரசியல்வாதிகளுக்கு அவசியப்படலாம். ஆனால் ஒழுக்கமுள்ள சமுதாயமொன்றினை உருவாக்க வேண்டிய பாடசாலை அதிபர்களுக்கு அவை அவசியமுமில்லை. அழகுமில்லை.

### முரண்படுவது சிறந்த முகாமையல்ல

மற்றது பழைய மாணவர் சங்கச் செல்வாக்கு என்ற காரணி. பெரிய பாடசாலைகளின் அழுத்தக் குழுக்களில் பழைய மாணவர் சங்கங்கள் மிகவும் செல்வாக்குப் பொருந்தியவையாக இருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த விடயம். பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் இவை, அதன் மூலம் கல்லூரியின் செயற்பாடுகளில் தமது செல்வாக்கைப் பிரயோகிக்கின்றன என்பது பகிரங்க இரகசியம்.

இப்படியான அழுத்தக் குழுக்களைப் பகைத்துக் கொண்டு ஒரு பெரிய கல்லூரியை சுமுகமாக வழி நடத்துவது என்பது கடினமான விடயம். அதிலும் நிரந்தர நியமனம் பெறாத ஓர் அதிபர், முன்னைய நிர்வாகம் காரணமாக நன்றாக வேர் விட்டு ஊடுருவி நிற்கும் பழைய மாணவர் சங்கத்துடன் முரண்பட்டது புத்திசாலித்தனமான விடயமல்ல இதன் கருத்து திருமதி ரஜனி [illegible] போல பழைய மாணவர் சங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கு அவர் துணைபோயிருக்க வேண்டும் என்பதல்ல. செல்வாக்குள்ள பழைய மாணவர் சங்கத்தின் துணையுடன் தனது பதவியை நிரந்தரமாக்கிக் கொண்டு, படிமுறையாக அவர்களையும் தனது வழிக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்பதே தன் வலிமையையும் மாற்றான் வலிமையையும் கவனத்திற் கொண்டு செயற்படுவதே சிறப்பு முகாமையாக அமைய முடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் அரச ஊழியர் என்ற வகையில் ஒழுக்க விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் அமைய நடக்க வேண்டியது கட்டாயமானது. மேலிடத்தில் இருந்து வரும் சட்டரீதியான அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்வது, அரச ஊழியரை நீதிமன்றின் வாசலுக்கே கொண்டு செல்லும். அந்த வகையில் பொதுச் சேவை ஆணைக் குழுவின் நியமனக் கடிதத்தை உதாசீனம் செய்தமை ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒன்றல்ல.

### புதிய அதிபரின் நிலைப்பாடு

அடுத்து நாம் புதிய அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி ரேணுகா சண்முகரத்தினம் அவர்கள் பக்கத்து நியாயங்களையும் பார்க்கலாம். கல்வியில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ள இவர், இலங்கை அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்தவர். மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பிரதி அதிபராகவும் பின் மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் அதிபராகவும் பணியாற்றி பின், சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் அதிபர் பணியை ஏற்றவர். அதிபர் பதவியில் நிறைந்த அனுபவம் பெற்ற ஒருவர். இதன் காரணமாகவே நேர்முகத் தேர்வில் கூடிய புள்ளிகளை அவரால் பெறமுடிந்தது.

அதன் வழி அதிபர் நியமனமும் அவருக்கு வழங்கப்பட்டது. இவற்றுக்கு மேலாக, பதில் அதிபர் கூறுவது போல பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவும் இவருக்கு இருப்பதாக எடுத்துக் கொள்வோம். இவையெல்லாம் அதிபர் பதவிக்கான நல்ல தகைமைகள்தான். என்றாலும் இன்றைய கள நிலைமைகளில் இவை மட்டும் வேம்படி உயர்தரப் பாடசாலை அதிபராவதற்கும் அதனை நல்ல முறையில் கொண்டு செல்வதற்கும் போதுமானவையா? என திருமதி ரேணுகா சிந்தித்திருக்க வேண்டும்.

ஏனெனில் இவரது போட்டியாளர் குறித்த பாடசாலையில் ஏலவே பதில் அதிபராக உள்ளார். அத்துடன் அவர் நீண்டகாலம் அப்பாடசாலையில் பணியாற்றி வருவதால் மாணவர், ஆசிரியர், பெற்றோரிடம் மதிப்பைப் பெற்றுள்ளார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் பின்புலமும் அவருக்கு உள்ளது. அதனை மீறி ஒரு சிறுதுரும்பைக் கூட அசைக்க விரும்பாத கல்வி அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நியமனக் கடிதம் மற்றும் ஒரு சிலரின் மறைமுக ஆதரவுடன் இந்த முயற்சி வெற்றியளிக்குமா என அவர் நிச்சயம் சிந்தித்திருக்க வேண்டும். ஏனைய அரச நிறுவனங்களைப் போல் நியமனக் கடிதம் ஒன்றுடன் மட்டும் போய் பெரிய பாடசாலையொன்றின் தலைமைக் கதிரையில் அமர முடியாது என்பதை அவர் தம் அனுபவத்தின் வாயிலாக உணர்ந்திருக்க வேண்டும். அவர் ஆரம்பத்திலிருந்தே சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் நிலைமை இவ்வாறு மோசடைவதைத் தவிர்த்திருக்கலாம்.

### ரேணுகா செய்திருக்கக் கூடியவைகள்

1. இந்தப் பதவிக்கு விண்ணப்பம் செய்வதற்கு முன் அந்தப் பாடசாலையில் இருந்திருக்கக் கூடிய சூழ்நிலைகளைக் கருத்தில் [illegible] திருக்க வேண்டும். குறிப்பாக பதில் அதிபர் விருப்பத்தை நாடிபிடித்துப் பார்த்து விண்ணப்பம் செய்யும் தீர்மானத்தை தடுத்திருக்கலாம்.

2. அல்லது, நியமனம் கிடைத்த பின்னர், கல்லூரிக்குள் நுழைவதற்கு முன், அங்குள்ள களநிலைமைகளைத் தனக்குச் சாதகமாக மாற்ற முனைந்திருக்க வேண்டும். குறிப்பாக பழைய மாணவர் சங்கத்தின் துணையுடன், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர், பெற்றோர், செல்வாக்குடைய பிரமுகர்கள் போன்றோரின் ஆதரவைத் தேடியிருக்க வேண்டும்.

3. இவற்றுக்கு மேலாக பதில் அதிபருக்குச் சார்பாக இருக்கும் தரப்பைத் தனக்குச் சார்பாக மாற்ற முயன்றிருக்க வேண்டும். அல்லது அவர்களை நடுநிலைமை வகிக்கவாவது முயன்றிருக்க வேண்டும்.

4. அத்துடன் இப்போது, உள்ளது போல் நிலைமைகள் கையை மீறிப் போனால் அதை எவ்வாறு வெற்றி கொள்வது என்ற முன்யோசனையும் நிச்சயமாக இருந்திருக்க வேண்டும். அல்லது அவராகவே பாடசாலை நலன்கருதி வெற்றிகரமாக பின் வாங்கியிருக்க வேண்டும். முகவரியிழந்து இருப்பதை விட இது மேலானதாக இருந்திருக்கும். ஏனெனில் திருமதி ரேணுகா அவர்கள் அதிபராகப் பணிபுரிந்த இராமநாதன் கல்லூரியும் வரலாற்றுப் பெருமை கொண்டது. ஒரு பெண்கள் கல்லூரியை விட மேலானது என்றும் கூறலாம். எனவே வேம்படியில்தான் அவர் அதிபராக இருக்க வேண்டுமென்பதில்லை. இராமநாதன் பெண்கள் கல்லூரியிலும் தனது பணியைச் சிறப்பாகச் செய்திருக்க முடியும். அத்துடன் இந்தக் கல்லூரியின் அதிபர் பொறுப்பை மிக அண்மையில்தான் பொறுப்பேற்றுமிருந்தார்.

பாடசாலை அதிபர்கள் பிரபல்யமான கல்லூரிகளில் அதிபராகப் பணியாற்ற விரும்புவதில் தவறில்லை என்றாலும் தாம் ஏற்கனவே பொறுப்பேற்ற பாடசாலைகளில் எதனைச் சாதித்தோம் என்பதையும் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அடுத்து இந்தப் பிரச்சினை தொடர்பாகக் கல்வி நிர்வாகத்தினரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நோக்க வேண்டும். பாடசாலைகளின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவும் முகாமை செய்யவும் மத்திய கல்வி அமைச்சிலிருந்து, மாகாணம், வலயம், கோட்டம் என நிர்வாகக் கட்டமைப்புகளும், அவற்றிற்கு செயலாளர், தொடர் கல்வி அலுவலர் வரையான பல நூற்றுக்கணக்கான உயர்நிலைப் பணிப்பாளர்களும், பணியாளர்களும் இருக்கின்றனர். இவர்களை வழிப்படுத்த விதிகள், பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் எல்லாம் தாராளமாகவே உள்ளன. இருந்தும் என்ன, ஒன்றுமே ஒழுங்காக நடப்பதில்லை என்பதே பலரது கருத்தாக உள்ளது.

நீதியாகவும், நேர்மையாகவும், விதிகளின் படியும் இந்தப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட கல்வி அதிகாரிகள் செயற்பட்டிருப்பார்களேயானால் இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் நீடித்திருக்க முடியுமா? எமக்கேன் வம்பு, பேசாமல் இருப்பதே எமக்கும், எமது பதவிக்கும் பாதுகாப்பு எனக் கருதும் அதிகாரிகளும், அதற்கு மேல் பிழையெனத் தெரிந்தும் சுயநலன்களுக்காக 'ஜால்ரா' போடும் அதிகாரிகளும், கழுவும் மீனில் நழுவும் மீனாக உள்ள அதிகாரிகளும் இருக்கும் வரை இவ்வகையான பிரச்சினைகள் கூடுமேயொழியக் குறைய வாய்ப்பில்லை.

இந்தப் பிரச்சினையின் ஆரம்பக் கட்டத்தில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் "பொதுச் சேவை ஆணைக்குழுவின் கடிதமே உயர்வானது. அதற்கமையவே எல்லாம் நடக்கும்" எனச் சரியான விதிமுறையைத் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் அவரின் குரலும் அடக்கப்பட்டுவிட்டது. அத்துடன் பொறுப்பான கல்வி அதிகாரிகள் எவரும் இது தொடர்பாக வாயைத் திறக்கவில்லை. பொருத்தமாக எதுவும் செய்யவுமில்லை. இந்த நிலையில் குடாநாட்டின் கல்வியை மேம்படுத்துவோம் என்ற வெற்றுக் கோசங்களுக்கு மட்டும் குறைவில்லை.

கல்வி அதிகாரிகள் மட்டுமல்ல, இந்தக் கல்லூரிக்காக காலமெல்லாம் வரிந்து கட்டி நிற்பவர்களும் புலமைப் பரிசில் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கோ பெருந்தொகைப் பணத்தைப் பெற்றோரிடமிருந்து கறப்பதற்கோ துணை நிற்பவர்களுமான பேராசிரியர்கள், பெருமக்கள், ஆலோசகர்கள் எல்லோரும் இப்போது எங்கே போய் விட்டார்கள் என குடாநாட்டுக் கல்விச் சமூகம் தேடிக் கொண்டிருக்கிறது.

இவர்கள் எல்லோருக்கும் கீதையின் ஒரு வாசகத்தை நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

"செய்யக் கூடாததைச் செய்வது மட்டும் பாவமன்று
செய்ய வேண்டியதைச் செய்யாமலிருப்பதும் பாவம்தான்"

### அரசியல் தலையீடு

அடுத்து இந்தப் பிரச்சினைக்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்புகளைப் பார்க்கலாம். உண்மையில் இந்தப் பிரச்சினையை இவ்வளவு தூரம் ஊதிப் பெருப்பிக்கச் செய்ததில் அரசியல்வாதிகளின் பங்கே முக்கியமானதாக இருந்துள்ளது. இன்னும் சிறப்பாகச் சொன்னால் செய்ய வேண்டியதைச் சரியாகச் செய்யாத கல்வி அமைச்சரும், செய்யக் கூடாததையெல்லாம் செய்து கொண்டிருக்கின்ற பாரம்பரியக் கைத்தொழில் அமைச்சரும், இந்தப் பிரச்சினையின் முக்கிய பங்காளர்கள் எனலாம்.

தமிழர்களின் கல்வியைச் சிதைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது, அல்லது சிதைவு ஏற்படும் போது தடுப்பதற்குப் பதிலாக மறைமுகமாக ஊக்குவிப்பது என்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர் ஒரு புறம். குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது அல்லது மீன்பிடிப்பதற்காகக் குட்டையைக் குழப்புவது என்ற வழமையைக் கொண்டவர் மறுபுறம். இதற்கிடையில் சிக்கித் தவிக்கிறது எமது கல்விப் புலம்.

தமக்குச் சார்பானவர்களை அரச உயர்பதவிகளில் அமர்த்துவது என்பது ஆட்சியாளர்களின் வழக்கம் தான். இது இலங்கையில் மிகவும் கூர்மையடைந்து கொண்டு செல்வதைக் காணமுடியும். எனினும் பாடசாலை ஒன்றில் தமக்குச் சார்பான ஒருவரை அதிபராக நியமிப்பதில் எவ்வளவு தூரம் நன்மை கிடைக்குமோ தெரியாது. சரி! அவ்வாறு ஒரு தேவையிருந்தால் அதனை மிக இரகசியமான முறையில் செய்திருக்க வேண்டும். அத்துடன் புதிய நியமனம் பெற்ற அதிபர் கூட குறித்த கட்சிக்கோ அல்லது அமைச்சருக்கோ எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவரல்ல. அவர் பிரச்சினையில்லாது அதிபராகப் பங்கேற்றிருப்பின் பதில் அதிபரை விட மிக விசுவாசமாக இருந்திருப்பதற்கும் வாய்ப்பிருந்தது.

முடிவாக இந்தப் பத்தியின் தொடக்கத்தில் சுட்டிக் காட்டியது போல, இந்தப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட எல்லாத் தரப்பும் எதிர்காலக் கல்விச் சமூகத்திற்கு தவறான முன்னுதாரணங்களாகத் திகழ்கிறார்கள். இதன் மூலம் வடக்கில் இது போன்ற பல நிகழ்வுகள் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் எமது கல்வி நிலை மேலும் வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகத் தென்படுகின்றன. இவற்றைத் தடுப்பது சமூகத்தின் பால் அக்கறையுள்ள அனைவரதும் கடமையாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக மாலை

ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டாலும் சில பேர் தம் நலத்திற்காகத்தான் செய்வார்கள். மறந்தும் கூட மற்றவர்க்கு மனத்தாலும் நன்மை நினைக்க மாட்டார்கள். அவர்களது ஒவ்வொரு அசைவும் தமக்காக தம் நன்மைக்காக என்றே இருக்கும் .

அப்படிப்பட்டவர்களைப் பார்க்கும் போது நமக்கு துன்பம் . அவர்கள் பக்கத்தில் இருந்தாலே துன்பம் வெப்பமும் வேதனையும் அங்கே வட்டமிடும் . இதற்கு நேர்மாறாக எங்கேயும், எப்போதும், எது செய்தாலும் அது தமக்காக இல்லை; பிறர்க்காகவே என்று வாழுகிற உத்தமர்களும் உலகில் இருக்கிறார்கள். அவர்கள் வணங்கத்தக்கவர்கள். வரலாறு படைப்பவர்கள்.

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி'' என்கிற திருப்பாவை வரிக்கு வியாக்கியானம் செய்யும் போது பிறர் பொருட்டு," மற்றவர் நன்மைக்காக, தான் , தாழ்ந்து போகிற நிலையே உத்தமனின் இலக்கணம் என்று சொல்வது வழக்கம். அந்த உத்தமனான... திருமாலுக்கே உதவிய உத்தமன் ஸ்ரீஆஞ்சநேயன்.

அவரது எந்தச் செயலும் அவருக்கான நன்மை குறித்து செய்யப்பட்டவை அல்ல. எல்லாமே பிறருக்காக... பிறர்நன்மைக்காக.

அதிக பலம் இருந்தாலும் அநீதிக்கு அஞ்சாத வாலியிடம் சேராதவர் அனுமன். பலவீனமான சுக்ரீவனுக்கு பக்கபலமாக 'ரிச்ய ச்ருங்க' மலையில் வாழ்கிறவர் அனுமன். அவர் இராமனைக் கண்டதும் அன்புகொண்டதும் சுக்ரீவனைக் காப்பாற்றவே .

உயிராபத்தான இலங்கைப்பயணம் மேற்கொண்டதும், தடைகளை வென்றதும், சீதையைக்கண்டதும், சிந்தை மகிழ்ந்ததும் இராமனுக்காகவே. இராமன் பிரிவுத் துயர் தீர்க்கவே அவர் துன்பம் சுமந்தார்.

இராவணன் அரசவை ஏகியதும், இராமன் புகழ் பேசியதும் தனக்காகவா? இல்லை அங்கிருந்த தர்மாத்மா ஆகிய பீடணன் இராமன், பரம்பொருள் என்று உணரவே ... உய்யவே... இத்தனை துயரங்கள்.

இராமன் போருக்கு உதவியதும், மரணத்தின் வாயிலை ஓடி ஓடித் தொட்டதும் தனக்காகவா? இல்லை ... அசோகவனத்தில் அழுது அரற்றிய அன்னை ஜானகியின் அழுகையை நிறுத்தவே!

பீடணனைக் கொல்ல இராவணன் எறிந்த வேலை தன் மார்பில் வாங்க ஓடியமை, இராமனது அடைக்கலப் பொருள் அழிந்தது என்ற பழி வரக்கூடாது என்ற நினைப்பினாலேயே...


போர்க்களத்தில் மயங்கிச் சாய்ந்த இளைய பெருமானைக் கண்டு இராமன் அழுது சோர்ந்த சமயத்தில், மருந்து மலை கொணர்ந்தது இலக்குவனைக் காக்க , இராமனை மீட்க முயன்றமை தனக்காக அல்லவே!

இராமன் வனம் சென்று பதினான்கு ஆண்டுகள் ஆயின என்று அறிந்து, நெருப்பு மூட்டி உயிர்விடத்துணிந்த பரதனை மீட்க இராமன் அனுப்பியது அனுமனையே! எங்கும் எப்போதும் 'பிறர்க்கென வாழும் பெற்றியாளனாக' 'தனக்கென வாழா ' தகைமையாளனாக வாழும் வாழ்வே அனுமன் உலகிற்கு அளிக்கும் செய்தி .

சுக்ரீவனுக்காக, இராமனுக்காக, சீதைக்காக, இலக்குவனுக்காக, பீடணனுக்காக, பரதனுக்காக என்று எப்போதும் மற்றவர்க்கே வாழ்ந்த மாபெரும் வாழ்வு அனுமனுடையது. மறந்தும் அவர் தனக்கென வாழ்ந்ததாக ஒரு செய்திகூட இராமாயணத்தில் இல்லை!

பெருவாரியான அறிவாளிகள் மிகப்பெரும் சுயநலவாதிகளாகிப் போனமை சமூகத்தின் துரதிருஷ்டம். தங்கள் அறிவைக் கொண்டு தாம் வளருவதும், தாம் மட்டுமே வளர்வதுமே அவர்கள் தலையாய நோக்கம் ஆகிவிட்டது.

அதற்கு அனுமன் விதிவிலக்கு! மிக அதிகமான பலம் உடையவர்கள் தீய வழிகளுக்கும், அநீதிகட்கும் தங்கள் பலத்தைப் பிரயோகிப்பது இன்று உலகின் பேரவலம். இதற்கு மாமருந்து பிரம்மச்சாரி அனுமனின் தியாக மனம்; யோகபலம். அவர் தமது பலத்தைத் தகாது பிரயோகம் செய்தார் என்று எங்கும் எந்த இடத்திலும் ஒரு செய்தி கிடையாது.



சுகி.சிவம்

# தண்ணீர்ப் பந்தலமைத்து தாகசாந்தி செய்யும் பெரிய தேவனத்தாய் சன சமூக நிலையம்

(கடந்தவாரத் தொடர்ச்சி...)



**கர்ணன்**

பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தின் பேராதரவுடன் புலோலியூர் இளைஞர்கள் ஒன்றிணைந்து வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சப்பறம், தேர், சமுத்திர, கேணித் தீர்த்தத்திருவிழாக்கள் நடைபெறும் நாள்களில் 'தண்ணீர்ப்பந்தல்' என அழைக்கப்படும் தாகசாந்தி நிலையத்தை சுமார் அரை நூற்றாண்டு காலமாக நடத்தி வருகின்றார்கள்.

மருதங்கேணி வீதியில் உள்ள தும்பளை-வல்லிபுரக் கோயில் மந்திகை- வல்லிபுரக் கோவில் வீதிகளை இணைக்கும் ஆனைவிழுந்தான் சந்தியில் 1962 ஆம் ஆண்டு முதல் இந்த தாகசாந்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டாண்டு காலமாக தாகசாந்தி அளிக்கப்பட்டு வருகின்றது. இந்த சந்தியில் வீதி ஓரம் நல்ல தண்ணீர்க் கிணறுடன் அமைந்திருந்த பற்றைக் காட்டு நிலத்தை அனைத்து இளைஞர்களும் ஒன்றிணைந்து அழித்து துப்பரவு செய்து நல்ல தண்ணீர்க் கிணற்றையும் துப்பரவு செய்து அதற்குப் பாதுகாப்புச் சுவர் அமைத்து, அந்த இடத்திலும், அதனுடன் இணைந்த வீதியை மூடியும், பந்தலிட்டு அலங்கரித்து வருடந்தோறும் தாக சாந்தி நிலையம் அமைக்கப்படுவது வழக்கமாகும்.

இவ்வாறு தாக சாந்தி நிலையம் அமைக்கப்பட்டு பக்தர்களுக்கு தாகசாந்தி வழங்கப்படுகின்றது. தாக சாந்தி பெற்றுக் கொள்ளும் பக்தர்களில் கால்நடையாகவும், சைக்கிள், மோட்டார் சைக்கிளில் வரும் பக்தர்கள் தாக சாந்தியைப் பெற்று வீதியை மூடிய பந்தலின் மறுகரை ஓரத்தில் ஆற அமர இருந்து இளைப்பாறிச் செல்லும் வழக்கமும் இருந்து வருகின்றது.

தாக சாந்தி நிலையம் செயற்படத் தொடங்கி ஓரிரு தசாப்தங்கள் நிறைவு பெற்ற நிலையில் தாக சாந்தி நிலையத்துக்கென ஒரு திறந்த மண்டபத்தினை ...... உருவச் சிலையுடன் நிரந்தரமாக புலோலி இளைஞர்கள் அமைத்தார்கள். இப்போது விசேடமாக அமைக்கப்படும் வீதியோடு மூடப்பட்ட கிடுகுப் பந்தலுடன் இந்த திறந்த மண்டபத்தில் வைத்தே தாகசாந்தி நிலையம் நடத்தப்படுகின்றது.

பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வல்லிபுர மாயவனின் விசேட திருவிழாக் காலங்களில் தாகசாந்தி பெற்று ஆனந்தமடையும் இந்த தாக சாந்தி நிலையம் 1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இடைவிடாது தொடர்ந்து இயங்கிய போதும், கடுமையான போர் நடைபெற்ற 1990-1995 ஆண்டு காலப் பகுதியில் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் இரண்டு ஆண்டுகள் இயங்கவில்லை. இந்த ஆண்டு நடத்தப்படும் தாகசாந்தி நிலையம் தனது 48 ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது என தண்ணீர்ப்பந்தல் நிர்வாகம் அறிவித்துள்ளது.

> பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வல்லிபுர மாயவனின் விசேட திருவிழாக் காலங்களில் தாகசாந்தி பெற்று ஆனந்தமடையும் இந்த தாக சாந்தி நிலையம் 1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இடைவிடாது தொடர்ந்து இயங்கிய போதும், கடுமையான போர் நடைபெற்ற 1990–1995 ஆண்டு காலப் பகுதியில் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் இரண்டு ஆண்டுகள் இயங்கவில்லை.

பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தின் ஓரங்கமாக தாக சாந்தி நிலையம் இயங்கி வருகின்ற போதிலும் இதற்கென தனியான நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுதாக சாந்தி நிலையம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தக் குழுவின் தலைவராக ஆ.புண்ணியமூர்த்தியும் செயலாளராக தி.முருகதாசனும், பொருளாளராக மு.பரமேஸ்வரனும் செயற்பட்டு வருகின்றனர். குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக தா.ஜெயவீரசிங்கம், ச.யோகலிங்கம், சி.ஐங்கரன், செ.கருணாநிதி, சி.பாலகோபன், லே.கணேசராசா, சி.சத்தியேந்திரா, செ.சிவசுப்பிரமணியம், ந.ராஜ்குமார் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தாகசாந்தி நிலையத்துக்கென சிறுதுளிகளாகச் சேர்க்கப்பட்ட நிதி பெரும் வெள்ளமாகி, இந்த ஆண்டு தாக சாந்தி நிலையத்தின் கையிருப்பு மீதியாக ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 280 ரூபா இருப்பதாக வரவு செலவுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சனசமூக நிலையம் பெரிய தேவனத்தாய் கிராம மக்களுக்கு பல்வேறு வகையிலும் பயன்பெறும் வகையில் சேவையாற்றி வந்ததுடன் அதனை மேலும் விரிவாக்குத் திட்டங்களுடன் செயற்பட்டு வருகின்றது. இந்தச் சனசமூக நிலையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற வங்கியாளரும் நாடகக் கலைஞருமான சு.வல்லிபுரநாதனும், ஓய்வு பெற்ற கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தரான சி.சிவமயமும் பொருளாளராக இளையதலைமுறையைச் சேர்ந்த க.பிரணவனும் செயற்பட்டு வருகின்றனர்.

இந்தச் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் பாலர் பாடசாலையில் தற்போது 32 சிறார்கள் கற்று வருகின்றனர். தனியார் ஒருவர் இலவசமாக வழங்கிய வீட்டில் இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றது. இந்தப் பாடசாலைக்கென உபயகதிர்காமம் கோவில் நிர்வாகம் காணி ஒன்றை வழங்கியுள்ளது. இந்தக் காணியில் சிறுவர்களின் விளையாட்டுக்குரிய ஊஞ்சல் ஒன்றையும் மலசல கூடம் ஒன்றையும் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்தக் காணியில் பாலர் பாடசாலைக்கென புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான முயற்சிகளில் சனசமூக நிலையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இளைஞர்களை விளையாட்டுத்துறையில் ஊக்குவிக்கும் பொருட்டு உபயகதிர்காமம் பிள்ளையார் கோவில், தான்தோன்றி ஈஸ்வர சண்முகப் பெருமாள் கோவில் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட இடத்தில் தற்காலிகமாக விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு விளையாட்டு செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் நடத்தப்பட்டு வந்த அறிஞர் விழா யுத்த காலத்தினால் தடைப்பட்டுப் போனது. இந்த விழாவை மீண்டும் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இந்த சனசமூக நிலையம் பின் வரும் நோக்கங்களைச் செயற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

திறந்த மட்டத்தில் பேரறிஞர் கந்த முருகேசனார் போன்ற அறிஞர்கள், பெரியார்கள் தொடர்பாக ஆய்வுக் கட்டுரையை கல்விமான்களின் உதவியுடன் நடத்துதல் இலக்கிய, இலக்கண உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல், பாடசாலை மட்டத்தில் சனசமூக நிலைய நிறுவுநர் தினத்தையொட்டி பேச்சு, கட்டுரைப் போட்டிகளை நடத்துதல், புராணங்கள், திருமுறைகள் எவ்வாறு ஓதப்பட வேண்டும். அதன் பண்கள் தாளங்கள் தொடர்பான விளக்கங்களையும் பயிற்சிகளையும் ஆர்வமுடையோருக்கு பயிற்றுவித்தல் போன்ற நோக்கங்களை செயற்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய சின்னங்கள் அழியாமல் பாதுகாக்க உதவியாக இருக்கும் என இந்தச் சனசமூக நிலையம் எதிர் பார்க்கின்றது.

எத்தனையோ உத்தமர்களின் முயற்சியினால் ஆரம்பித்து வளர்த்தெடுக்கப்பட்ட இந்தச் சனசமூக நிலையம் கடந்த 2001 ஆம் ஆண்டு அமைதியான முறையில் பொன்விழாவைத் தாண்டி இயங்கிக் கொண்டிருக்கின்றது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விதிகளை மீறும் நீலப் படையணியினர்

## எதிர்க்கட்சிகள் முறைப்பாடு

**வெளி இடங்களில் இருந்து வந்து பிரசாரங்களில் ஈடுபடும் இவர்களால், பொதுமக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதுடன், தேர்தல் விதிமுறைகளை மீறும் வகையிலும் அமைந்துள்ளன.**

எருவில்,செப்.5

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் உருவாக்கப்பட்டுள்ள நீலப் படையணியினரால் தேர்தல் விதிமுறைகள் மீறப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் முறைப்பாடு செய்துள்ளன.

நீலச்சட்டை, நீலத் தொப்பி அணிந்த இந்தக் குழுவினர், கிழக்கில் பல்வேறு பகுதிகளிலும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளி இடங்களில் இருந்து வந்து பிரசாரங்களில் ஈடுபடும் இவர்களால், பொதுமக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதுடன், தேர்தல் விதிமுறைகளை மீறும் வகையிலும் அமைந்துள்ளன.

இவர்களின் செயற்பாடுகள் மக்களின் அன்றாட பணிகளுக்கு இடையூறாக அமைகின்றன. பஸ்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ள இவர்கள், தேர்தல் விதிமுறைகளுக்கு முரணாக வீடு வீடாகச் சென்று விருப்பு வாக்கு இலக்கங்களுடன் கூடிய துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கின்றனர்.

நீலச்சட்டைக் குழுவினர் அரச கட்டடங்களைப் பயன்படுத்துகின்றனர்.

மட்டக்களப்பில் சமுர்த்தி அதிகாரிகளையும், கிராம அதிகாரிகளையும் தமதுபிரசாரங்களுக்கு உதவுமாறு நீலச் சட்டைக் குழுவினர் அச்சுறுத்தியுள்ளன- என்றார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரனும், நீலச்சட்டைக் குழுவினர், ஆளும்கட்சிக்கு வாக்களிக்குமாறு நிர்ப்பந்திப்பதாகவும், இது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என்றும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் மட்டுமன்றி, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் இவர்கள் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர். சமுர்த்தி அதிகாரிகளை தமக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபடுமாறு நிர்ப்பந்தித்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக இதுவரை 148 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் 36, மட்டக்களப்பல் 40, அம்பாறையில் 72 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மலையகத்தில் கொட்டும் பனி



நுவரெலியா, ஹற்றன், கம்பளை, வெலிமடை ஆகிய இடங்களில் கடும் பனிப்பொழிவு நிலவுகின்றது என்று நுவரெலியா மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வாகன சாரதிகள் அவதானமாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# திருமலையில் ஆளும் தரப்பின் தேர்தல் பிரசாரம் சூடுபிடிப்பு

திருகோணமலை,செப்.5

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுமுகமாக திருகோணமலை மாவட்டத்தில் பிரசாரப் பணிகள் தீவிரப்ப டுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் கிராமங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள் வீடுவீடாகச் சென்று அரசால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள்பற்றி மக்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர்.

திருகோணமலை நகரிலுள்ள ஐ.ம.சு. முன்னணித் தேர்தல் அலுவலகத்திலிருந்து கடந்த முதலாம் திகதி காலை பிரசாரப் பணிகள் ஆரம்பமாகின.

தொழில் அமைச்சர் காமினி லொக்குகே, மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மேல்மாகாணசபை உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத் ஆகியோரின் பங்குபற்றலுடன் தேர்தல் பிராசாரப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (ச-40)

# மு.கா. தலைமைத்துவம் எடுக்கும் முடிவுக்கு நாம் கட்டுப்படுவோம்

**அதாவுல்லா போன்று சின்னத்தனமான அரசியல் செய்யமுடியாது என்கிறார் ஜவாஹிர் சாலி**

எருவில்,செப்.5

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் என்ன தீர்மானத்தை எடுக்கின்றதோ அதன் வழியிலேயே நாம் செயற்படுவோம் என்று மட்டக்களப்பு மாவட்ட மு.கா. வேட்பாளர் ஜவாஹிர் சாலி தெரிவித்துள்ளார்.

ஓட்டமாவடியில் இடம்பெற்ற கட்சிப் பிரமுகர்களுடனான சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:-

சில தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அப்போதைய அரசியல் கள நிலவரம், சமூகத்தின் இருப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது அ.இ.மு.கா. சார்பாக வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு கூடுதல் விருப்பு வாக்குகளுடன் தெரிவானேன்.

இந்தத் தேர்தலில் அரசைவிட்டு விலகி மு.காவில் இணைந்து போட்டியிடுகின்றேன்.

முஸ்லிம்களின் உணர்வலைகளை உரசிப் பார்க்கும் இந்த அரசில் என்னால் இருக்க முடியாது. பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டு சமூகத்தின் இருப்புக்கே ஆபத்து நேரும்போது எவ்வாறு அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்பது?

அரசு அன்று சரியாக நடந்துகொண்டதால் அரசில் இருந்தேன். இன்று பிழையான அரசில் இருந்துகொண்டு சமூகத்தைக் காட்டிக் கொடுக்க முடியாது. சமூகத்துக்கு ஆபத்து நேரும்போது அடைக்கலம்தேடி மு.காவுக்கு வந்தேன். முஸ்லிம் சமூகத்தை இன்று பாதுகாக்கக்கூடிய ஒரேயொரு கட்சி மு.காதான்.

2002ஆம் ஆண்டு புலிகள் இயக்கத் தலைவர் சர்வ வல்லமை படைத்வராகக் காணப்பட்டார். உலகத் தலைவர்கள் உள்ளடங்கலாக இலங்கை அரச தலைமையும் பிரபாகரனுடன் பேச்சு நடத்த முண்டியடித்த காலம் அது.

அன்று பிரபாகரன், மு.கா. தலைவரை அழைத்துப் பேச்சு நடத்தினார். அந்தப் பேச்சில் கலந்துகொள்ள அமைச்சர் அதாவுல்லாவின் பெயரை உள்ளடக்காதபோதிலும் அடம்பிடித்து குழுவில் இணைந்துகொண்டார்.

ஆனால், இன்று அதே அதாவுல்லா ரவூப் ஹக்கீமை விமர்சிக்கின்றார். இது என்ன நியாயம்? அன்றைய கள நிலவரப்படி புலிகள் இயக்கத் தலைவருடன் பேச்சு நடத்தினாலே போதும் என்ற நிலை இருந்தது. அதை உணர்ந்ததாலேயே சாணக்கியமாகச் சிந்தித்து மு.கா. தலைவர் பேச்சு நடத்தினார். அதனால் அன்று முஸ்லிம் சமூகம் சற்று அமைதிச்சூழலில் வாழ்ந்தது.

சின்னத்தனமான சிந்தனையுடன் பட்டம், பதவிக்காக அமைச்சர் அதாவுல்லா போன்று சமூகத்தைக் காட்டிக்கொடுக்க எம்மால் முடியாது. மு.கா. தலைமைத்துவம் தேர்தலின் பின்னர் என்ன முடிவை எடுக்கின்றதோ அதுதான் மு.காவில் போட்டியிட்டு வெற்றியடைகின்றவர்களின் முடிவாக இருக்கும் என்பதை சிறுபிள்ளைத்தனமாக மு.காவைப் பிரிக்கும் நோக்கல் அறிக்கை விடுபவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார். (ச-31)



காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள மீராபாலிகா மகா வித்தியாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதையைத் திறந்துவைக்க நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்றபோது...

### தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு:

# பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோரிக்கை

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளமையினால் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு தேர்தல் கண்காணிப்பாளர்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமையினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையிலான வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

இரு கட்சிகளுக்கு இடையிலான மோதல்களினால் பாதிக்கப்பட்ட பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்தது.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் இந்த நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ச)

# வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே கூட்டமைப்பின் கொள்கை

## இதிலிருந்து விலகப் போவதில்லை என்கிறார் வேட்பாளர் குமணன்



**திருகோணமலை,செப்.5**

**வடக்கு, கிழக்கு இணைந்த தாயகக் கோரிக்கையை முன்னெடுக்கவும், விரும்பத்தகாத** சக்திகள் மாகாண நிர்வாகத்தை ஆக்கிரமித்து எமது போராட்டத்துக்குக் குந்தகம் விளைவிப்பதைத் தடுக்கவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் நல்லதம்பி குமணன் தெரிவித்தார்.

திருகோணமலை நகரின் புறநகர்ப் பகுதிகளில் நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் பங்குபற்றி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கையாகும். அதிலிருந்து [illegible] அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்ல முடியாது.

சர்வதேச சூழலை மிகவும் சரியாகப் பயன்படுத்தி நிலைத்து நிற்கக்கூடியதும், நியாயமானதுமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது.

அதற்கேற்ற விதத்திலான இராஜதந்திர நகர்வுகளையே சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகிறது.

அதற்கு உரமூட்டும் வகையில் இலங்கை அரசுக்குப் பாடம் படிப்பிக்கக் கூடியதான தேர்தல் தீர்ப்பை கிழக்குத் தமிழ் மக்கள் வழங்கவேண்டும்.

கிழக்கு மாகாணசபையில் தமிழரின் பிரதிநிதித்துவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனிப்பெரும் கட்சியாகக் கூடுதல் ஆசனங்களைக் கூடுதல் வாக்குகளால் தெரிவு செய்வதன் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுவதன் மூலம் அதிகபட்ச அதிகாரப்பகிர்வு கொண்ட அமைப்பாக மாற்றமுடியும். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் செயலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அமைப்பாகவும் கிழக்கு மாகாண சபையை நாம் பயன்படுத்த முடியும் - என்றார் (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மனம் தெளிந்த நீரோடைபோல இருக்கும். எந்தச் செயலையும் சமயோசிதமாகச் செய்வீர்கள். நண்பர், உறவினர்கள் பாசபந்தத்துடன் நடப்பர். முக்கிய வீட்டு சாதனைப் பொருள்களை வாங்க அனுகூலம் உண்டு.

**இடபம்:** உங்கள் மனதில் சில விடயங்களில் சந்தேகம் உருவாகும். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை நல்வழிப் படுத்தும். தொழிலில் நிலுவைப்பணி நிறைவேற்றுவதால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். வெளியூர் பயணத்தில் முக்கிய மாறுதல் செய்வீர்கள்.

**மிதுனம்:** உற்சாகமுடன் செயற்பட்டு சில தடைகளைத் தகர்ப்பீர்கள். தொழிலில் கொடுத்த வாக்குறுதியை குறித்த காலத்தில் நிறை வேற்றுவீர்கள். புதிதாகச் சொத்து வாங்க யோகம் ஏற்படும். விருந்து உபசரிப்பில் கலந்து கொள்வீர்கள். தாய்வழி உறவினரின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** உங்கள் மனதில் கூடுதல் நம்பிக்கை வளரும். தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பணிகளைச் செய்வீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் முன்னேற்றம் உண்டு. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். நீண்ட நாள்களாகத் தேடிய பொருள் கைக்கு வந்து சேரும்.

**சிங்கம்:** நீங்கள் செய்யும் செயல்களில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில் வளர்ச்சிப்பணிகளைச் செய்வதில் பொறுமை தேவைப்படும். எதிர்பார்த்த பணம் தாமதமாக வந்துசேரும். எதிரி தொல்லைகளைச் சரிசெய்ய முனைந்து நிற்பீர்கள். அலைச்சலால் உடலில் சோர்வு தென்படும்.

**கன்னி:** அடுத்தவர் விவகாரத்தில் கருத்து சொல்வது கூடாது. கடின உழைப்பால் மட்டுமே தொழில் வளர்ச்சி சீராகும். மென்மையான அணுகுமுறையால் உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். உடல்நலனைப் பேணுவதில் அக்கறை உண்டாகும்.

**நாளை**

ஆவணி - 21 வியாழக்கிழமை 06.09.2012
திதி: ஷஷ்டி 02.37 வரை
நட்சத்திரம்: பரணி பி.ப 03.37 வரை
சுபநேரம்: 07.34- 09.04 வரை
ராகு காலம்: 01.34- 03.04 வரை

**துலாம்:** நற்செயல்களால் பிறரிடம் அந்தஸ்தை உயர்த்திக் கொள்வீர்கள். பேச்சில் சாந்தமும், இனிமையும் அதிகரிக்கும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை எட்டமுடியும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும். விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** நீண்டநாளாகப் பின்பற்றிய லட்சியத்திற்கு நல்லதொரு பலன் கிடைக்கும். தயக்கம் விலகி மனதில் தைரியம் பிறக்கும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியும், வருமானமும் கிடைக்கும். எதிரிகளை முறியடிக்க புதிய கோணத்தில் திட்டமிடுவீர்கள். நண்பரால் உதவி உண்டு.

**தனுசு:** உங்கள் செயற்பாடுகளை பிறரிடம் நம்பி ஒப்படைப்பது கூடாது. தொழில், வியாபாரத்தில் போட்டி பொறாமையைச் சந்திப்பீர்கள். எதிர்பார்த்த பணம் வருவதில் தாமதம் உண்டாகும். மனம் விரும்பாத நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தவிர்ப்பீர்கள்.

**மகரம்:** அறிமுகம் இல்லாத புதிய நபர்களிடம் தேவையில்லாமல் பேசக் கூடாது. தொழில், பணியில் இலக்கு நிறைவேற தாமதம் ஏற்படும். எதிர்பார்த்த பணத்தைப் பெறுவதில் தாமதம் உண்டாகும். வாகனப்பயணத்தில் மிதவேகத்தைக் கடைபிடிப்பது நல்லது.

**கும்பம்:** எந்தச் செயலையும் சவாலாக அணுகுவீர்கள். தொழில் வளர்ச்சிக்கான புதிய வழி கிடைக்கப் பெறுவீர்கள். பணவரவு மனதிற்கு திருப்தி தரும். கடனில் ஓரளவு அடைபட வாய்ப்புண்டு. அரச வகையில் அனுகூல பலனை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**மீனம்:** சகோதரரின் எண்ணத்திற்கு மாறாகப் பேச வேண்டாம். தொழிலில் தேவையற்ற இடையூறுகளைச் சந்திப்பீர்கள். பணவரவு சுமாராக இருக்கும். வீண்செலவைத் தவிர்ப்பது நன்மை தரும். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | | 5 | | 1 | | 3 | 6 |
| 3 | | 4 | | 8 | | | | |
| | | 1 | 4 | | 9 | 2 | 8 | |
| | | | | | 7 | 1 | | |
| 7 | 1 | | | | | | 4 | 8 |
| | | 2 | 6 | | | | | |
| | 4 | 3 | 9 | | 8 | 7 | | |
| | | | | 5 | | 8 | | 3 |
| 2 | 6 | | 1 | | 3 | | 5 | 4 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 8 | 4 | 3 | 2 | 9 | 1 | 7 |
| 3 | 1 | 7 | 9 | 5 | 6 | 4 | 2 | 8 |
| 4 | 9 | 2 | 7 | 1 | 8 | 5 | 3 | 6 |
| 2 | 4 | 9 | 6 | 7 | 1 | 8 | 5 | 3 |
| 7 | 3 | 1 | 5 | 8 | 9 | 6 | 4 | 2 |
| 8 | 6 | 5 | 3 | 2 | 4 | 7 | 9 | 1 |
| 9 | 8 | 3 | 1 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 5 | 7 | 4 | 2 | 6 | 3 | 1 | 8 | 9 |
| 1 | 2 | 6 | 8 | 9 | 5 | 3 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1−9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1−9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1−9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 பேர் கைது

கொழும்பு,செப்.5

கம்பளை சுகாதார பரிசோதகரின் அனுமதியின்றி சட்டவிரோதமாக வெட்டப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் இரு மாடுகளின் இறைச்சியை விசேட அதிரடி படையினர் கைப்பற்றியுள்ளதுடன் 8 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கம்பளையில் மாடுகள் வெட்டப்படும் கொல்களம் ஒன்றை சுற்றிவளைத்த போதே விசேட அதிரடிப் படையினர் மாடுகளின் இறைச்சியை கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளைபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ச)



இசற் புள்ளி விவகாரம் தொடர்பிலான வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது இசற் புள்ளி விவகாரத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நீதிமன்றத்துக்குச் சமுகமளித்திருந்தனர்.

## விமானப்படை அதிகாரியின் சடலம் பம்பலப்பிட்டிக் கடற்பரப்பில் மீட்பு

கொழும்பு,செப்.5

பம்பலப்பிட்டி கடற்கரைப் பரப்பில் உள்ள கற்பாறைகளுக்கு இடையில் இருந்து விமானப் படை அதிகாரி ஒருவரின் சடலம் பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

ரத்மலானை விமானப்படைத் தளத்தில் கடமையாற்றி வரும் ஒருவரே இவ்வாறு உயிரிழந்திருக்கிறார் என்று விமானப் படை பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த அதிகாரி கடந்த ஞாயிற்றுக்கிழமை விமானப் படைத்தளத்தில் இருந்து வெளியேறி இருந்தார் என்றும், அதன் பின்னர் இவர் வரவில்லை விமானப்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குளிப்பதற்காகச் சென்ற இவர் கடலில் மூழ்கி உயிரிழந்தாரா அல்லது வேறு காரணங்கள் இருக்கக் கூடுமா என ஆராய்ந்து வருவதாக விமானப்படை ஊடகப் பிரிவு அதிகாரி தெரிவித்தார். (ச)

# மீள தூக்குத் தண்டனை நடைமுறைக்கு வருமா?

### சர்வஜன வாக்கெடுப்பு நடத்த உத்தேசம்

கொழும்பு,செப்.5

மரண தண்டனையை மீள நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் மரண தண்டனையை மீள நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் நோக்கில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

நீதி அமைச்சு இந்த யோசனைத் திட்டத்தை முன்வைத்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான யோசனைத் திட்டத்தை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்வைக்கவுள்ளார்.

இதேவேளை, மரணதண்டனையை நிறைவேற்றும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது.

பிரதம உத்தியோகத்தர் ஒருவரும் அவருக்கு உதவியாளர் ஒருவரும் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

குறித்த உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக சிறைச்சாலை அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பல கைதிகள் சிறைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

# தோல்வியை எண்ணி அரசு கடும் 'பீதிக் காய்ச்சலில்'

## வாட்டுகிறது என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு,செப்.5

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடையக் கூடும் என்ற 'பீதிக் காய்ச்சல்' அரசைத் தாக்கியுள்ளது. இதன் காரணமாகவே அரசு தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்டு வருவதாக ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசால் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களை ஆளும் கட்சி வேட்பாளர்கள் மதிப்பதில்லை. தேர்தல் நடைபெறும் மூன்று மாகாணங்களிலும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அரசு இரும்புக் கரங்களைக் கொண்டு, எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களை தாக்கி, தடுத்து நிறுத்தி, மேடைகளில் ஏறி எதிர்க் கட்சி என்று ஒன்றில்லை என தெரிவித்து, மக்களை ஏமாற்றி வருகிறது.

மக்கள் வழங்கிய அதிகாரத்தை, அவர்களை அடித்து அடக்குவதற்காகவே அரசு பயன்படுத்தியது.

இந்த உண்மையை மக்கள் உணர்ந்து, புத்திசாலித்தனமாக தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

ஆளும் கட்சியின் வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை.

அவர்கள் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி வாக்குகளைக் கொள்ளையிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அலுவலகங்களைத் திறந்து வைத்துள்ளனர்; வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்து வருகின்றனர்- என்றார். (ச)

**அரசு இரும்புக் கரங்களைக் கொண்டு, எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களை தாக்கி, தடுத்து நிறுத்தி, மேடைகளில் ஏறி எதிர்க்கட்சி என்று ஒன்றில்லை என தெரிவித்து, மக்களை ஏமாற்றி வருகிறது.**



### சட்டத்தை மீறிய பிரசாரம்:

## 15 வாகனங்கள் பொலிஸார் வசம்

கொழும்பு,செப்.5

எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகளின் போது, தேர்தல் சட்டங்களை மீறி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 15 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் பிரசாரங்களின் போது, தேர்தல் சட்டங்களை மீறிய 50 பேருக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைகின்றன. தேர்தல் நடவடிக்கைகளுக்கு நாளை வியாழக்கிழமை முதல் 21,000 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)



கொழும்பு-12, வாழைத்தோட்டம் குணசிங்கபுரத்தில் முப்பது வருடங்கள் பழைமைவாய்ந்த மரம் ஒன்று வேருடன் சரிந்து கார் ஒன்றின் மீது வீழ்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

### மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்:

# பிரசாரங்கள் இன்றுடன் முடிவு கட்சிகள் இறுதிநேரப் பரபரப்பில்

கொழும்பு,செப.5

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் இன்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடையவுள்ள நிலையில், தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் இறுதிச் சுற்று தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன.

தேர்தல் நடைபெறவுள்ள அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, கேகாலை, இரத்தினபுரி, அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய ஏழு மாவட்டங்களிலும் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சி வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

களத்திலுள்ள பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது இறுதிச் சுற்று பிரசார நடவடிக்கைகளை தமது கட்சித் தலைவர்கள் தலைமையில் இன்று முன்னெடுக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

**அக்கரைப்பற்றில் ஜனாதிபதி**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இறுதிப் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு அக்கரைப்பற்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும்.

முஸ்லிம் காங்கிரஸ் தமது இறுதிப் பிரசாரக்கள நடவடிக்கைகளை இன்று அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கவுள்ளது. [illegible]றையதினம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் பொதுக் கூட்டங்களை நடத்தவுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு,இன்று புதன்கிழமை கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் தேர்தல் இறுதிப் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபடவிருப்பதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இதேவேளை மக்கள் விடுதலை முன் னணியும் இறுதிப் பிரசார பொதுக் கூட்டத்தை நேற்று செவ்வாய்க்கிழமை அநுராதபுரத்தில் மாபெரும் பிரசாரக் கூட்டத்தை அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் நடத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று 3 மணிக்கு கேகாலையில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பொது பிரசாரக் கூட்டத்தை நடத்தியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தநிலையில் தேர்தலுக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாக அனைத்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் 108 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 3073 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மோட்டார் சைக்கிள்களில் பவனி வந்து

# நகைகளைச் சூறையாடும் ஆசாமிகள் சுன்னாகத்தில் பெண்கள் அச்சம்

வலி வடக்கு செப். 5 சுன்னாகம் வடக்கில் அமைந்துள்ள ஜெற்மோட்டர்ஸ் ஒழுங்கையில் தனிமையில் செல்லும் பெண்களின் தங்க நகைகளை மோட்டார் சைக்கிள்களில் வரும் கொள்ளையர் தொடர்ந்து சூறையாடிச் செல்வதினால் அந்த வீதியை பெண்கள் பயன்படுத்துவதற்கு அச்சம் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற போதிலும் பெண் கிராம அலுவலர் ஒருவர் துணிந்து சத்தமிட்டமையால் பெண் ஒருவரின் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடி கொள்ளையனின் கைவரிசையில் இருந்து தப்பியுள்ளது.

ஜெற்மோட்டர்ஸ் ஒழுங்கையில நண்பகல் நேரம் தனிமையில் வந்த பெண்ணின் தாலிக் கொடியை கிராம அலுவலர் அலுவலக வாசலில் வைத்து அறுக்க முற்பட்ட வேளையில் கிராம அலுவலர் சமயோசிதமாகச் செயற்பட்டதால் தாலிக்கொடி தப்பியது.

இந்தப் பகுதியில் தொடர்ந்து இத்தகைய சூறையாடல்கள் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் மாறி மாறிவரும் கொள்ளையர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் எவரும் பிடிபடாத நிலைமையே காணப்படுகின்றது. (3-86)


## கோழிக்குஞ்சு விநியோகம்

1½ மாதம் வளர்ச்சியடைந்த நல்லின சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள், விற்பனைக்குண்டு.

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.

T.P NO : 077 6090926

(22496)(6.7.8)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

### ஸ்ரீமான் இ.சுப்பிரமண்யம்

நல்லூர், பிரம்மஸ்ரீ இராமசாமிஐயர்-ருக்மணி அம்மாள் தம்பதிகளின் புதல்வரும், வியாகரன சிரோமணி பிரம்மஸ்ரீ கி. சீதாராம சாஸ்திரிகளின் மருமகனும், ஸ்ரீமதி லலிதா பாரதியின் அன்புக் கணவருமான, பொறியியலாளர் ஸ்ரீமான் இ.சுப்பிரமண்யன் அவர்கள் 30.08.2012 வியாழக்கிழமை(ஆவணி மாத பூர்வ சதுர்த்தசீ) அன்று லண்டனில் சிவபதப்பேறு எய்தினார்.

அன்னாரின் ஆன்மா நீர்வைக் கடம்பக் கந்தன் திருவடிகளில் சாந்தி பெற பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்(நீர்வை மணி),
சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்,
(பிரதமகுரு, நீர்வைக் கந்தனாலயம்),
பிரம்மஸ்ரீ கனகசபாபதி ஐயர்,
பாலமுருகன் சர்மா குடும்பத்தினர்,
நீர்வை வாழ் பிராம்மண சமூகத்தினர்.

(22498)(5-6-7)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA No -1 புறொயிலர் குஞ்சுகள் 06.09.2012 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

T.P : 077 6090926

(22495)(6.7.8)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பிரதம குருக்கள் பூரண சுதாகர குருக்களின் அன்பு மைத்துனர் சண்முக பாலசந்திர சர்மா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிந்தாமணி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

சிந்தாமணி விநாயகர்
ஆலய நிர்வாக
சபையினரும்
அடியவர்களும்
துச்சந்தோப்பு, கரவெட்டி.

(22497)(5-6-7)

## மரண அறிவித்தல்

### திருமதி சோதீஸ்வரி இராமநாதன்



மாரீசன் கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி சோதீஸ் வரி இராமநாதன் நேற்று (04.09.2012) செவ்வாய்க் கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்பிள்ளை இராமநாதனின் (ஓய்வுபெற்ற லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ் சென்றர்களான நரசிங்கம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான நமசிவாயம் பிள்ளை - செல்லம்மா தம் பதியரின் (இமையாணன், உடுப்பிட்டி) ஆகியோரின் மருமகளும், மகேஸ்வரி, காலஞ் சென்றவர்களான அருணாசலம், தியாக ராஜா ஆகியோரின் சகோதரியும், அருந்ததி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சந்திரவதி (வைத்திய கலாநிதி), வனஜா (ஓய்வுபெற்ற அஞ்சல் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயும், சிறீக்குமாரன் (ஓய்வு பெற்ற அதிபர்), நாகேஸ்வரன் (வைத்திய கலாநிதி, லண்டன்) ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீமதி, நந்தகி, சிவராமன், சிவ மைந்தன், பகிரதன், கரிதான் ஆகியோரின் அன்புத் பேர்த்தி யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, வெய்யிலுகந்த பிள்ளையார் கோயில் வீதி,
நாயன்மார் கட்டு, நல்லூர். (22450)(45-6-7)

தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
கொழும்பை வதிவிடமாகவுடம் கொண்ட

### திரு.அ.இ. கோபாலபிள்ளை

(கோபால் டிரேடிங் கோ உரிமையாளர்)
5, கிரகரி பிளேஸ், கொழும்பு - 06)

பரிந்த பார்வையில் பண்புள்ளங் கொண்டவர்
ஊரிலுள்ளோர் மீதிலன்பானவர்
புரிந்த நிலையில் பழகிவிடும் தன்மையானவர்
சிரித்த முகத்தினர் சிறந்த நற்கொடையினர்
பட்டென பாரினில் படுத்துறங்கி
சட்டெனக் கண்மூடி சடுதியில் சென்றார்
கிட்ட நின்றோரெல்லாம் எண்ணிக் கலங்கிட
எட்டாவழியது போயினர்! போயினர்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
இல. 52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 112 250 2718

(சு/3090) (45.6.7)


## ஆங்கில வகுப்புகள்

தொலை பேசி: 077 7444 225

NALLUR (22443) (45.6.7)

## சிறு நீரகம் தேவை

35 வயதுடைய ஒருவருக்கு B+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொடர்பு: 077 9631 287

(21409) (6.7.45)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையா கின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
யாழ்ப்பாணம்

(22488)(6.7.8)

## காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலுக்கு அருகில் 2½ பரப்புக் காணி கிணற்றுப்பங்குடன்.

தொடர்பு: சரவணபவன் அரைக்கும் ஆலை, கொய்யாத்தோட்டம் சந்தி. 077 5492672

(22492) (45.6.7)

## Soft View Computer Center

புதிய பிரிவுகள் ஆரம்பம் A/L 2012 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான அனைத்து கணினிக் கற்கை நெறிகளும் Soft view இல் ஆரம்பமாக உள்ளதால் இன்று முதல் எமது நிறுவனத்தில் அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம்.

முதல் பிரிவு ஆரம்பம் : 07.09.2012

Soft View Computer Center
E.C. தொலைபேசி : 077 9053545, 021 222 4885
(சி/3089)(6-7-8) (சிறைச்சாலை முன்பாக)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொ யிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர் | நல்லூர் பாம் சென்ரர் | கூட்டி பாம் சென்ரர் |
| #19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, | வட்டுக்கோட்டை |
| நல்லூர், யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தொ.பே : 077 8996085 |
| தொ.பே : 021 2226944 | தொ.பே : 077 6225944 | |

(22204) (5.6.7)

## பதவி வெற்றிடம்

சுன்னாகத்தில் அலுவலகத்தை கொண்டு இயங்கும் கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர் பார்க்கப்படுகின்றது.

கனிய அளவையாளர்
தொழிநுட்ப உத்தியோகத்தர்
NCT Civil
Quantity Surveyor
NCT Draughtsman with Auto CAD

தகுதியானவர்கள் 3 நாள்களுக்குள் விண்ணப்பங்களை ஈமெயில் மூலமாக அனுப்பி வைக்கவும். அல்லது தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு நேரிலும் வர முடியும். சாருகாயா நிர்மாணம்
செட்டியார் வளவு, சுன்னாகம்.
T.P : 077 7120945, Email : sarukaya_con@yahoo.com

(22439)(6-7-8)


## கண்ணீர் அஞ்சலி



உடுவில் கற்பொக்குனை ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமிகள் ஆலயத்தின் முன்னாள் தர்மகர்த்தா

### அமரர் சண்முகராஜகுருக்கள் பாலச்சந்திரசர்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டுகின்றோம்.

பரிபாலனசபை
கற்பொக்குனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்,
உடுவில், கந்தரோடை.

(22437)(6-8-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# பொலிஸ்– மக்கள் நட்புறவுத் தீர்மானங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்

## இல்லையேல் எதற்குக் கலந்துரையாடல்கள்?

அச்சுவேலி, செப்.5

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு பொலிஸ் - பொது மக்கள் நட்புறவுக் குழுவால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது இல்லை என்று பொதுமக்கள் சார்பில் கலந்து கொள்ளும் பிரமுகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொலிஸ்- பொதுமக்கள் நட்புறவுக் குழு, காலத்துக்கு காலம்கூடி எடுக்கப்படும் தீர்மானங்களை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டப்படுவதாக பொதுமக்கள் பிரதிநிதிகள் சார்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

''ஆலயங்களில் நேரக்கட்டுப்பாடு இன்றி ஒலி பெருக்கி பயன்படுத்துவதால் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஏற்படும் பாதிப்பு மற்றும் அமைதிக்கு பங்கம் ஏற்படுவதால் ஒலி பெருக்கி பாவனைக்கு நேரக் கட்டுப்பாடு மற்றும் பாவனை ஒலி அளவு என்பனவற்றை நிர்ணயித்து அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பது ஆலய உரிமையாளர்கள் மற்றும் ஒலிபெருக்கி பாவனையாளர்களின் விண்ணப்பத்தை கிராம அலுவலர்கள் ஊடாகப் பெற்று உரியமுறையில் நடைமுறைப்படுத்துவது'' எடுக்கப்பட்டபோதும் அவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அச்சுவேலி வடக்கு மற்றும் புத்தூர் பொதுச் சந்தைக்கு அருகில்அமைந்துள்ள மது விற்பனை நிலையங்களில் சில்லறை மதுவிற்பனைக்கு அனுமதி இல்லாத போதிலும் சில்லறையாக மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மாலை வேளைகளில் மதுப்பிரியர்கள் கூடி நின்று மேற்கொள்ளும் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. மதுவிற்பனை அனுமதிப்பத்திரம் ஒழுங்கு விதிகளுக்கு அமைய செயற்பட வைக்கவேண்டும் என்ற தீர்மானம் பல மாதங்களுக்கு முன்னர் பொலிஸ்- பொது மக்கள் நல்லுறவுக் குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், அவற்றுக்கு மாறான செயற்பாடுகள் இன்று வரையில் தடுத்து நிறுத்தப்படவில்லை.

தற்பொழுது வயது குறைந்தவர்கள் மாணவப்பருவத்தினரும் சில்லறையாக மது பானங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்துவது தொடர்பாகவும் புகார்கள் செய்யப்படுகின்றன.

''பொலிஸ்- பொதுமக்கள் நல்லுறவுக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்மானங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் அது தொடர்பாக அடுத்த கூட்டத்தில் கலந்துரையாடப்படவேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் கூட்டத்தில் கலந்து கொள்வதில் பயன் எதுவும் இல்லை'' என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (3-11)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப்.5

வட்டுக்கோட்டை மேற்கு, பிங்கள மோதக மாமரப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. இம்மாதம் பத்தொன்பதாம் திகதி சதுர்த்தி திருவிழாவும் அடுத்த நாள் சங்காபிஷேகமும் நடைபெறும்.

## ஆண்டு நிறைவும் வழிபாடும்

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் கரவெட்டி இடைக்குறிஞ்சி சிற்றாலயத்தின் 41 வது ஆண்டு நினைவு விழாவும் நன்றி செலுத்தலும்.

பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு எஸ்.டவுள்யு தேவகுமார் தலைமையில் நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சிறப்பு அருள் உரையை சி.என்.ரவிசங்கர் நைல் வழங்கவுள்ளார்.(3-253)

## வள்ளம் ஓட்டும் போட்டி நாளை

தம்பாட்டி கிராமிய கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கிடையே வருடா வருடம் நடைபெற்று வரும் கடல் சார் போட்டிகளில் நீந்துதல், வள்ளம் வலித்தல், பாய்விரித்து வள்ளம் ஓட்டுதல் ஆகிய போட்டிகள் இந்த வருடமும் நடைபெற இருக்கின்றன.

அந்த வகையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தம்பாட்டி கடற்பரப்பில் பாய்விரித்து வள்ளம் ஓட்டும் போட்டி நடைபெற இருக்கிறது என தம்பாட்டி கிராமிய கடற்தொழிலாளர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (3)

# ராஜபக்ஷவுக்கு தடை விதிக்க வேண்டும்; இல்லையேல் அறவழியில் போராடுவோம்

## திருமாவளவன் அறிவிப்பு

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியா வருவதற்குத் தடை விதிக்காவிட்டால் போராட்டம் நடத்தப்படும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மத்தியப் பிரதேச மாநிலம் சாஞ்சியில் நடைபெறவுள்ள புத்தமத கல்வி மைய அடிக்கல் நடும் விழாவில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ பங்கேற்கிறார். பௌத்தர்களின் வாக்குகளைக் குறிவைத்து இந்த விழாவுக்கு ராஜபக்ஷவை பா.ஜ.க தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் அழைத்துள்ளார். தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலையை அரங்கேற்றிய ராஜபக்ஷவை காங்கிரஸும், பா.ஜ.கவும் வரிந்து கட்டிக் கொண்டு வரவேற்பதும் ஊக்கப்படுத்துவதும் வாடிக்கையாக உள்ளது. புத்த மத கல்வி மைய விழாவுக்கு ராஜபக்ஷவை அழைத்து தமிழர்களின் உணர்வுகளை சுஷ்மா காயப்படுத்தியுள்ளார். அதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. ராஜபக்ஷவின் வருகைக்கு தடை விதிக்காவிட்டால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறப்போராட்டத்தில் ஈடுபடும். இது தொடர்பாக நாடாளுமன்றத்திலும் கண்டனக் குரல் எழுப்புவோம் என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

## ஒழுவில் வீதியை புனரமைக்குக

ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் வித்தியாலயத்தையும், ஊர்காவற்றுறை அன்ரனிஸ் கல்லூரியையும் இணைக்கும் ஒழுவில் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அநேகமாக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் இந்த வீதியானது மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் இந்த வீதியால் பயணம் செய்பவர்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

இந்த வீதியின் அருகே இரண்டு குளங்களும் காணப்படுவதால் சில வேளைகளில் உயிர் ஆபத்தான நிலைமை கூட ஏற்படலாம் என இந்தப் பிரதேச மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்தப் பிரதேச மக்களின் நலன்கருதி சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3)


## நீங்காத ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 1975 . 03 . 24



உதிர்வு 2011 . 08 . 18

அமரர் சின்னராசா சிவராசா

கண்கண்ட கணவனாய் காலமெல்லாம் காத்திருந்து
காதலில் நெஞ்சமும் கலந்தேத்தி நாம் ஒன்றாய்
கண்ட பெரும் இன்ப மதாய் கனிமொழிகள் பல பேசி
கண்மணிகள் பிள்ளைகளை இன்பமுடன் வளர்த்திட்டோமே!

எங்கள் அப்பா எங்கயம்மா ? என்றே தினம் கேட்டு
நட்புடனே தந்தையிடம் செல்லம் கொஞ்சி விளையாடி
ஏக்கமுடன் பார்த்திருந்து தந்தை முகம் கண்டவுடனே
கட்டி முத்தம் இட்ட நாள்கள் எங்கயப்பா போச்சுது

அப்பா ! நீங்கள் எங்களுக்காய் செய்த கடன் எத்தனையோ !
எண்ணிப் பார்க்கும் போது எங்கள் உள்ளம் வேகிப் போகுதே!
சொக்கத் தங்கம் போல அம்மா உருகிப்போனார் பாரப்பா !
எம்மை தன்னந்தனியாக விட்ட துன்பம் என்று தீரும் சொல்லப்பா

ஆண்டு ஒன்று சென்றபோதும் இழந்த துயர் போகுமா ?
உம் உயிர் குடித்த காலனவன் துடிதுடிப்பான் பாரப்பா !
உங்கள் எண்ணம் ஈடேறும் நாளை எண்ணிப் பார்க்கின்றோம்
நீங்கா உங்கள் நினைவுடனே கதி கலங்கி நிற்கின்றோம்

சேர் லேன், மல்லாகம். (ஊ2449)(6.7.8) மனைவி, பிள்ளைகள்.

## ஈராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 16.03.1942

விண்ணில் 30.08.2010

அமரர் பொன்னையா செல்லையா

திதி: அபரபக்க பஞ்சமி

எம் குல விளக்கே!
ஆண்டு இரண்டு ஆனதப்பா
ஆறவில்லை எம் சோகம்
ஒன்றல்ல ஓராயிரம்
ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு
வானுலகம் சென்றாலும்
அரனடியில் இருந்து
ஆசிகள் கூறுங்கள் அப்பா எங்களுக்கு
எம் குடும்ப விளக்கின் ஆத்ம சாந்திக்காய்
விழிநீர் சிந்துகின்றோம் இறைவனிடம்

(அ/3085) (45.6.7) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## கு.சர்வானந்தன்

நீண்ட காலமாக மின்சார வசதி இன்றி இருளில் இருந்த கெற்பேலிக் கிராமத்திற்கு மின்சாரத்தினைப் பெற்றுத் தந்து வாழ்வில் ஒளியை ஏற்படுத்திய, எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கும் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் கு.சர்வானந்தன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது சேவை தொடர எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கெற்பேலி, மிருசுவில் வீரபத்திரர் சனசமூகநிலையம்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 20.10.1920

விண்ணில் 06.08.2012



அமரர்

## மனோன்மணி இராசையா

கடந்த 06.08.2012 (திங்கட்கிழமை) சிவபதமடைந்த எமது அன்பு அன்னை அமரர் திருமதி மனோன்மணி இராசையா அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று(05.09.2012) புதன்கிழமை மு.ப. 11.00 மணிஅளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தம் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னையின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

வீரபத்திரர் வீதி,
நுணாவில் மேற்கு,சாவகச்சேரி [21517][5-6-7]

மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் இரத்தினசபாபதியின் மாமியும், எமது தாபனத்தின் முகாமையாளரான பாஸ்கரன் அவர்களின் அன்புத்தாயார்

திருமதி கனகமணி நவரெத்தினம்

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் Dr. க.மு. பத்மநாதன் PMJF குடும்பத்தினர்
"வெஸ்கோ" உரிமையாளர் மற்றும் ஊழியர்களும். (F/3091) (45.6.7)


# தரமான கால்நடைகள் வழங்கப்படுவதில்லை குற்றம் சாட்டுகின்றனர் பயனாளிகள்

அச்சுவேலி, செப்.5

யாழ்.மாவட்டத்தில் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான செயற்றிட்டத்தின் கீழ் நிறுவனங்களினால் வழங்கப்படும் ஆடு, கால்நடைகள் உரிய பெறுமதியிலும் உரிய தரத்திலும் வழங்கப்படுவதில்லை. அதே நேரம் கால்நடை வைத்திய அதிகாரிகள் மற்றும் கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் கண்காணிப்புக்கு உட்படாத வகையில் அவை வழங்கப்படுவதாகவும் பயனாளிகள் மற்றும் கால்நடைவளர்ப்போர் அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

வன்னியில் பாதிப்புக்கு உள்ளாகிய குடும்பங்கள், மற்றும் குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் கால்நடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இந்தத் திட்டத்தின் கீழ் கால்நடைகளை வழங்கும் போது கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பரிந்துரை மற்றும் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரிகள் போன்றவர்களின் நேரடி கண்காணிப்பில் வழங்கப்பட்டு வந்தன.

அண்மைக் காலத்தில் இந்த நடைமுறைகளை புறம் தள்ளிவிட்டு உள்ளூரில் உள்ள தனிப்பட்ட தரகர்களின் ஒத்துழைப்புடன் கால்நடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

லட்சக் கணக்கான முதலீட்டில் மேற்கொள்ளப்படும் இந்த உதவித் திட்டத்தில் உரிய பயனாளிகளுக்கு சரியான வகையில் தரமான உதவிகள் கிடைப்பதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கால் நடை வளர்ப்போர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் கண்காணிப்பில் உதவிகள் வழங்கும் போது பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரிகளினால் கால்நடைகளின் உடற்கூறு வைத்திய அறிக்கை பெறப்பட்டது. அத்துடன் சமகால பெறுமானமும் கால்நடையின் விசால மதிப்பீடும் உரிய முறையில் நிர்ணயம் செய்யப்பட்டது எனக் கூறினார்.

(3-11)

# நேரக் கணிப்பாளரை நியமிக்குக

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு 777,780,778 வழி ஊடாக இலங்கை போக்குவரத்து சபையால் போக்குவரத்துச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சேவையில் யாழ்ப்பாணத்திலிருந்து மெலிஞ்சிமுனை, கண்ணகை அம்மன் துறை மற்றும் அரச ஊழியர்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சில வேளைகளில் இந்தச் சேவைகள் இடம் பெறாமல் போய்விடுகின்றன. இதனால் மக்களும் மணிக்கணக் காக காத்திருக்கும் நிலைமை ஏற்படுகின்றது.

எனவே மக்களின் போக்குவரத்து தேவை கருதி போக்குவரத்து சபையினர் நேரக் கணிப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3)


# தேவை

கொழும்பில்

* ஆத்மிக ஸ்தாபனத்தில் கடையில் புத்தகங்கள் விற்பனை செய்ய ஆண்கள் தேவை
* சிறுவர்களை மேற்பார்வை செய்து வழிநடத்தக்கூடிய அனுபவம் வாய்ந்த ஆண்கள் தேவை.
* பசுக்களை அன்போடு பராமரிக்கவும் பால் எடுக்கவும் அனுபவமுள்ள ஆண்கள் தேவை

தொடர்புகளுக்கு : 077 2288186

(22508)(6-7-8)



# தேவை

புங்குடுதீவில் தங்கியிருந்து ஆன்மீக பாடங்கள் படிப்பிக்கவும் வழிபாடுகள் மேற்கொள்ளவும் ஒரு நல்ல குடும்பத்தினர் தேவை

தொடர்பு : 077 2288186

(22509)(6-7-8)



# டிப்பர் றைவர் தேவை

யாழ்ப்பாணத்தில் தங்குமிட வசதி உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 072 9112612

(22499)(6-7-8)



# வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரியாலையில் வீடு வாடகைக்கு. அரச தனியார் நிறுவனங்களுக்கும் உகந்தது.

தொடர்பு : 075 5440503

(சி/2694)(6-7-8)



# Wanted Car Permit

Please Contact :
077 722 2715

(22500)(6-7-8)



THE HALO TRUST

# Vacancy - Fleet Assistant

The Halo Trust is a British Mineclearance NGO that has been working in srilanka since 2002 clearing mines and other explosive remnants of war.

We are currently recruiting for a fleet assistant to help with the upkeep of our Fleet Management and Database. The Position would be based in the Halo office in Kilinochchi.

Requirements:
* High standard of written and spoken English
* Proficiency in Microsoft Word, Excel, Access and Outlook
* Stores / Ware house experience preferable

**Salary is dependent on ability and experience.**

Interested candidates should submit their bio - data contact details and a brief summary of their experience to

**The Halo Trust**
**450, Thirunagar west, Kilinochi, Srilanka.**

**Email : recruitment@halosrilanka.org**

All applications must be submitted no later than Monday 10 th September 2012

Please note that only short listed candidates will be contacted and invited for the interview and practical test this post is on a renewable contracts basis, Subject to donor funding. Male candidates are encouraged to apply.

(19317)(6.7.8)



# Sep 8 ஆம் திகதி யாழ் மாநகரில்

BCAS CAMPUS

## BCAS வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

## Seminar & Counseling 2012

* நவீன சர்வதேச தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள்
* சர்வதேச உயர்கல்வித் தகைமைகளைப் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகள்
* உயர்கல்விக்கான புலமைபரிசில் வாய்ப்புகள்
* மிக குறைந்த செலவில் குறுங்கால தொழிற்பயிற்சி மூலமான உயர்தொழில் வாய்ப்புகள்
* குறைந்த தகைமையுடன் பொறியியல் மற்றும் தொழிநுட்ப பட்டப்படிப்புக்களுக்கான இலகு வழிமுறைகள்
* **UK. Australia, Canada, USA** போன்ற நாடுகளுக்கான **Student Visa**க்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளும் புதிய ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளும்.

பெறுமதிமிக்க ஊக்குவிப்பு பரிசுகளுடன்.........



திகதி
2012-09-08 (சனிக்கிழமை)

நேரம்
காலை 10.00a.m - 02.00p.m

இடம்
**Gnanams Hotel**
**301, Clock Tower Rd**
(யாழ் போதனா வைத்தியசாலை பின்புறம்)

இது போன்ற பெறுமதிமிக்க ஆலோசனைகளோடு தனிப்பட்ட முறையில் மாணவர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்களால் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு
0777 444 225
0777 286 877

அனுமதி முற்றிலும் இலவசம்


British College of Applied Studies
Colombo • Dehiwela • Kandy • Batticaloa • Doha - Qatar

மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இவ்வறிவுரை பட்டறையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

www.bcas.lk

(சி/2695)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Angel International School, Manipay & Jaffna.

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய், யாழ்ப்பாணம்

"A school of excellence"

# கல்விக் கண்காட்சி
# Educational Exhibition

at
**Mather's Lane, Manipay**

6th, 7th & 8th
September 2012
From 9.00 am to 7.00 pm

*All are welcome*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 22 வருடங்களாக எமது பகுதியில் கிராம உத்தியோகத்தராக சேவையாற்றி அயற்பகுதிக்கு மாற்றமாகிச் செல்லும் **திரு. க. வாமதேவன்** அவர்களின் மகத்தான சேவையைப் பாராட்டி சமூக சேவை திலகம் எனும் பட்டம் சூட்டி கௌரவிக்கின்றோம்



அதே வேளை எமது பகுதியில் கிராமசேவையாளராக கடமையேற்கும் **திரு .செ. சிவசுப்பிரமணியம்** அவர்களையும் வருக! வருக! என வரவேற்கின்றோம்.

நாளைய தினம் மு.ப. 10.00 மணியளவில் மட்டுவில் மத்தி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் 111 ஆவது தொடர் பரணிப்பூசையிலும் தொடர்ந்து நடைபெற இருக்கும் வாழ்த்து வரவேற்பு, அன்னதான நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்
மட்டுவில் மத்தி,
பரணிப்பூசைத்திருநாள்

இங்ஙனம்
திரு. R. இரவீந்திரநாதன்
தொண்டர்கள், மட்டுவில் மக்கள்

மேற்படி விழாச்சிறப்புறவும் கிராம உத்தியோகத்தர்கள் அவர்கள் தம் குடும்பத்தினரும் தம் செய்பணி சிறக்கவும் நலமுடன் வாழவும் உளமார அருள் மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமானை வேண்டிநிற்கும்

**தவம் போட்டோ 167, நாவலர் வீதி**

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர்
## சின்னராசா சிவராசா



தாயவள் தரணியில் தன் மகனாய் உனை ஈன்றாள்
தந்தையோ தோள் மீது உனைச்சுமந்து மனம் குளிர்ந்தார்
எண்ணற்ற கனவுகள் நனவாகி நடமாட
உன் இணை நண்பர்கள் இன்பத்தில் ஆழ்ந்தனரே!

வெண்மையின் சிரிப்பினால் தோழமை நீ கொண்டு
சுன்னாகப் பதியினிலே சுதந்திரமாய் நாம் செல்ல
கண்ணாரக் கண்களெல்லாம் புன்சிரிப்பு பூத்து விட
நெஞ்சார வாழ்த்தாதார் யாருண்டோ பாரினிலே

அன்பாக அறிவுரைகள் பல வழியில் நீ உரைக்க
உன்னுயிராய் நண்பர்கள் களியதனில் குதுகலிக்க
வந்தானோ? காலனவன் மல்லாகம் மதவடியில்
இடிபோல வந்ததையா ராசா உந்தன் பிரிவுச் செய்தி

பிரியாத நண்பர் கூட்டம் புரியாத செய்தி கேட்டு
படையாகப் பறந்து வந்தோம் பலனேதும் இல்லையன்றோ!
பல வார்த்தை பேசும் வாயால் ஒரு வார்த்தை கேட்க எண்ணி
தனியாகக் காத்திருந்தோம் மூச்சாகிப் போனாயோ

நிரையாக உன் நாமம் நிறைவாக நாம் கூறி
நிதம்தோறும் உறவாடி கதைபேசி மகிழ்ந்தோம்
பிரிவாகிப் போனாலும் உறவாடும் எம் நெஞ்சில்
மறையாத விடிவெள்ளி ''ராசா அண்ணன்'' நீதானே!'

மறவோம் மறவோம் என்றும் உன்னை
ஆண்டுகள் எத்தனை பறக்கினும்
பிரியோம் உந்தன் நட்பை - நம்
வாழ்க்கையின் காலங்கள் கடப்பினும்.

உம் நினைவுகளுடன் வாழும்

சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கப் பட்டறை ஊடான
தலைமைத்துவ மற்றும் ஆளுமை விருத்திக்கான பயிற்சிநெறி
5 நாள்கள்
G.C.E. A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கானது
between 22/09 - 26/09
time: 8.30 - 4.30
பதிவு கட்டணம் 500/=
15/09/2012 திகதிக்கு முன்னர் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்
contact: 021 3216222 0773112692
'அருளகம்' ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலாலி ஆசிரியர் கலாசாலை முன்பாக)

## குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

கிண்ணியா பிரதேசத்தில் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக பல கிராமங்களில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் ஆயிலியடி கிராமம், மற்றும் நடு ஊற்றுக் கிராமம் போன்ற பகுதிகளில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் இக்கிராம மக்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

(ச)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, Jaffna. 0212228250
80% OFF மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2012
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள்
Diploma in Microsoft Office 3 Month 2000/=
Diploma in Desktop Publishing 3 Month 2000/=
Diploma in Graphic Designing 3 Month 2000/=
Diploma in Hardware 3 Month 2000/=
Diploma in Web page Designing 3 Month 2000/=
Certificate in Tally 3 Month 1000/=
Auto CAD 3000/=
Latest Version Software களினூடாக தமிழ் மொழி விளக்கங்களுடன் நீண்டகால அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
வரையறையற்ற செய்முறை பயிற்சி.
Advance Courses
Diploma in Computer Science
Diploma in Video Editing
Diploma in Multimedia
Diploma in Computerized Accounting
3000/=
20ம் திகதிக்கு முன் பதிவுசெய்துகொள்ளவும்.
வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I : 07/09/2012
Batch II : 08/09/2012
Batch III: 09/09/2012
Batch VI: 12/09/2012
10AM/03PM

## பருத்தித்துறை பிரதேச சபை,
## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவ காலத்தின் போது துவிச்சக்கர வண்டி, வாகனங்கள் பாதுகாப்பு நிலையம் அமைத்து நடத்துவதற்கு உரிமம் வழங்குவதற்கான கேள்வி – 2012.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் 2012ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவத்தின் போது கீழே விபரிக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி, வாகனங்கள் பாதுகாப்பு நிலையங்களை 21.09.2012ஆம் திகதி தொடக்கம் 30.09.2012ஆம் திகதி வரை அமைத்து நடாத்துவதற்கான உரிமையை வழங்குவதற்கான திறந்த கேள்வி, பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளரால் கோரப்படுகின்றது.

இதற்குரிய கேள்விப்படிவத்தினை, அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு பிரதேச சபைக் காரியாலாயத்தில் காரியாலய நேரத்தில் 17.09.2012ஆம் திகதி மு.ப 10 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 17.09.2012ஆம் திகதி பி.ப ஒரு மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் 17.09.2012ஆம் திகதி பி.ப 2 மணிக்கு என்னால் திறக்கப்படும். கேள்விக்காரர் சமூகமளிக்கலாம். கேள்வியை அரக்கு முத்திரை இட்டு இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு சபைக் கேள்விப் பெட்டியிலோ, அல்லது பதிவு அஞ்சல் மூலமோ, 17.09.2012ஆம் திகதி பி.ப ஒரு மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சேர்த்தல் வேண்டும்.

| நிலைய இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | நிலையம் அமைந்துள்ள இடம் | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் (வற், என்பிரி வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | 75500.00 | ஆலய சுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு வடக்குப்புறம் | 200.00 | 1000.00 |
| 02 | 18500.00 | முறாவில் வீதியில் குருக்கட்டு பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப்புறம் | 200.00 | 1000.00 |
| 03 | 15500.00 | ஆலய சுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு தெற்குப்புறம் | 200.00 | 1000.00 |

இது விடயமான விவரங்களையும், நிபந்தனைகளையும் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி சம்பந்தமாக கேள்விச் சபையின் முடிவே முற்றானதும் முழுமையானதும் ஆகும்

**பூ.சஞ்சீவன்,**
தவிசாளர்.
பருத்தித்துறை பிரதேச சபை.
புலோலி.
05.09.2012.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள் வேத வைத்தியசாலை)
Banker - 2 nd Jaffna Branch, BOC A/C No, 1095764
இல. 6 கல்டி அம்மன் வீதி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(பழையது) களத்தாவ அனுராதபுரம்.
சேவை நேரமும் விடுமுறை அறிவித்தலும்
அனுராதபுரம் களத்தாவ, ஈரற்பெரியகுளம், நேரியகுளம், தருமபுரம், வவுனிக்குளம், காரைநகர், முதலிய இடங்களில் இயங்கி வந்ததும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது பரம்பரைகளுக்குரிய ஓலைச் சுவடிகளிலுள்ள வைத்திய நுணுக்கங்கள், எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகளின் (நல்லூர் அரசர்கள் செகராசசேகரன் பரராஜசேகரன் உட்பட) கைகண்ட வைத்திய முறைகள், யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள் வேத வைத்தியக்கல்லூரியின் ஆசான்கள் தந்த மருத்தவமுறைகள் என்பவை ஒருங்கிணைக்கப்பட்டதால் உருவான அதிசிறந்த சித்த ஆயுள்வேத நுணுக்கங்கள் மூலமாகவும், எம்மால் தயாரிக்கப்பட்ட மருந்துகள்,இலங்கை மற்றும் இந்தியாவில் நன்கு செயற்படக் கூடியதெனப் பெயர் பெற்றவை களில் தெரிந்தெடுக்கப்பட்டு தருவிக்கப்பட்ட பக்க விளைவற்ற இயற்கை மருந்துகள் மூலமாகவும் மாற்ற முடியாது எனக் கருதி கைவிடப்பட்ட வியாதிகளை (வாதம், மூட்டு, குடற்புண், தோல்நோய், சிறுநீரககல், முடிஉதிரல்) நீக்குவதில் பெயர் பெற்றதும் குழந்தையின்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் நோயாளர் வருமளவுக்கு பிரசித்திபெற்றதுமான எமது வைத்தியசாலை கீழுள்ள சேவை நேரப்படி இயங்குவதால் தவறாது வெளிமாவட்ட மக்களும் யாழ். மாவட்ட மக்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு. வரும்படி தயவுடன் வேண்டுகின்றோம்.
சேவை நேரம்:
★ காலை 7.00 மணி முதல் 11.00 மணி வரை
★ மாலை 3.00 மணி முதல் 7.00 மணி வரை
★ வெள்ளிக்கிழமை விடுமுறைதினம்
(22514)(6.7.8)
தற்காலிக விடுமறை
06.09.2012 வியாழக்கிழமை மட்டும் வைத்திய சாலை மூடப்பட்டிருக்கும் சனிக்கிழமை முதல் வழமை போல இயங்கும்.
Dr. ஜெ. ஜெயலன், Dr. ச. ஜெயலன், Dr. k.o இராஜரட்ணம்

## மரண அறிவித்தல்

### திருமதி பானுவதி சுப்பிரமணியம் (தேவி)

(வேதரடைப்பு, காரைநகர்)



காரைநகர் அல்லின்வீதி வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் தற்போது தெகிவளையில் வசித்தவருமான திருமதி பானுவதி சுப்பிரமணியம் நேற்றுமுன் தினம் (03.09.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சுந்தரம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு - சிவகாமிப்பிள்ளை (மொந்திபுலம்) தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தப்பு சுப்பிரமணி யத்தின் அன்பு மனைவியும், சதாசிவத்தின் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப அதிகாரி, காகித ஆலை வாழைச்சேனை), அன்புத் தாயும், தயாநிதியின் மாமியும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் விசாலாட்சி (வட்டக்கச்சி), தியாகராஜா (உரிமையாளர் - ஓட்டோ அச்சகம், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr.ராஜீவ் (கொழும்பு தேசிய வைத்தியசாலை), ரகுநாதன் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வடமா காணம்), ராகுலன் (பொறியியலாளர் சிங்கப்பூர்), துஷ்யந்தி, அஜந்தா (பிரதேச செயலகம் நல்லூர்), தயோமி ஆகியோரின் பேர்த்தியும், அபிநயன், ஆர்த்திகா, கௌதம், பிரிதீக் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2012) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கல்கிசை மகிந்தமலர்ச் சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/10 பின்வந்த வீதி,
தெகிவளை.

(சி/3093)(3.14)

தகவல்:
S. சதாசிவம் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் நாளை 484 பேர் மீளக்குடியமர்வு

*வவுனியா செப்.5*

*முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட அம்பலவன் பொக்கணை கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த 133 குடும்பங்கள் நாளை வியாழக்கிழமை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட உள்ளன.*

இறுதிப் போரின் போது இடம் பெயர்ந்து மனிக்பாம் ஆனந்தகுமாரசுவாமி, கதிர்காமர் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு குடியமர்த்தப்படவுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் இருந்து உடமைகளுடன் அழைத்து செல்லப்படும் மக்கள் இரணைப்பாலை றோ.க.த.க. பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு, மீளக்குடியமர்வுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து சொந்த இடத்துக்க அனுமதிக்கப்படுவர்.

மீளக் குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா, மற்றும் உலர் உணவு பொருள்களும் அன்றைய தினம் வழங்கப்படும் என முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை மந்துவில், ஆனந்தபுரம் உட்பட இது வரை மீளக்குடியமர்த்தப் படாத பகுதிகளில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அந்தப் பணிகள் முடிவடைந்ததும் அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (10-400)

## எரிவது வீடல்ல வாழ்வும்



*மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மறிச்சுக்கட்டி மறைக்கார் நகரில் நேற்று முன்தினம் இரவு எரியூட்டப்பட்ட குடிசைகள் அழிந்து நாசமாகியுள்ளன.* (2)

# மாணவர், ஆசிரியர்கள் பலவந்தமாக முள்ளிக்குளத்திலிருந்து வெளியேற்றம்

### கடற்படையினர் அடாவடி

மன்னார்,செப்.5

மன்னார் முள்ளிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள முள்ளிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து மாணவர்களும், ஆசிரியர்களும் கடற்படையினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை கடந்த 5 வருடங்களுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே கடற்படையினர் மாணவர்களையும், ஆசிரியர்களையும் வெளியேற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. முள்ளிக்குளம் மக்களின் வீடுகள் அமைந்த பகுதியைக் கடற்படையினர் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தியுள்ளனர்.

ஆனால் மக்களின் குடியிருப்புக்களில் கடற்படையினர் தமது குடும்பங்களைக் குடியமர்த்தியுள்ளமை பின்னர் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு சுமார் 45 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையிலேயே இவ் வெளியேற்றம் நடத்துள்ளது.

பாடசாலை ஆரம்பமான போது மதச் சடங்குகள் இடம்பெற்றன. இவை முடிவடைந்து பாடங்கள் ஆரம்பமான போது பாடசாலையினுள் வந்த கடற்படையதிகாரி ஒருவர் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு பணித்தார்.

இதனால் அச்சமடைந்த ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலையிலிருந்து உடனடியாக அகன்று சென்றனர். இது தொடர்பாக கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (க-12)

## சட்டத்தரணிகளின் பணிப்புறக் கணிப்பு முடிவுக்குவந்தது

மன்னார், செப்.5

மன்னார் சட்டத்தரணிகள் கடந்த ஜூலை 18 ஆம் திகதி முதல் மேற்கொண்டு வந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

மன்னார் நீதிமன்றத்தின் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பலர் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரின் புலன் விசாரணைகளும் தொடர்ந்து இடம் பெற்றன.

இவை தமக்குத் திருப்தியளிப்பதாகத் தெரிவித்த சட்டத்தரணிகள் தமது பணிப் புறக்கணிப்பைக் கைவிடுவதாகத் தெரிவித்தனர்.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் நீதிமன்றில் சட்டத்தரணிகள் அனைவரும் சமுகமளித்திருந்தனர். இதனால் மன்னார் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன.

(க-12)

# சரியான தரப்புக்கு வாக்களிக்கவும்

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.4

தவறான கிழக்கு மாகாணத் தேர்தலில் சரியான தரப்புக்கு வாக்களிப்பதன் மூலம் தவறானவர்களின் கைகளில் ஆட்சி அதிகாரம் செல்வதைத் தடுக்க முடியும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஒன்றியம் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

உரிய காலத்துக்கு முன்னரே கலைக்கப்பட்ட கிழக்கு மாகாணசபை தேர்தல் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கானது கடந்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டு அபிவிருத்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பிரதேசங்களாகும். ஆனால் அரசு தமிழர்களின் கோரிக்கையான இணைந்த வடக்கு, கிழக்கு என்பதனை மறுதலித்து வடக்கையும் கிழக்கையும் பிரித்ததுடன் கிழக்கு மாகாணத்துக்கென தனியான தேர்தலையும் நடத்தியது. அப்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் யாரும் போட்டியிடாத சந்தர்ப்பத்தில் வெற்றி பெற்ற சிலர் கிழக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியத்தை கைவிட்டதாக கூறினர். ஆனாலும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தமது தேசியத்துக்கான அவாவை வலியுறுத்தினர். அதிலும் கிழக்குத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத் தின் மீதான பற்றை உறுதியாகச் செயற் படுத்தினர்.

அரசு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஆங்காங்கே புத்தர் சிலைகளை துளிர் விடச்செய்து இலங்கைத் தீவானது தனிச் சிங்கள நாடென பறைசாற்ற முயல்கின்றது.

தமிழ்த் தேசியத்தையும் வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தையுமே விரும்புகின்றோம் என வெளிக்காட்டும் வண்ணம் தேர்தல் களத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியம், தமிழர் சுயநிர்ணயம், வடக்கு கிழக்கு இணைப்பு என்பவற்றை வலியுறுத்தும் தரப்புக்கே மக்கள் ஆதரவை வழங்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# யாழ். இளைஞர் அணி கிழக்கில் அனல் பறக்கிறது பிரசாரம்

மட்டக்களப்பு,செப்.5

யாழ். குடாநாட்டிலிருந்து கிழக்குக்கு படையெடுத்துச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணி(இலங்கை தமிழ ரசுக் கட்சி),அங்கு நிலைகொண்டு சூறாவளிப் பிர சாரத்தில் ஈடுபட்டு வரு கின்றது.

கடந்த முதலாம் திகதி முதல் கிழக்குத் தேர்தல் களத்தில் நிலைகொண்டு தீவிர பிரசாரத்தை முன்னெடுத்துவரும் யாழ்.இளைஞர்கள் அணி, நேற்றுச் செவ்வாய்க்கிழமை திருக்கோவில் பிரதேசத்தில் புதிய பல வியூகங்களுடன் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்தது.

சுமார் 50 பேரடங்கிய இந்த இளைஞர்கள் குழு, கிழக்கு மாகாணத்தில் பல பகுதிகளுக்கும் சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்து வருவதுடன், துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றது.

''கிழக்கு வாழ் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களின் ஒரே தேர்வாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே உள்ளது என்பதை எம்மால் அறிய முடிகின்றது. நேரடியாகவே நாம் களத்துக்கு விரைந்து மக்களிடம் கலந்துரையாடியதன் மூலம் இந்த விடயத்தை உறுதியாக அறிய முடிகின்றது.

''அதேவேளை, தற்போதைய தேர்தல் களநிலைவரங்களுக்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கிழக்கில் கோலோச்சுகின்றது.

''இன்று புதன்கிழமை வரை நாம் கிழக்கில் நிலைகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்தும் நோக்கில் புதிய பல வியூகங்களுடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வுள்ளோம்''- என்று யாழ். மாவட்ட இளைஞர் அணி யின் உறுப்பினரொருவர் தெரிவித்தார் . (ச-சி)

# விண்ணப்பம் கோரல்

துணுக்காய் கல்வி வலயத்தில் கணிதம், உடற்கல்வி, முறைசாராக் கல்வி ஆகிய பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து ஆசிரிய சேவையை மேற்கொள்பவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் . ஆகக்குறைந்தது 3 வருடங்கள் சேவையாற்றக்கூடியவராகவும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் I சேவையில் பணியாற்றியிருக்கக் கூடியவராக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2-I இருந்து கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியராக இருக்க வேண்டும் .

விண்ணப்பங்கள் அனைத்தும் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் துணுக்காய் கல்வி வலயத்திற்கு கிடைக்ககூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ட.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார். (10-422)

## வவுனியாவில் பன்றிகள் அட்டகாசம்

வவுனியாவில் ஏற்பட்டுள்ள வறட்சியை அடுத்து காட்டுப் பன்றிகள் தோட்டங்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இரவு வேளைகளில் தோட்டங்கள் வயல்களுக்குள் புகும் பன்றிகள் பயிர்களை நாசம்செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக

பம்பை மடு, முதலியார் குளம், இராசேந்திரகுளம், ரம்பைக்குளம், வாரிக்குட்டியூர், பண்டாரிக்குளம் உட்பட பல கிராமங்களில் பன்றிகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

நகர சபை கழிவகற்றலுக்காக வீட்டின் முன்னால் சேகரித்து வைத்திருக்கும் கழிவுப் பொருள்களை பன்றிகள் கிளறி விடுவதனால் வீதியோரங்கள் அசுத்தமாக [illegible] ஏற்பட்டுள்ளது. (10-422)

# செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வுக்கு ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்து சுகாதாரப்பாடத்துக்கு பொறுப்பான ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ட. மாலினி வெனிற்றன் கேட்டுள்ளார்.

(10-422)

# வற்றியது கனகராயன் குளம்

நெடுங்கேணி, செப்.5

கனகராயன் குளம் கடும் வறட்சி காரணமாக முற்றாக நீர் வற்றியுள்ளது. அத்துடன் இந்தப் பகுதிகளில் காணப்படும் வீட்டுக் கிணறுகளும் வற்றியுள்ளது.கால் நடைகள் குடிநீருக்காக அலைந்து திரிவதோடு மக்களும் குடி நீரைப் பெறுவதற்காக தூர இடங்களை நோக்கிச் சென்று பெரும் சிரமங்களை எதிர் கொள்ளுகின்றனர்.

கனகராயன் குளத்தின் கீழ் விதைக்கப்பட்ட 40 ஏக்கர் நிலத்தில் 20 ஏக்கர் வரையான நெற்காணிகள் முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

30 சதுர ஏக்கர் நிலப்பரப்பை நீரேந்து பிரதேசமாகக் கொண்ட இந்தக் குளம் வருடா வருடம் 320 ஏக்கரில் நெற் செய்கை செய்வதற்கு நீர் வழங்கக் கூடிய கொள்ளவை கொண்டது. இதன்படி 13அடி ஆழம் கொண்டதாக நீரை சேமித்து வழங்கக்கூடியது.

(10-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் எச்.பி.எல். ஆரம்பம்

## றோயல் லீடர்ஸ் , சுப்பர் கிங்ஸ் அணிகள் அபாரம்

**யாழ். மாவட்டத்தின் முதலாவது எச்.பி.எல். கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி, உள்ளூர்க் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடர்களுக்காக இடைநிறுத்தி வைக் கப்பட்டிருந்தது. தற்போது உள்ளூர் தொடர்கள் நிறைவு பெற்றுவிட்டதால் மீண்டும் எச்.பி.எல். போட்டிகள் ஆரம் பமாகியுள்ளன.**

பண்டத்தரிப்பு, செப் 5

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து "உதயனி"ன் ஊடக அனுசரணையுடன் நடத்திவரும் யாழ். மாவட்டத்தின் முதலாவது எச்.பி.எல். கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி, உள்ளூர்க் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடர்களுக்காக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது உள்ளூர் தொடர்கள் நிறைவு பெற்றுவிட்டதால் மீண்டும் எச்.பி.எல். போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

எச்.பி.எல். தொடரின் ஆட்டங்கள் அண்மையில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது போட்டியில் ஜப்னா லயன்ஸ் அணியும் றோயல் லீடர்ஸ் அணியும் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே றோயல் லீடர்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. போட்டியின் முதலாவது சுற்றை 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் றோயல் லீடர்ஸ் அணி கைப்பற்றியது. தொடர்ந்து இரண்டாவது சுற்றும் பலத்த போராட்டத்துக்கு மத்தியில் 28:26 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் றோயல் லீடர்ஸ் அணி வசமானது. எனினும் மூன்றாவது சுற்றில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜப்னா லயன்ஸ் அணியினர் மூன்றாம் சுற்றை 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக்கொண்டனர். ஆனாலும் நான்காம் சுற்றில் மீண்டும் எழுச்சி பெற்றனர் றோயல் லீடர்ஸ் அணியினர். 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் நான்காம் சுற்றை றோயல் லீடர்ஸ் கைப்பற்றிக் கொள்ள 3:1 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் றோயல் லீடர்ஸ் அணி ஆட்டத்தில் வெற்றிவாகை சூடியது.

இரண்டாவது போட்டியில் சுப்பர் கிங்ஸ் அணியும் யுத்ஸ்ரார் அணியும் மோதிக்கொண்டன. இந்த போட்டி அதிக நேரம் நடைபெற்றதோடு மிகவும் விறுவிறுப்பானதாகவும் அமைந்திருந்தது. போட்டியின் முதலாவது சுற்றை யுத் ஸ்ரார் அணி 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக் கொண்டாலும் அதன் பின்னர் தம்மை சுதாரித்துக் கொண்ட சுப்பர் கிங்ஸ் அணியினர் ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

போட்டியின் இரண்டாவது சுற்று 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும், மூன்றாம் சுற்று 25:16 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும் சுப்பர் கிங்ஸ் அணியினர் வசமானது. எனினும் நான்காம் சுற்றை மீண்டும் யுத் ஸ்ரார் அணி 25:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக்கொள்ள போட்டி விறுவிறுப்பான கட்டத்தை எட்டியது. தொடர்ந்து தீர்க்கமானதும் வெற்றிதோல்வியைத் தீர்மானிக்க வல்லதுமான ஐந்தாவது சுற்று மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்தது. இதில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தன. ஆனாலும் இறுதி நேரத்தில் அடுத்தடுத்து இரு புள்ளிகளைப் பெற்ற சுப்பர் கிங்ஸ் அணி 15:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஐந்தாம் சுற்றை தன் வசமாக்கியது. இதனால் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் போட்டியில் சுப்பர் கிங்ஸ் அணி வெற்றியைச் சுவைத்தது.

(ந-130)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் எதிர் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம்

பி.ப. 4.30 மணிக்கு

சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் இமையாணன் விளையாட்டுக் கழகம்

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக், ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3 மணிக்கு

விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம். (ந-23)

## யங்கம்பன்ஸ் ஆக்ரோஷத்தில் வீழ்ந்தது உடுப்பிட்டி யுத் அணி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர் மாலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. ஆயினும் யங்கம்பன்ஸ் அணியின் ஆட்டத்துக்கு உடுப்பிட்டி யுத் அணியால் முடியவில்லை. இதனால் ஆட்ட நிறைவில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றியைத் தனதாக்கியது. (ந-23)

## சிவானந்தா வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள் சில



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு-

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியை, கரவெட்டி நவசக்தி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் அனல் பறக்கும் ஆட்டத்தின் முன்னால்இமையாணன் இளைஞர் அணியால் ஈடு கொடுக்க முடியவில்லை. சுலபமாக எதிரணியின் எல்லைக்குள் புகுந்து நவிண்டில் கலைமதி அணி வீரர்கள் கோல்களை அடித்தனர். தொடர்ந்தும் கலைமதி அணி கோல்களை அடிக்காவண்ணம் தடுப்பாட்டத்தில் இமையாணன் இளைஞர் அணி இறங்கியது. இதனால் அந்த அணியால் முன்னேறித் தாக்கி கோல்களைப் பெறமுடியவில்லை. ஆட்ட நிறைவில் நவிண்டில் கலைமதி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

(ந-23)

# நாமகள் கிண்ணம் ஹென்றிஸுக்கு

யாழ்ப்பாணம்,செப்.5

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இந்த இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் ஆரம்பத்தில் இருந்தே அதிரடி ஆட்டத்தில் இறங்கிய இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி அடுத்தடுத்து கோல்கள் அடித்து அசத்தியது. இதனால் ஆட்ட நிறைவில் [illegible] [illegible] வெற்றியீட்டியது.



நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெறவிருந்த 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மைதா[illegible]வில்லை. இதனால் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

தொடர் ஆட்டநாயகனாக நாவாந்துறை சென். மேரிஸ்விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஆ.யூட், ஆட்டநாயகனாக இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த செ. ஞானரூபன், சிறந்த கோல்காப்பாளாராக இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வாகீசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சுற்றுத் தொடரின் சிறந்த கழகமாக இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகமும், அனுபவவீரராக ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வெள்ளை என அழைக்கப்படும் தர்மகுல நாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ந-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையே கிண்ணம் வெல்லும்



## சங்கா தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு இலங்கை அணிக்குக் சாதகமாக காணப்படுவதாக இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககார தெரிவித்துள்ளார். பெரிய தொடர்களில் சிறப்பாகச் செயற்படும் இயல்பு காரணமாக இலங்கை அணியும் வெற்றிபெறக்கூடிய அணிகளுள் ஒன்றாகக் கருதப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மிகப்பெரிய தொடர்களில் இலங்கை அணி எப்போதும் சிறப்பாகச் செயற்பட்டு அதிக போட்டித்தன்மையுடன் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவித்த குமார் சங்ககார, மிகப்பெரிய தொடர்களில் அணியாக இணைந்து செயற்படுவதில் இலங்கை அணி எப்போதும் முன்னிலையில் காணப்பட்டதாகத் தெரிவித்தார். எப்போதும் இலங்கை அணி வீரர்கள் தங்கள் திறமைகளில் நம்பிக்கை வைத்து விளையாடினால் இலங்கை அணிக்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் அண்மைக்காலமாக ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக மாறி வருவது இலங்கை அணிக்குப் பாதமாக அமையாதா எனக் கேட்கப்பட்டமைக்கு, இலங்கை அணி முன்னைப் போல் சுழற்பந்து வீச்சைப் பிரதானமாக நம்பிக் காணப்படவில்லை எனத் தெரிவித்த குமார் சங்ககார, இலங்கை அணியில் தற்போது வேகப் பந்துவீச்சாளர்களே இலங்கை அணியின் பிரதான பந்துவீச்சாளர்களாக மாறியுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் சொந்த நாட்டில் ஆடுவது என்பது குறித்த நாட்டிற்குச் சாதகமான ஆடுகளங்களை உருவாக்குவது மாத்திரமல்ல எனத் தெரிவித்த குமார் சங்ககார, சொந்த நாட்டில் விளையாடும் உணர்வு. சொந்த நாட்டு மக்களின் ஆதரவும் அன்பும் போன்றவையும் முக்கியமானவை என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய காலகட்டத்தில் சொந்த அணிக்கு கிடைக்கும் ஆடுகளங்களில் சிறப்பாகச் செயற்படுவதே முக்கியமானது எனத் தெரிவித்த குமார் சங்ககார, சொந்த நாட்டில் உலக 'ரி-20' தொடரில் விளையாடுவது இலங்கைக்கு அதிக சாதகமானது எனத் தெரிவித்தார். (5)

## மாமனும் மருமகனும் வீழ்த்தினர் சச்சினை



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் சத சாதனை உட்பட இது வரை எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

ஆனால் சச்சின் தற்போது மாமா- மருமகனால் ஆட்டமிழக்கப்பட்ட ஒரே வீரர் என்ற வித்தியாசமான அனுபவத்தை பெற்றுள்ளார்.

பெங்களூரில் நடைபெற்றுவரும் நியூஸிலாந்துக்கெதிரான டெஸ்டில் டக் பிரேஸ்வெல் பந்தில் சச்சின் ஆட்டமிழந்தார். இவர் நியூசிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஜானின் சகோதரியின் மகன்.

ஜான், 1990 ஆம் ஆண்டில் நியூஸிலாந்து அணியில் இருந்தார். அப்போது கிறைஸ்ட்சர்ச்சில் நடைபெற்ற டெஸ்டில் சச்சினை, ஜான் ஆட்டமிழக்க செய்தார். தற்போது சுமார் 22 ஆண்டுகளுக்குப் பின்பு அவரது மருமகனும் நியூஸிலாந்து அணியில் பங்கேற்று சச்சினுக்குப் பந்து வீசி அவரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

1989 ஆம் ஆண்டில் சர்வதேச டெஸ்ட் போட்டியில் முதன்முறையாக பங்கேற்ற சச்சின் 23 ஆண்டுகளைக் கடந்து தற்போது வரை தொடர்ந்து விளையாடி வருவதே இதுபோன்ற ஆச்சரியமூட்டும் நிகழ்வுகளுக்கு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# தொடரை வென்றது ஆஸ்திரேலியா



ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3 ஆவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட தொடரையும் அந்த அணி 2-1 என்ற கணக்கில் வெற்றிகொண்டுள்ளது.

ஷார்ஜா மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது. மிகச்சிறந்த ஆரம்பமாக 129 ஓட்டங்களை முதலாவது இலக்குக்காகப் பகிர்ந்த பாகிஸ்தான் அணி சார்பாக மத்திய தர வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்படாததன் காரணமாக இன்னமும் அதிகமான ஓட்டங்களை பாகிஸ்தான் அணியால் பெற முடியாது போனது.



துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 78 ஓட்டங்களையும், நசீர் ஜம்ஷெத் 48 ஓட்டங்களையும், அஷார் அலி ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், அசத் சபீக் 27 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ராார்க் 51 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், மிற்சல் ஜோன்சன் 33 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

245 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 47 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது இலக்காக 44 ஓட்டங்களைப் பகிர்ந்த ஆஸ்திரேலிய அணி அதன் பின்னர் ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும், மைக்கல் ஹசி, கிளென் மக்ஸ்வெல் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன்ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் ஹசி 65 ஓட்டங்களையும், கிளென் மக்ஸ்வெல் 38 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய டேவிட் ஹசி 45 பந்துகளில் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயிட் அஜ்மல் 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அப்துர் ரெஹ்மான் 41 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜுனைட் கான் 42 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலிய அணியின் மைக்கல் ஹசியும், போட்டித் தொடரின் நாயகனாக ஆஸ்திரேலிய அணியின் மிற்சல் ஸ்ராார்க் உம் தெரிவாகினர். (5)

# அஜ்மலிடம் ஆட்டம் காண்கிறது ஆஸி.



பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மலின் பந்துக்கு எவ்வாறு எதிர்கொள்வது எனத் தெரியாமல் ஆஸ்திரேலிய அணி தடுமாறுவதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார். அத்தோடு சயிட் அஜ்மலுக்கு சிறப்பாக முகம் கொடுக்க ஆஸ்திரேலிய அணி தடுமாறுவது பாகிஸ்தான் அணிக்கு அதிக வெற்றி வாய்ப்புக்களை வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலியா அந்தத் தொடரில் முதலாவது ஆட்டத்தில் வெற்றியடைந்திருந்த போதிலும் இரண்டாவது ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்தது. இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி இரண்டாவதாகப் பந்து வீசும் போது அதிக பனி ஏற்பட்டதோடு, ஆஸ்திரேலியப் பந்து வீச்சாளர்கள் தடுமாறியிருந்தனர்.

ஆஸ்திரேலிய வீரர்கள் சயிட் அஜ்மலின் தூஸ்ராவைக் கணிக்க முடியாமலுள்ளனர் எனத் தெரிவித்த வசீம் அக்ரம், இந்த நிலை பந்துவீச்சாளரின் தரத்தை வெளிப்படுத்துவதாக உள்ளதாகத் தெரிவித்தார்.

இதுவரை 2 ஆட்டங்களில் பெரிதளவில் ஓட்டங்களை விட்டுக் கொடுக்காத சயிட் அஜ்மல், 7 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். இதற்கு ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் அஜ்மலைக் கணித்து ஆட முடியாததே காரணம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சொர்ணமலர் இராசமூர்த்தி



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் புத்தளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணமலர் இராசமூர்த்தி கடந்த (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் இராசமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆசை மற்றும் பாக்கியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், மதன்ராஜ் (டோகா), மனோராஜ் (கிராமிய வங்கி, புத்தளம்), வினோபா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2012) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தளம் தில்லையடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/44, அநுராதபுர வீதி,
புத்தளம்.

தகவல்
குடும்பத்தினர்.

---

# adv t@uthayan.com
# 0215671111

---

## சல்லிகள் விற்பனைக்கு

தரமான கருஞ் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு- 0775890730.

---

## Spoken English & Grammar

தடையின்றி ஆங்கிலம் பேச ஓர் அரிய வாய்ப்பு

A/L பரீட்சை எழுதியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள்

Sponser / Student visa வில் வெளிநாடு செல்வோர்,

அலுவலக பணியாளர்கள் அனைவருக்குமானது

| | | |
|---|---|---|
| 3 மாத பிரிவு | சனி & ஞாயிறு | 4pm to 5.30pm |
| 5 மாத பிரிவு | சனி & ஞாயிறு | 9am to 10am |

புதிய பிரிவுகள் ஆரம்பம் 14.09.2012 க்கு முன் பதிவு செய்பவர்களுக்கு DISCOUNT 14%

V-talk @ Kokkuvil 0777363797

---

## COLLEGE OF CHEMISTRY

பழம்றோட் கந்தர்மடம்

**Physics**

**A/L 2013 Day Class**

**07.09.2012 4.00pm**

**N.Kapilan B.sc**

---

## தேவை

- அச்சக பாவனைக்கு சிறிய கட்டர் தேவை.
- லவ்பேட்ஸ் விற்பனைக்குண்டு.

(22538)(3.14) **0755525405**

---

# CIMA @ MCS சாதனைச் சித்திகள்

Foundation Leval 100%

F.M(67%), F.O(80%),P.O(70%),E.O(66%)

Schol. UK Reg Free 15500/=

New Batches

Weekdays Wed 5th 9 AM (Fast track)

Week End Sun 9th 8 AM

SMS <your name> <schol. CIMA> to 0772395895

Supported By UNDP/JRRP
324,Palaly Road,
Parameswara Junction,
Jaffna.

---

# ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சி நெறி

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் 2-4 வயதிற்குள் தம் தாய் மொழியைப் பேசப் புழகுகின்றன. 2 வருடத்திற்குள் குழந்தைகள் ஒரு மொழியைப் பேசப் பழகுகையில், பெரியவர்களான உங்களால் இன்றுவரை ஏன் ஆங்கிலத்தைப் பேசப் பழக முடியவில்லை?

இலக்கண வழியில் ஆங்கிலத்தைப் படித்தமையே காரணமாகும்.

எமது பயிற்சி வகுப்புக்களில் தமிழ்தொடர்பற்ற ஒரு வழியில் (method) மனதை ஆங்கிலத்தில் மட்டும்சிந்திக்க வைத்து அதை மற்றைய மாணவர்களுடன் பேச விடுவதன் மூலம் மிக எளிதாகவே எல்லோராலும் ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆங்கிலம் மனதிற்கு இயல்பாக்கப்படுகிறது.

எமது இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும், இம்முறை A/L எடுத்த மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், தொழில் புரிவோர், O/L எடுக்கவுள்ளோர் மற்றும் 12 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் 09.09.2012 இற்கு முன் நேரடியாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

| சனி, ஞாயிறு பிரிவுகள் | | வாரநாள் பிரிவுகள்(திங்கள், புதன்) | |
|---|---|---|---|
| பிரிவு I- 08-10 | பிரிவு III- 01-03 | பிரிவு I- 09-11 | பிரிவு III- 03-05 |
| பிரிவு II- 10-12 | பிரிவு IV- 03-05 | பிரிவு II- 11-01 | |

பயிற்சி நெறி முடிவில் Diploma Certificate வழங்கப்படும்

SAAMSON ENGLISH (சி/3067)(9.14) 279, ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்ப்பாணம் TEL- 077 621 4567

---

## FRENCH LANGUAGE CENTRE
## FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புக்கள்

Easy Way to Learn French

French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, சர்வதேச பரீட்சைக்கு எமது நிறுவனத்தின் ஊடாக தோற்றி சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

France, Canada க்கு திருமணம் முடித்து செல்லவுள்ளோர், France க்கு செல்லவுள்ளோர், Canada க்கு Migrate பண்ண உள்ளோரும் கற்றுக்கொள்ளலாம்.

(எமது நிறுவனத்தில் French கற்பதற்கு ஆங்கில அறிவு அவசியமில்லை)

விரிவுரைகள் France இல் இருந்து ஆசிரியப் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரால் மேற்கொள்ளப்படுகிறது.

83, Palaly Road, Kantharmadam, Jaffna.

(பீசா உணவகம் அருகில் உள்ள லேனில்) ஆரம்பம் 08.09.2012 சனி 2pm

நெல்லியடி M.M.V வீதி, காளி கோயிலடி, நெல்லியடி.
ஆரம்பம் இன்று (05.09.2012 3.pm நெல்லியடி.
தொடர்புகளுக்கு:- 0779789456 (3.14)

---

# நியூசிலாந்து Student visa
# IELTS தேவையில்லை

- A/L போதுமானது.
- 25 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் 30 பேருக்கு மட்டுமே எம் மூலம் அனுமதி கிடைக்கும்.
- இரண்டு வருடத்தில் நிரந்தர குடியுரிமை பெற அருகதை, பகுதி நேர வேலை வாய்ப்பு.

வேறு ஒருவரின் கணக்கில் உள்ள பணத்தை வங்கி அனுசரணையாகக் காட்டக்கூடிய அரிய வாய்ப்பு. கல்லூரிக் கட்டணத்தைப் பாதுகாப்பாக, வங்கி ஆணையாக (Bank draft) மூலமாக செலுத்துதல்.

முந்துபவருக்கே முன்னுரிமை

*புதன் கிழமைகளில் விடுமுறை*

திசைகாட்டி பிறைவேற் லிமிட் டெட் (PV 82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 0212219016
0212219514
(22484)(3.14)

---

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் வழங்கும்

## Spoken English With Grammar 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning Course)

## Diploma In English 1 1/2 Months

- எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teachers' Panel & Individual Attention
- Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சையை யாழ் நகரில் முதல் முறையாக 2013 மேத மாதத்தில் நடாத்தப்படும் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

Batch 1 : 10.09.2012
Batch 2 : 12.09.2012
Batch 3 : 15.09.2012

மேலதிக விபரங்களும் இலவச ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

BCHS No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna

Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074

---

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES
## மாபெரும் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

- A/L பரீட்சை எழுதிவிட்டீர்களா?
- உங்களுடைய எதிர்காலம் எவ்வாறு அமையவேண்டும் என தீர்மானித்து விட்டீர்களா?
- உங்கள் எதிர்கால கற்றல் தொடர்பான திட்டம் என்ன?
- எதைப்படிப்பது? எதைத் தெரிவு செய்வது?
- எப்படிப் படிப்பது? எங்கே படிப்பது?
- அடிப்படை தகைமை என்ன? கட்டணம் என்ன?

கவலையை விடுங்கள்

**Birtish College of High Studies உம் British Council உம் இணைந்து நடாத்தும் இக் கருத்தரங்கில் மேற்படி கேள்விகளுக்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் துறைசார் நிபுணர்களினால் வழங்கப்படும்.**

### கருத்தரங்கில் ஆராயப்படும் விடயம்

1. உள்நாட்டில் எவ்வாறான கற்கைநெறிகளை தொடரலாம் University, Open University, Advanced Technical Institue, External - Degree program, Sri Lanka Law College, CIMA, ACCA, AAT, IT, ect,
2. UK, Canada, Australia ஆகிய நாடுகளுககான Student Visa ஏனைய, Settilment Visa, Migration Visa, Tourist Visa, Dependant Visa ஏனைய அனைத்து Visaக்களையும் பெற்றுக்கொள்வது தொடர்பான ஆலோசனைளும், வழிகாட்டல்களும் துறைசார் சட்டத்தரணிகளால் வழங்கப்படும்.
3. சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆங்கில கற்கை நெறிகளை எவ்வாறு தொடரலாம் என்பது பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படும். (A1, B1, IELTS)

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 08.09.2012 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9.00 மணி

*இக்கருத்தரங்கில் அனைவரும் பங்குபற்றி உங்கள் வாழ்க்கையினை வளமுள்ளதாக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

மேலதிக தொடர்புகளுக்கு:

**British College of Higher Studies**

No. 15, Sirampiyady Lane, Off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

---

# Post A/L Special Offer

## DIPlOMAS & HIGHER DIPLOMAS

- DiTEC — Diploma in Information Technology
- DiCA — Diploma in Computerized Accounting
- DiBM — Diploma in Business management
- DiSE — Diploma in Software Engineering
- DiWE — Diploma in Web Engineering
- DiE — Diploma in English

HOTLINE 077 309 9 308

Register for Degree & Diplomas

**FREE**

Laptops

Android S7 Tab

Pendrives

HSDPA Dongle

*Shaping Lives.... Creating Future*

New batches
05 Sept 2012
08 Sept 2012 @ 9.00 am

ESOFT — The Leader in Professional ICT Education

ESOFT Computer Studies (Pvt)Ltd.
17/1, Brown Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk

---

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவன் என்னவாக இருக்கிறான் என்பதைக் கூறுவது உடல் நூல்.
-ஜார்ஜ் கின்லேசன்-

# புதன் பொய்கை A

உதயன் | 05 செப்ரெம்பர் 2012 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு


# மாணவர்களின் கல்வி உரிமை மீறப்படுகிறதா?


ச.சுப்பிரமணியம்
ஒய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்




மக்களின் சிந்தனையில், செயலில், உளப்பாங்கில் மாற்றங்களை ஏற்படுத்தும் சுற்றாடலின் தாக்கமே கல்வி எனப் பொதுவாக வரைவிலக்கணம் கூறலாம்.

"சிறுவர் ஒவ்வொருவரும் தாம் வாழும் சமூகத்துடன் இசைவுபட்டு வாழ்வதற்கு ஏற்ற பூரண மனிதனாவதற்குரிய அடிப்படைக் கல்வியைப் பாரபட்சமின்றி இலவசமாகப் பெறும் உரித்துடையவர்கள்." எனச் சிறுவர் உரிமைச் சாசனம் கூறுகின்றது. இதே போன்று பல்வேறு சிறுவர் உரிமைகளை ஏற்று சிறுவர் உரிமைச் சாசனத்தில் ஒப்பமிட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று. 1990 செப்ரெம்பர் 02 ஆம் திகதி ஒப்பமிடப்பட்டது. அதனடிப்படையில் இச் சாசனத்தில் கூறப்பட்ட அம்சங்களை உள்ளடக்கி இலங்கையில் அரசமைப்புச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. கல்விக் கொள்கைகளும் வகுக்கப்பட்டன.

### பொது நோக்கங்கள்

மக்களின் சிந்தனையில், செயலில், உளப்பாங்கில் மாற்றங்களை ஏற்படுத்தும் சுற்றாடலின் தாக்கமே கல்வி எனப் பொதுவாக வரைவிலக்கணம் கூறலாம். கல்வி பல அளவைப் பாடுடையதாயினும், மூன்று முக்கிய அம்சங்கள் (இலக்குகள் ) அங்கு இடம்பெறவேண்டும்.

1. அறிதலாட்சி (புலமை) மெய்மையானவை தத்துவார்த்தமானவை.
2. உளவியக்க ஆட்சி (திறன்) உடல் சார்ந்தவை புத்திசார்ந்தவை.
3. எழுச்சி ஆட்சி (மனப்பாங்கு) தனிப்பட்ட, சமூக ஒழுக்க, சமய அடிப்படையிலானவை. கல்வியின் பொது நோக்கங்கள் பலவாகக் கூறப்படுகின்ற போதும் முக்கியமாக,

1.சமுதாயத்தால் விரும்பப்படும் நல்ல தன்மைகளையும், புத்திசார்ந்த திறன்களையும் சிறந்த பண்புகளுடன் நன்கிசைந்த ஆளுமையையும் வளர்த்தல்.

இதனைப் பின்வருமாறும் குறிப்பிடுவர்.

ஒவ்வொருவரினதும் தனியாற்றல்களையும் வளர்த்துச் சமூக வாழ்வுக்கேற்ற பூரண மனிதனாக்கல் அல்லது சமூக வழிப்படுத்தல்.

### பிரத்தியேக நோக்கங்கள்

1.தனி மனிதனின் திறமைகளைப் பூரணமாக வளர்த்தலும், சகலருக்கும் கல்வியில் சம வாய்ப்புகள் கொடுத்தலும்

2. துரிதமாக மாறிக் கொண்டிருக்கும் உலகில் நின்று தாக்குப் பிடிக்கக்கூடிய செயலடிப்படையிலானதொரு கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை அமைத்தல்.

3.தமது கலை கலாசார பாரம்பரியங்களை மதிக்கவும், சமூகங்களுக்கிடையிலான அன்னியோன்னியத்தையும், உறவையும், பேணவும் தக்க பண்பாடுகளை வளர்த்தல்

4.தன்னடக்கத்தையும், ஒழுக்கத்தையும் பேணவும், தலைமை தாங்கும் தகைமைகளை வளர்க்கவும் உதவுதல்

5.நெருக்கமான சனசமூக உறவுகளைப் பேணி வளர்ப்பதில் ஆர்வமூட்டும் தந்திரோபாயங்களை ஊக்குவித்தல்.

### தேசிய நோக்கங்கள்

1.தேசிய அபிலாசைகளுக்கு இசைவாக மக்களை ஊக்குவித்தல்

2.நாட்டில் எதிர்கால வேலை வாய்ப்புகளுக்குப் பொருத்தமான மனித சக்தியை உருவாக்கல்

3.நாட்டின் கற்றறிந்தோர் வீதாசாரத்தை உயர்த்துதல்

4. கல்வியில் சம வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாயத்தில் தர்மத்தைப் பேணுதல்

5. தமது நாட்டு மக்கள் மீதும், நாட்டின் மீதும் பற்றுதலையும், ஒப்படைப்பையும் வளர்த்தல்

### கல்வி அமைச்சின் நோக்கங்கள்

1.தேசிய அபிவிருத்தியில் ஈடுபாடும், நல்ல குடிமகனுக்குரிய குணாதிசயங்களும், பொருந்தப்பெற்ற ஆத்மீக வளர்ச்சிக்கு உதவுதல்

2.யாவருக்கும் முறைசார்ந்த, முறைசாராக் கல்வியை வாழ்நாள் முழுவதும் ஊக்குதல்

3. உடல் ஒழுக்க சமூக பண்பாடு ஆகிய அனைத்துக்கும் உதவக்கூடிய பொருத்தமான கருத்துள்ள பாடவிதானங்களை ஏற்படுத்தல்

4.தொழில் திறமைகளைத் தொடர்ந்து வளர்ப்பதற்கு வேண்டிய அடிப்படைத் திறன்களை உள்ளடக்கிய உயர்கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.

ஆதாரம் : அதிபர் தரம் I, அதிபர் தரம் II இற்கான அதிபர் கைநூல் - வெளியீடு தேசிய கல்வி நிறுவகம்.

### மாகாண கல்விப்பணிமனைகளின் குறிக்கோள்கள்

1. நாட்டின் பல பாகங்களிலும், சமமான கல்வித் தரத்தை ஏற்படுத்தல்

2. பாடசாலைகளுக்கு வேண்டிய கட்டடாதிகளையும் பிற வசதிகளையும், ஆசிரியர்களையும் கொடுத்தல்

3. பாடசாலைகள் ஒழுங்காக முகாமைப்படுத்துவதைக் கண்காணித்தல்

4. சகல குழந்தைகளுக்கும், கல்வி கற்க வாய்ப்புகளை ஏற்படுத்தல்

5. பாடசாலைகளில் குறிப்பிட்டளவு பாடவிதானங்கள் போதிக்கப்படுவதைக் கண்காணித்தல்

6. சரியான மதிப்பீட்டு ஒழுங்குகளை ஏற்படுத்தல்

7.பாடசாலைகளில் சேமநல சேவைகளையும், ஆசிரியர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்துதல்

8. துணை வசதிகளையும், துணைப் பாடவிதான செயற்பாடுகளையும் ஏற்படுத்தல்

9. சமூகத்துடனான தொடர்புகளைப் பேணுதல்

### பாடசாலைகளின் நோக்கங்களும், அதிபர்களின் பங்கும்

1. மாணவர்கள் குழந்தைப் பருவத்தில் நல்ல முறையில் வழிப்படுத்தல் அவசியமாகையால் பாடசாலையில் அதிபர் பங்கு முக்கியமாகும். சிறுவயதிலிருந்து பிள்ளையின் ஆளுமையை வளர்க்க வேண்டியது அவசியமாகும். இதன் பொருட்டு அதிபரானவர்:-

1.சமுதாயத்தில் விரும்பப்படும், நற்பண்புகளையும் விழுமியங்களையும் கடைப்பிடித்தல்

2.வகுப்பறைகளில் கற்பித்தல் சிறந்த முறையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தல்

3. நாட்டுப் பற்றை ஊட்டி வளர்த்தல்

4. குழு முயற்சி சட்ட திட்டத்திற்கு அமைய ஒழுகும் பண்பு, ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்

5. தலைமைத்துவ பண்புகளைப் பேணி வளர்த்தல்

6. அறிவைப் பயன்படுத்த மாணவர்களிடையே திறமைகளை வளர்த்தல்

7. மாணவர் முறையாகக் கல்வி கற்பதைக் கண்காணித்தல்

8. மாணவர் மத்தியில் நல்ல ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பேணுதல்

9. தனிப்பட்ட மாணவரது வேறுபாடுகளுக்கு இடமளித்தல்

10. பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

11. தன்னடக்கக் கட்டுப்பாடுகளை வளர்த்துக் கொள்ள மாணவர்க்குதவுதல்

12.சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்க உதவுதல்.

மேற்கூறிய கல்விக் கட்டமைப்புகள் தமது பொறுப்புகளைச் சரிவரச் செய்யும்போது கல்விப் பெறுபேறானது கல்வி இலக்கை அடைவதாக இருக்கும். ஒவ்வொரு மாணவரும் கல்வி இலக்கை தரமாக அடைந்திருப்பர்.


ஆனால் இன்றைய கல்விப்பெறுபேறானது கல்வித் தரத்திலும் இலக்குகளை அடைவோரின் எண்ணிக்கையிலும் மிகக் குறைவானதாகவும் உள்ளது. கடந்த வருட க.பொ.த. சாதாரண தரப் பெறு பேறு குறைவானது எனப் பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு தரப்பினராலும் பெறுபேறு திருப்தியில்லையென்றே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கல்விப் பேறானது அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று நிலைகளிலும் மாணவரிடம் விருத்தி செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இன்றைய கற்பித்தல் முறைமை வெறும் அறிமுறை சார்ந்ததாகவே உள்ளது. மதிப்பீட்டுப் பொதுத் தேர்வானது; வெறும் அறிமுறை சார்ந்ததாகவும் மாணவரின் அறிதலாட்சியை மதிப்பிடுவதாகவும் உள்ளது.


இதனைக் கவனத்தில் கொண்ட பாடசாலை ஆசிரியர்கள் அறிமுறைப் பரீட்சைக்கு மாணவரைத் தயாரிக்கும் போக்கில் கற்பிப்பதும், பாடசாலை. அதிபர், ஆசிரியரை கல்வி இலக்குக்கு அமைய ஆசிரியர்கள் கற்பிப்பதை உறுதிப்படுத்தாது உள்ளதும் இன்றைய கல்வி வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளதெனலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியக்க வைக்கும் முப்பரிமாண ஓவியம்



இங்கு காணப்படும் முப்பரிமாண ஓவியமானது பென்சில் மற்றும் கார்பன் மட்டுமே பயன்படுத்தி வரையப்பட்டது

# தன்னம்பிக்கை இருந்தால் வெற்றி...




# உலகின் மிகப்பெரிய கடல் பூங்கா



ஆஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள கூக் தீவில் உலகின் மிகப்பெரிய கடல் பூங்கா உருவக்கப்பட்டுள்ளது பசுபிக் கடல் பிராந்தியத்தில் உள்ள இந்தப் பூங்கா 4 லட்சத்து 11 ஆயிரம் சதுர மைல் பரப்பளவு கொண்டது.

# பெரிய மரக்கறியைப் பார்த்ததுண்டா?



அன்றாட உணவிற்காக உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் பல்வேறு ஊட்டச்சத்துக்களை தன்னகத்தே கொண்டு மனிதனின் ஆரோக்கியத்தைப் பேணுகின்றன. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த மரக்கறிகள் உலகசாதனை. படைத்தால் எப்படி இருக்கும்? அசாதாரண அளவுகளில் உற்பத்தியாகி உலக சாதனை படைத்த மரக்கறிகளைப் படங்களில் காணலாம்.

# உலகின் மிக அபாயகரமான ஓடுதளங்கள்



# மாறாத வடுக்கள்

ஒளி கண்களை பறிக்கிறது
வானைப் பிளக்கும்
ஓசையால்
எண்ண அலைகள்
மூளையை
வேகமாக இயக்குகிறது
எறிகணை
ஏவப்பட்டாச்சு–இன்னும்
சில நொடிகள் தான் –யார்
உயிரை குடிக்கப்
போகிறதோ...?
இதயம் பட
படக்கிறது–இயல்பாய்
கைகள் காதுகளை
பொத்திக் கொள்கிறது
கண்களும் இறுக
மூடிக்கொள்கிறது
மூலையில்
முடங்கிவிட்டோம்
நிலம் பலமாக
அதிர்கிறது–ச்சே
பதுங்கு குழி
வெட்டவில்லை
மனதில் கேள்வியாய்
எழுகிறது
உடல் வியர்வையில்
நனைந்து விட்டது
ஸ்.... என்ற சத்தம்
காற்றுடன் பலமாக
கேட்கிறது –மீண்டும்
வானைப் பிளக்கிறது
பெரும் ஓசை
மெல்லிய குளிர் காற்று
மெல்லத் தழுவுகிறது
மெல்ல வெளிய எட்டிப்
பார்த்தால்!
கொட்டுகிறது
மழையா? எறிகணை
இல்லையா...?
போர் மழைதான்
ஓய்ந்தது–ஆனால்
போர் வடுக்கள்
மட்டும்–இன்னும்
ஓய்ந்து போய்விடவில்லை!

ஆக்கம்
கூ.கலையரசி, துணவி.

# உலகின் மிகச் சிறிய ஆமை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்




### சுக்கிர வளையமும் பலாபலன்களும் (தொடர்ச்சி)

2. சுக்கிர வளையம் துண்டு துண்டான ரேகைகளாலும் அமையப் பெறும். இது பலவீனத்தையும் மூர்ச்சை வியாதிக்கான ஆபத்தையும் குறிக்கும். கெட்ட வழியில் விழுந்து விடுவார்களாயின் அதனின்றும் மீட்சி




பெறுவது கஷ்டம்.

3. சுக்கிர வளையம் இரண்டு அல்லது மூன்று இரேகைகளால் ஆக்கப்படுகின்றது. தேகம் இரண்டு பங்கு பலப்பட்டிருக்குமென்பதை இது குறிக்கும்.

4. சுக்கிர வளையம் பல துண்டு பட்ட இரேகைகளால் ஆக்கப்பெற்றிருந்தால், மிக்க பலவீனத்தைக் குறிக்கும். இவ்வாறு பெண்களுக்கு இருக்குமாயின் ஆரோக்கியம் கெட்டும் நரம்புகள் பல வீனப்பட்டும் சுகமற்றவராயிருப்பர்.


புத்தி ஆயுள் ரேகைகள் நன்கு அமைந்திருந்தால், வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை பெறலாம். புத்தி ரேகையில் தீவு, புள்ளி, புள்ளடி அல்லது நட்சத்திரக் குறியிருப்பினும் உன்மத்த நிலைக்கான ஆபாயத்தைக் குறிக்கும்.

5. புத்தி இரேகை சந்திரமேட்டின் அடிவாரம்வரைக்கும் சென்று இறுதியில் நட்சத்திரம், புள்ளி, புள்ளடி அல்லது தீவு காணப்பட்டு சுக்கிர வளையமும் துண்டு ரேகைகளாயிருந்தால், பலவீனமும் அளவற்ற கற்பனையும், அதன் காரணமாய் உன்மத்த நிலையைக் கொடுக்கும். இத்தகையோர் குற்றம் செய்பவராயும் சொல்லுக்குக் கட்டுப்படாதவராயும் இருப்பர்.

6.சனிமேட்டில் ஒரு புள்ளடியும் துண்டு ரேகைகளான சுக்கிர வளையமும், சனி மேட்டுக்கு நேர் கீழே புத்திரேகையில் புள்ளி அல்லது தீவுக்குறியும், சந்திர மேட்டில் வலைக்குறியும், நகங்கள் குழல் பாய்ந்துமிருப்பின் பக்கவாதம் அல்லது பாரிச வாயு ஏற்படுமென்பதைக் குறிக்கும்.

7.துண்டுபட்ட விதிரேகை சுக்கிர வளையத்தைத் துளைத்தும், சூரிய ரேகையின் இறுதியில் ஒரு புள்ளியும் இருப்பின் கீர்த்தியை இழந்து விடுவர் என்பதைக் குறிக்கும்.

சுக்கிர வளையம் துண்டுபட்ட ரேகைகளால் ஆக்கப்படின் நரம்புகளின் பலவீனத்தையும் ஒற்றை ரேகை




பதிந்து காணப்படில் அளவுக்கு மிஞ்சிய ஆறாத் துயரத்தையும் குறிக்கும்.

8.சுக்கிர வளைய ரேகை பாச ரேகையில் குறுக்கிட்டும், கீழ் நோக்கிய சிலும்புகளுள்ள இருதய ரேகையும் இறுதியில் குற்றமுள்ள புத்திரேகையும் துண்டு ரேகையால் தடைப்பட்டு நின்று போன விதி ரேகையும் அமையப்பெறின், விவாகமாகி வாழ்வுகெட்டு வாழ்வில் தோல்வியடைந்து பெருந்துயரத்துக்கு உள்ளாவர்.

மிக்க கௌரவமும் செல்வாக்குமுள்ளவர் கைகளிலும் இந்தச் சுக்கிர வளையமிருப்பதுண்டு. புத்தியின் தீட்சணியத்தால் கஷ்டத்துக்குள்ளாவதில்லை. வாழ்க்கையும் கெடுவதில்லை.

சுக்கிர வளையமுள்ளவர், கை வெப்பமுள்ளதாயின் செல்வம் அதிகரிக்கும். சுகிகர ஆதிக்கத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவராவர். சுக்கிர வளைய முள்ளவர் சோதிடம் அல்லது ரேகை பார்ப்பதில் இஷ்டமுள்ளவராயிருக்கமாட்டார். ஒருக்கால் கை பார்க்க நேர்ந்தாலும் அதீதத் தன்மைகளை எடுத்துச் சொல்லுவது நலமாகாது.


சுக்கிரவளையமுள்ளவர் தமக்குச் செய்யும் நன்மை தீமைகளை எப்பொழுதும் மறவார். சிலருக்குச் சுக்கிர வளைய ரேகைகள் நான்கு மேடுகளிலும் சிதறுண்டு காணப்படும். இது எப்பொழுதும் கற்பனை செய்வதைக் குறிக்கும். இதர ரேகைகள் நன்கு அமையப் பெறின் வாழ்க்கையில் நல்ல பலனை அடைவர்.

(தொடரும்)

## பம்மாத்துக் காட்டுவது சரியில்லை

மக்களுக்கு சேவை செய்வணதே எல்லா அரச திணைக்களங்களினதும் குறிக்கோளாக இருக்கின்றது. இருந்தும் அந்தத் திணைக்களங்கள் மக்களுக்கான சேவைகளை எவ்வளவு தூரத்துக்கு அர்பணிப்புடன் வழங்குகின்றன என்பது கேள்விக்குறியே ?

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் மக்களுக்கான அன்றாட சேவைகளை வழங்குகின்ற இடங்களாக பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம் என்பனவே விளங்குகின்றன. இவற்றின் சேவை போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமாக இருக்கின்றது. ஆனாலும் இவர்கள் மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் பல பின்னடிப்புக்களைச் செய்கின்றனர். பொதுமக்கள் பிரதேச செயலரையோ அல்லது அரச அதிபரையோ சந்திப்பதற்கு பொதுமக்கள் தினமாக ஒவ்வொரு புதன் கிழமையுமே ஒதுக்கப்பட்டுள்ளது.




அவ்வாறானதொரு நிலையில் அன்றைய தினத்தில் கடமையில் இருக்க வேண்டியது சகல அரச ஊழியர்களதும் கடமையே. யாழ். மாவட்டத்தில் மட்டும் அரச ஊழியர்களுக்கு புதன் கிழமைகளில் நீல நிற உடை அணிய வேண்டும் என்று முன்னைய அரச அதிபர் கட்டாயப்படுத்தியிருந்தார். அதற்கு அவர் தெரிவித்த காரணம், புதன் கிழமைகளில் மக்கள் சந்திப்புகள் நடைபெறுகின்ற வேளையில் எந்தவொரு அரச உத்தியோகத்தரும் அலுவலகங்களை விட்டு வெளியேறக் கூடாது. அவ்வாறு வெளியேறி நடமாடினால் இலகுவாக கண்டு பிடிக்க முடியும் என்பதற்காகவே அதனை அறிமுகப்படுத்தியதாக தெரிவித்திருந்தார்.

ஆனால் கடந்த வாரம் யாழ். மாவட்ட அரச உயர் அதிகாரிகள் அனைவரும் புதன் கிழமை தமது கடமைகளில் இருக்கவில்லை. மலையகத்தில் விடுமுறை தினத்தில் நடத்தப்பட இருந்த 'கிரிக்கெட்' போட்டிக்குச் சென்று விட்டனர்.

கிரிக்கெட் போட்டி நடந்தது விடுமுறை தினத்தில். ஆனால் அதற்காக அரச அதிகாரிகள் எடுத்துக் கொண்டது இரண்டு தின விடுமுறைகள். அதுவும் புதன் கிழமை பகல் நேரத்திலேயே சென்றிருந்தனர்.

மக்கள் பணியாற்ற வேண்டிய நீங்கள் பந்தடிக்கக் கூடாதென்று இல்லை. அதற்காக மக்களின் வரிப் பணத்தை சம்பளமாகப் பெற்று விட்டு மக்களுக்கே பந்தடித்துக் காட்டுவது சரியில்லை. -நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயன் பத்திரிகையில் பெண்களுக்கான பகுதியாக ''திலகம்'' வெளிவருகின்றது. இந்தப் பகுதி தேவை தானா? பெண்கள் ஆண்களுக்கு நிகராக உயர்வடைந்து வருகின்ற நிலையில் பெண்களுக்கு என்று ஒரு பகுதி வெளிவருகின்றமை பெண் அடிமைத்தனத்தின் ஒரு வெளிப்பாடாகவே நான் கருதுகின்றேன்.

அவர்களின் தனித்துவத்தையும் தற்போதைய பெண்களின் மாற்றங்களையும் குறிப்பிடுகின்றமை பெண்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றது.

மேலும் உதயன் பத்திரிகையில் வெளிவருகின்ற அரசியல் கட்டுரைகள் நீண்ட வசனங்களைக் கொண்டதாகவும் கடினமான சொற்பிரயோகங்களைக் கொண்டும் அமைகின்றது. இதனை இலகுவில் புரிந்து கொள்ள முடியவில்லை. சாதாரண மொழிநடை கையாளப்பட்டால் இலகுவில் புரிந்து கொள்ள முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

அபிமன்யூ,
சுன்னாகம்.

★ ★ ★

உதயன் பத்திரிகையில் பெரும்பாலும் வெளிவரும் கட்டுரைகள் பல அரசியல் சம்பந்தப்பட்டவையாக மட்டுமே உள்ளன. குறிப்பாக மக்கள் சார்ந்த பிரச்சினைகள் [மீள்குடியேற்றம்] வேறு விடயங்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் வெளிவருவதில்லை.

மேலும் இன்றைய அவசர உலகில் பெரும்பாலான மக்கள் பத்திரிகை பார்ப்பதற்கென தனிப்பட்ட நேரம் ஒதுக்குவதில்லை. இதனால் தினமும் வரும் உதயன் பத்திரிகையில் ஒரு பக்கம் முழுவதும் வரும் கட்டுரைகள் அவசியமான ஒன்றாக அமையாது.

ஏனெனில் 5 நிமிடத்தில் பத்திரிகையை பார்த்து விட்டு செல்ல எண்ணுவோர் மத்தியில் ½ மணித்தியாலம் வாசிக்க வேண்டிய கட்டுரைகளை வாசகர்கள் விரும்பார்கள்.

வெளிநாடுகளில் விளம்பரத்துக்கென தனியாக இலவசப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இதேபோல் உதயனும் விளம்பரத்தை இலவசப் பத்திரிகையாக வெளியிடலாமே.

ப.ஐஸ்வரியா,
நெல்லியடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



3

# போதை வீழ்தலும் மீள்தலும்

போதைக்கு ஒருவன் அடிமையாக பல காரணங்கள் இருக்கலாம். தனி மனித குணாதிசயம் அதில் முக்கிய காரணி. மிக அதிக பிடிவாத குணமும், மனக் கட்டுப்பாடும் இல்லாதவர்கள் போதைக்கு அடிமையாவது அதிகம்.

பதின்ம வயதினரைப் பொறுத்த வரையில் அவர்கள் சார்ந்திருக்கும் சமூக அமைப்பும், நண்பர்கள் வட்டாரமும் அவர்களுடைய பாதையை நிர்ணயிக்கின்றன. பெற்றோரின் வழிகாட்டுதலும், முன்மாதிரிகையும் இந்தக் கால கட்டத்தில் அவசியத் தேவையாகின்றன.

தனிமை, மன இறுக்கம் போன்ற மன நிலை உடையவர்களுக்கு போதைப் பழக்கம் எளிதில் தொற்றிக் கொள்ளும். காரணம் அவர்கள் தங்களுடைய குறைபாடுகளை போதைகளால் சரி செய்து விடலாம் என தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

பெற்றோரோ, குடும்பத்தில் உள்ள மற்ற நபர்களோ போதைப் பழக்கம் உடையவர்களாய் இருந்தால் குழந்தைகளுக்கும் அந்த மனநிலையும், பழக்கமும் தொற்றிக் கொள்ள அதிக வாய்ப்பு இருக்கிறது.

போதைப் பழக்கம் தனி மனிதனைப் பாதிக்கும் விஷயம் என்று கருதி விடவும் முடியாது. இதனால் மற்றவர்களும் பாதிப்படையும் சூழல் உருவாகிறது.

ஒருவருடைய போதைப் பழக்கம் குடும்பத்தின் பொருளாதாரத்தையும், நிம்மதியையும், ஆனந்தத்தையும் ஒட்டு மொத்தமாய் அழித்து விடும் வாய்ப்பு உண்டு.அலுவலகத்தில் திறமை குறைதலும், அடிக்கடி விடுப்பு எடுக்கும் நிலையினால் நம்பிக்கை இழத்தலும், ஒரு கால கட்டத்தில் வேலையையும், புகழையும் இழக்கும் நிலையும் உருவாகலாம்.

மாணவர்களைப் பொறுத்தவரை தங்களுடைய முன்னேற்றமும், உடன் பயிலும் மாணவர்களின் முன்னேற்றமும் சிந்தனையும் மாறுபடும் வாய்ப்பும் உண்டு.

திருடுதல், ஏமாற்றுதல் போன்ற தீய, சமூக விரோத செயல்களுக்கு போதைப் பழக்கம் ஒருவனை இட்டுச் செல்லும் வாய்ப்பும் உள்ளதால், அது ஒரு சமூகத்தைப் பாதிக்கும் விஷயமாகவும் மாறி விடும் வாய்ப்பு உண்டு.

போதைகளின் பிடியில் சிக்கியவர்கள் பாலியல் தவறுகளுக்குள்ளும் சிக்கி நோய்களைப் பரப்பவோ, பெற்றுக் கொள்ளவோ, கலாசார சீரழிவிற்குக் காரணியாக மாறவோ அதிக வாய்ப்புகள் உள்ளன.

சில மருந்துகள் கூட போதை தரக்கூடியவை. அவற்றை சரியான மருத்துவச் சீட்டு இல்லாமல் விநியோகிப்பதைத் தடை செய்ய வேண்டும். கிராமப் புறங்களில் அரிஸ்டம் எனப்படும் பெண்களின் தாய்மைக் கால மருந்தை போதைக்காகப் பயன்படுத்தப் படும் பழக்கம் அதிகரித்து வருகிறது.

பத்து முதல், இருபத்திரெண்டு விழுக்காடு வரை சாலை விபத்துகளுக்கு குடித்து விட்டுக் காரோட்டுவதே காரணம் என NHTSA அறிக்கை தெரிவிக்கிறது.

போதைக்கு அடிமையானவர்கள் வெளி வருவது கடினம். ஆனால் முடியாதது அல்ல. பெரும்பாலும் போதைக்கு அடிமையானவர்கள் தானாய் முன் வந்து பரிசோதனைகளோ, மருத்துவமோ செய்யாதபோது உறவினர்கள், நண்பர்கள், சமூகம் முன்வந்து அவர்களுக்கு வழி காட்ட வேண்டும். இந்தியாவில் அலோபதி, ஹோமியோபதி, ஆயுர்வேதா, நேச்சுரோபதி, யோகா என அனைத்து வகையான மருத்துவ பயிற்சிகளும் போதையிலிருந்து விடுபட உதவுகின்றன.

விடுபட முடியவில்லையே எனும் குற்ற உணர்விலிருந்து முதலில் வெளி வர வேண்டும். சிறிது சிறிதாக சீரான விடுபடுதல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தயக்கமில்லாமல் மருத்துவரைச் சந்தித்து ஆலோசனைகளும், மருத்துவமும் பெற வேண்டும். பழைய போதை கும்பல் இருக்கும் திசை பார்த்து தலை வைத்துக் கூட படுக்கக் கூடாது.

போதையிலிருந்து விடுதலைக்காக பரவலாக மேற்கொள்ளப்படுவது விடுபடுதல் மருத்துவம் எனலாம். மருத்துவமனையில் சிறிது காலம் தங்கி மருத்துவரின் நேரடிக் கண்காணிப்பில் போதைப் பழக்கத்திலிருந்து சிறிது சிறிதாக விடுபட வைத்தல்.

இந்த முறையில் ஒரேயடியாக போதையை நிறுத்தாமல் அதன் அளவைக் குறைத்து பரிசோதிப்பார்கள். நாளடைவில் அவர்கள் முழுவதுமாக அதிலிருந்து விடுபடும் வாய்ப்புகள் உள்ளன.

போதையிலிருந்து விடுபடும் போது தூக்கமின்மை, குழப்பம், கோபம், எரிச்சல், வியர்த்துக் கொட்டுதல் உட்பட ஏராளமான பக்க விளைவுகள் தோன்றும். பெரும்பாலானவை மனம் சார்ந்த விளைவுகளே. இவற்றைப் புரிந்து கொண்டு ஒரு நல்ல சமூக, குடும்ப, நண்பர்கள் அமைப்புடன் இணைத்துக் கொள்ள வேண்டும்.

ஆலோசனை மையங்கள், குழுக்கள் மூலமாக மன மாற்றம் ஏற்படுத்துவது. இந்த முறையில் ஆன்மீகம் சார்ந்த அமைப்புகளும் செயல்படுகின்றன. மனதை கடவுள் பால் ஒருமுகப் படுத்துவதன் மூலமாக உலகியல் சார்ந்த போதைகளிலிருந்து விடுபடும் அறிவுரைகள் நிகழ்த்துகிறார்கள்.

இதனடிப்படையில் நடக்கும் பயிற்சிகளில் அமெரிக்காவின் பன்னிரண்டு நிலை முறை ஒன்று மிகவும் பிரபலம்.

■ [illegible]

# அவமானமும் அக்கறையீனமும்

■ ஓடுகாலி

அவள் படிப்பில் அந்த ஊருக்குள் கெட்டிக்காரி. வகுப்பில் முதல் ஐந்து பிள்ளைகளுக்குள் அவளும் ஒருத்தி. ஆனாலும் பதின்ம வயதை நெருங்கிவிட்டதால், கூச்ச சுபாவம் அதிகமாகவே அவளுக்கிருந்தது. அதிலும் பிறர் முன்னிலையில் தான் அவமானப்படுவதை அவளால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. தவிர்க்கமுடியாத காரணமொன்றால் அவள் அன்றைக்கு பாடசாலைக்குச் செல்லமுடியவில்லை.

அடுத்தநாள் தயங்கி தயங்கி வகுப்பறைக்குச் சென்றவளை வகுப்பாசிரியரின் சுட்டெரிக்கும் கண்களே வரவேற்றன.

''நேற்று ஏன் கிளாஸுக்கு வரேல?'' ஆசிரியரின் அதட்டலான தொனியில் பிறந்த கேள்விக்கு அவளால் எடுத்த எடுப்பிலேயே பதில் சொல்ல முடியவில்லை. பயத்தில் வார்த்தைகள் தொண்டைக்குழிக்குள்ளேயே சிக்கியிருந்தன.

''அது வந்து ரீச்சர்...'' என்று தொடங்கியவள் அந்த வார்த்தையை முடிக்க முடியாமல் பயத்தில் கண்ணீர் பெருக்கெடுக்க தவித்தாள். ஆனாலும் வகுப்பாசிரியை விடுவதாக இல்லை.

''உங்களுக்கெல்லாம் என்னத்துக்குப் படிப்பு? படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போறியள்? இப்பிடி ஒழுங்கில்லாமல் வந்து பள்ளிக்கூடத்தின்ர மானத்தை வாங்கிறத விட வராமலே வீட்டில நிக்கலாம்''. என்றவர், இன்னும் சில கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் அந்த மாணவியை இயலுமட்டும் உளரீதியாகக் காயப்படுத்தினார்.

அத்தோடு அவர் ஓய்ந்துவிடவில்லை. விஞ்ஞான பரிசோதனை கூடத்தில் அவளை வகுப்பில் உள்ள அத்தனைபேரும் பார்க்கும் வகையில் அந்தப் பாடம் முடியும்வரை முட்டுக்காலில் இருத்தினார். அவளுக்கு பெருத்த அவமானமாகிப் போய்விட்டது. கூடவே கால்களும் வலிக்கத் தொடங்கின. அவளின் கண்கள் ஆசிரியையிடம் இரக்கத்தை யாசித்து நின்றன. ஆசிரியை இன்னமும் தன் கோபத்தை கைவிடுவதாக இல்லை.

முட்டுக்காலில் இருந்தபடியே குனிந்து அழுகின்ற மாணவியைப் பார்த்து இரக்கத்துக்குப் பதிலாக இன்னமும் அவருக்கு சீற்றமே மேலோங்கியது. கையில் இருந்த தடியால் அவள் மேனியில் நாலைந்து அடிகள் கொடுத்த பின்னரே ஓரளவுக்கு இயல்பு நிலைக்கு ஆசிரியையால் வரமுடிந்தது.

அதற்கு அடுத்த நாள் அந்த மாணவி பாடசாலைக்கு வராமலே விட்டுவிட்டாள். அத்தனை மாணவர்கள் முன்னிலையிலும் அவமானப்படுத்தப்பட்டதுடன், அடிவாங்கிய வலியும் அவளை பாடசாலை நோக்கி நகரவிடாமல் கட்டிப் போட்டுவிட்டன. தாயும் பலமுறை அவளை பாடசாலைக்குப் போகும்படி வற்புறுத்தியும் அவள் அசைவதாக இல்லை.

''அவ்வளவு பிள்ளையளுக்கு முன்னாலையும், அதுவும் போய்ஸுக்கு முன்னால ரீச்சர் இப்படி அடிச்ச பிறகு என்னெண்டு பள்ளிக்கூடம் போறது?. எல்லாப் பிள்ளைகளும் நக்கல் அடிக்க நான் என்னெண்டு வகுப்பில இருக்கிறது?. நான் போக மாட்டன்''. அவளின் பிடிவாதம் நான்கைந்து மாதங்களுக்கு நீடித்தது. பாடசாலையோ, அவள் இடைவிலகியமைக்கு காரணமாக இருந்த ஆசிரியையோ, அதிபரோ அவளை மீளவும் பாடசாலைக்குள் இணைக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவே இல்லை. அவள் பாடசாலையால் கைவிடப்பட்ட குழந்தையானாள். அந்த வருடம் க.பொ.த சாதாரண தரத்துக்கு அவளது வகுப்பில் இருந்த எல்லா மாணவர்களுக்கும் விண்ணப்பம் அனுப்பிய பாடசாலை அவளுக்கு மட்டும் அனுப்பவில்லை. ''இனிமேல் அவள் ஒருபோதும் பாடசாலைப் பக்கமே வரமாட்டாள்''. என்ற முடிவே இடைவிலகிய மாணவிக்கு பாடசாலை விண்ணப்பம் அனுப்பாமைக்குக் காரணம்.

## கோணல் கோலங்கள்

அதன் பின்னர் அவளது நலனில் அக்கறை கொண்ட சிலர் எடுத்த முயற்சியின் பயனாக மீண்டும் அவள் பாடசாலையில் இணைக்கப் பட்டபோதும், பாடசாலை சார்பில் விண்ணப்பம் அனுப்பப்படாமையால் இந்த வருடம் அவளால் க.பொ.த சாதரணதரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது. இதனால் மீண்டும் மனம் உடைந்தவளாக இருண்ட முகத்துடனேயே பாடசாலைக்கு வந்து போகிறாள். ''இந்த முறை ஓ.எல்.எக்ஸாம் எடுக்காட்டி பரவாயில்லை. அவளை தையல் கிளாஸுக்கு அனுப்புவம்''. இதுவே அவள் பெற்றோரின் முடிவு. அவளும் தனக்கு அடுத்த வகுப்புக்காரரோடு சேர்ந்து அடுத்த வருடம் பரீட்சை எழுத தயங்குகிறாள். அவளது சுயகௌரவம் அடுத்த வருடம் தன்னைவிட வயது குறைந்தவர்களுடன் பரீட்சை எழுதுவதற்கு தடைபோடுகிறது. அவள் மீண்டும் இடைவிலகக் கூடும்.

இடைவிலகல்கள் பற்றி நிறையக் கதைகள் உண்டு. பிள்ளைகள் தாமாகவே இடைவிலகுவதை விடவும் இத்தகைய வகுப்பறை நெருக்கீடுகள் காரணமாக இடைவிலகும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பாடசாலையை விட்டு ஒரு மாணவனோ, மாணவியோ இடைவிலகினால் அவர்களை மீளவும் பாடசாலையில் இணைக்க வேண்டும் என்ற அக்கறை மாதச் சம்பளத்தை கையில் எடுக்கையில் கூட ஆசிரியர்களுக்கு ஏன் தோன்றுவதில்லை.

குடாநாட்டின் நகர்ப்புற கரையோர பாடசாலை ஒன்றின் குறித்த மாணவிக்கு நேர்ந்ததைப் போல, இடைவிலகிய பிள்ளைகளை கழித்துவிட்டு காரிய மாற்றுகின்ற தன்மையே மேலோங்கியுள்ளது. ஒரு பாடசாலையின் அக்கறையீனம் ஒரு மாணவியின் எதிர்காலத்தையே திசைமாற்றிவிட்டது. அவளைப்போல இன்னும் பல மாணவர்களின் எதிர்காலத்தை திசை திருப்பாமல் இனியாவது அக்கறையோடு செயற்பாடுவார்களா ஆசிரியர்கள்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் கல்விச் சிறப்புமலர் - 2012

மாணவர்களே! மாணவர்களே!! மாணவர்களே!!!

# உங்கள் எதிர்காலத்திற்கான ஓர் சாதுரியமான முதலீடு

**What Next After A/L**










உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தர வல்ல சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறிகளில் உங்களை இணைத்து உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளுங்கள்

## கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம், குடிசார் பொறியியல், கணிய அளவையியல், வர்த்தக முகாமைத்துவம் ஆகிய துறைகளிலே பிரித்தானிய உயர்கல்வி

கல்வியாண்டு 2012 September மாதத்திற்குரிய முழு நேர ,பகுதி நேர கற்கை நெறிகளுக்கான பதிவுகள் ஆரம்பம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 14.09.2012 காலை 10.00 மணி**

### DEPARTMENT OF COMPUTING

- Higher National Diploma in Computing - Edexcel, UK
- Certificate in IT - BCS, UK
- Diploma in IT - BCS, UK
- Post Graduate Diploma in IT - BCS, UK

### DEPARTMENT OF ENGINEERING


- Higher National Diploma in Civil Engineering - Edexcel, UK
- Higher National Diploma in Quantity Surveying - Edexcel, UK

### DEPARTMENT OF MANAGEMENT

- Higher National Diploma in Business (Management) - Edexcel, UK
- Higher National Diploma in Business (HRM) - Edexcel, UK
- Introductory Certificate in Marketing - CIM, UK
- Professional Diploma in Marketing - CIM, UK
- Preliminary Certificate in Marketing - SLIM, SL
- Professional Diploma in Marketing - SLIM, SL



பட்டதாரி ஆக வேண்டும் என்ற உங்கள் கனவை நனவாக்கி தருகின்றது IIS




பலநூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக் கொள்ளுங்கள்

**கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்**

# IIS CITY CAMPUS

200, சிவன் பண்ணை வீதி, (வைத்தீஸ்வராச் சந்தி) யாழ்ப்பாணம்
T.P : 021 222 8060 , FAX : 021 222 6933
WEB : iis.edu.lk, E-Mail : info@iis.edu.lk

மாணவர்களே!!!

**September 2012** பிரிவிலே குறிப்பிட்ட **HND** கற்கை நெறிகளுக்கு தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்களுக்கு **TOSHIBA *i3* Laptop** கணனி ஒன்றினை **IIS** பரிசாக வழங்குகின்றது. இது வரை எந்த நிறுவனமும் சிந்திக்காத வழங்காத இச்சலுகை இப்பிரிவிற்கு மட்டுமே.

# IIS COMPUTER COURSES

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 1 : 05 - 09 - 2012
பிரிவு 11 : 14 - 09 - 2012
பிரிவு 111 : 15 - 09 - 2012
காலை 10.00 மணி

## Certificate Courses

| | | |
|---|---|---|
